விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மாங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-6436)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 05 ஞாயிற்றுக்கிழமை (20.11.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 337

# தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நாடு சொந்தமல்ல!

## கடும்போக்கு அமைப்புக்களுடன் பொது பல சேனா கண்டனப் பேரணி

(கொழும்பு)

சிங்கள பௌத்தர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணாவிட்டால் நாட்டில் மோசமான வன்முறைகள் வெடிக்கும் என பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சிங்கள பௌத்த கடும்போக்கு அமைப்புக்கள் அனைத்தையும் இணைத்துக்கொண்டு நேற்று கண்டியில் கண்டனப் பேரணியொன்றை நடத்திய ஞானசார தேரர் தமி

15 ஆம் பக்கம் பார்க்க....



## நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக

# சுமணரத்தின தேரரை உசுப்பிவிட்டவர் மகிந்த!

## அமைச்சர் மனோ கணேசன் குற்றச்சாட்டு

# இன்றும் நாளையும் கடும் மழை நீடிக்கும்

## வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலை காரணமாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் நேற்றைய தினம் தொடர்ச்சியான கடும் மழை பெய்துள்ள நிலையில் இன்றும் நாளையும் இதேநிலைமையே நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வங்காள விரிகுடாவில்ஏற்பட்டுள்ள

04 ஆம் பக்கம் பார்க்க....

# ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு!

# அமைச்சர் மனோ கணேசன் குற்றச்சாட்டு



(கொழும்பு)

மட்டக்களப்பு மங்களாராமய விகாராதிபதி சும ணரத்தின தேரர் எப்போதுமே ஒரு குழப்பக்காரர் தான். அவர் புதிதாக குழப்பம் செய்யவில்லை. அவரை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே சந்தித்து தனது அரசியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள உசுப்பி விட்டுள்ளார் என அமைச்சர் மனோ கணேசன் தகவல் வெளியிட்டுள்ளார்.

(15-ம் பக்கம் பார்க்க)

# ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு!

(கொழும்பு)

மொழிப் பிரச்சினைகளுக்குள் மாத் திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த தமி ழர்களின் போராட்டத்திற்கு உரிய தீர்வினை வழங்காமையின் கார ணமாகவே பிரச்சினைகள் நீடிக்கப் பட்டன எனத் தெரிவித்த சபை முத ல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல,

இவ்வாறான நிலையில் தேசிய

15 ஆம் பக்கம் பார்க்க....

**"கவுண்ட்டவுண்" ஆரம்பம்**



கம்பவாரிதி இ.ஜெயராஜின் கட்டுரை உள்ளே...

## இராணுவச் சூழ்ச்சி அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

நாடு தற்பொழுது எதிர்கொண்டி ருக்கும் நிலைமையை பார்க்கும் போது இராணுவ சதிப்புரட்சியொ ன்று ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதாக முன்னாள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலை மையிலான கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன எச்சரித்துள்ளார்.

16 ஆம் பக்கம் பார்க்க....

## புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கான

# ஆறு உப குழுக்களின் அறிக்கைகளும் அரசியல் சாசன சபையிடம் கையளிப்பு

(கொழும்பு)

புதிய அரசியல் யாப்பைத் தயா ரிப்பதற்கான அரசியல் சாசன பேர வையினால் நியமிக்கப்பட்ட ஆறு உபகுழுக்களினால் தயாரிக்கப்பட்ட ஆறு அறிக்கைகளும் நேற்று அரசி யல் சாசன சபையிடம் கையளிக்கப் பட்டுள்ளன.

அரசியல் சாசன பேரவையின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வினாலேயே இந்த உபகுழுக்களி னால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அரசியல் சாசன பேரவை சபா நாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்றுக்காலை நாடாளுமன்றக் கட் டடத் தொகுதியில் கூடிய போதே, அரசியல் சாசன உப குழுக்களினால தயாரிக்கப்பட்ட ஆறு அறிக்கை ளும் பிரதமரினால் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

அடிப்படை உரிமைகள் தொடர் பான உப குழு, நீதித்துறை தொடர்

16 ஆம் பக்கம் பார்க்க....

## வெளிநாடு சென்ற இளைஞன் மரணம்



(கரணவாய்)

வெளிநாட்டிற்கு சென்ற இளை ஞர் ஒருவர் சடலமாக வீடுவந்த சோக

15 ஆம் பக்கம் பார்க்க....

# தரம் 5 மாணவர்களுக்கு அதிகளவான சுமை திணிப்பு

## கல்விமுறை மாற்றப்படவேண்டும் - விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

கூட்டங்களிலும் பொதுமக்கள் ஒன்றுகூடலிலும் நாம் மேடையில் பேசுவது கைதட்டல்களுக்காகவோ தற்பெருமைக்காகவோ அல்லது அடுத்த வருடம் தேர்தலில் வெற்றி பெறுவதற்கோ அல்ல. எமது பேச்சு க்கள் மக்களிடையே சென்று நல்லெ

15 ஆம் பக்கம் பார்க்க....

## மாவீரர் வாரம் நாளை ஆரம்பம்

# விடுதலைக்காக போராடி உயிர்நீத்த எம்மவர்களை நாம் நினைவு கூருவோம்

(யாழ்ப்பாணம்)

தமிழர்களது விடுதலைக்காக போராடி உயிர்நீத்த மாவீரர்களை அனைத்து தமிழ் மக்களும் நினைவு கூர வேண்டும் என கோரிக்கைவி டுத்துள்ள வடமாகாணசபை உறுப் பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மாவீ ரர் தினத்தை கொண்டாடுவதென் பது எமது உரிமை எனவும் இதனை யாராலும் தடுக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவி யலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவிடயத்தை தெரி வித்திருந்தார். இந்நிலையில் இது விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

தமிழ் மக்களின் விடிவிற்காக வும் விடுதலைக்காகவும் ஆயுதப்

15 ஆம் பக்கம் பார்க்க....

# சொகுசு பேருந்து விபத்து



(மல்லாவி)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் வந்த தனியாருக்கு சொந்தமான சொகுசு பேருந்து ஒன்று நேற்றுக் காலை 5.45 மணியளவில் வவுனியா புளியங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் வேகக்கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகி விபத்திற்குள்ளாகியது.

இச்சம்பவத்தில் பேருந்து பகுதியளவில் சேதமடைந்ததுடன் தெய்வாதீனமாக பேருந்தில் பயணித்த பயணிகள் எவருக்கும் உயிரிழப்புக்களோ காயங்களோ ஏற்படவில்லை.

மேற்படி விபத்திற்கு சாரதியின் கவனயீனமே காரணம் என முதற்கட்ட விசாரணைகளில் கூறப்பட்டுள்ள நிலையில், இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-15)


**உடற்பருமன் கொண்டோருக்கும் உடல் எடை குறைவானோருக்கும் ஓர் அற்புதமான செய்தி**

ஆண், பெண் இருபாலாருக்கும் உகந்தது. 2 வாரங்களில் நல்ல அழகான மேனியுடன் திகழ ஆயுள்வேத கேர்பல் ஔடதம், பால்மா, குளிசை, டொனிக், கிறீம்.

**உடல் பருமன் கொண்டோருக்கு**

**விலை 3500/=, 5500/=, 9000/=**

உடல் எடை குறைத்தல், ஊளைச்சதை, மார்பு, கை, கால், வயிறு குறைத்தல் வயிற்றுக்கோளாறு, நாட்பட்ட அஜீரணம், மலச்சிக்கல் அனைத்துக்குமான ஆயுள்வேத மருந்து விற்பனைக்கு உண்டு.

**ஆச்சரியம் வயிறு, மார்பு 10 நாள்களில் குறைக்கும் கிறீம் எங்களிடம் உண்டு.**

**உடல் எடை குறைவானோருக்கு**

**விலை 3500/=, 5500/=, (24000/=, 3 மாதத்திற்குரியது.)**

உடல் எடை கூட்டுதல், ஒட்டிய கன்னங்கள் குண்டுக் கன்னங்களாக மாற்ற பலகீனம், கணச்சூடு, எதைச்சாப்பிட்டாலும் உடம்பு தேறுகிறதேயில்லை என்கிறவர்கள், மார்பு கூட்டுதல் அனைத்துக்குமான ஆயுள்வேத மருந்து விற்பனைக்கு உண்டு. மேலும் கறுப்பு, கண்கருவளையம், உதட்டு கறுப்பு, பருக்கள், வடுக்கள், காயங்கள், கருந்திட்டுக்கள், கரும்புள்ளிகள் நீக்கும் கிறீம் விற்பனைக்கு உண்டு. தேவையற்ற ரோமம், முகம், உடம்பு பகுதியில் உள்ள காய்கள் அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு. **(விலை 3500/=, 5500/=)** (6651)

தொடர்புகளுக்கு : 077 210 6155 221, நாவலர் றோட் (பிறவுண்றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# பிக்கப் தடம்புரள்வு

## இருவர் காயம்

(பரந்தன்)

நேற்றுக் காலை 9 மணிக்கு முகமாலை ஏ9 வீதியில் கலோரஸ்ட் கண்ணிவெடி அகற்றும் பிரிவு அலுவலகத்துக்கு முன்னால் வேக



கட்டுப்பாட்டை இழந்த பிக்கப் வாகனமொன்று தடம்புரண்டுள்ளது.

இதில் சாரதி உட்பட இருவர் காயம் அடைந்த நிலையில் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த விபத்து மழை காரணமாக வாகனத்தினை தடுப்பணையால் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வர முற்பட்டவேள்ள வேகக்கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டிருக்கலாம் என சந்தேகிக்கும் பளைப் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (செ-312)

# சில இடங்களில் இன்று மின்வெட்டு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலை காரணமாக மின் விநியோக முறை கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணியில் இருந்து மாலை 6 மணி வரை வடக்கின் சில பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

இதன் அடிப்படையில்,

**யாழ்ப்பாணம்**

இரும்புவேம்படி, மனோகரா, சங்களாவத்தை, தேவரையாளி, திக்கம், மட்டுவில், கல்வயல், முத்துமாரி அம்மன் கோவிலடி, சரசாலை வடக்கு, ஆகிய பிரதேசங்களிலும்,

**கிளிநொச்சியில்**

நாச்சிக்குடா, நாகபடுவான், முழங்கவில், குமுழமுனை, பல்லவராயன்கட்டு, வெள்ளாங்குளம், மூன்றாம்பிட்டி, கணேசபுரம், 651 ஆவது படைப்பிரிவு முகாம், 652 ஆவது அதிரடி படை முகாம், 2ஆவது அதிரடிப்படைமுகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் இடங்களிலும்,

**வவுனியா**

நெளுக்குளத்தில் இருந்து இராசேந்திரகுளம் வரைக்கும், மனனாரில் முருங்கனிலிருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசன திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப்படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி பாம் கவுஸ், மீன்பிடிசமாசம், தலைமன்னார் கடற்படை முகாம, சீனத்துறைமுகம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும் என மின சாரசபை அறிவித்துள்ளது. (செ)

## கண்ணீர் அஞ்சலி



**இராசையா இராயேஸ்வரன் (ராசன்)**

(கருடா தேநீரகம் நவீன சந்தை யாழ்ப்பாணம்)

நிறைகுடத்துப் பால் போல
நெஞ்சமெல்லாம் நிறைந்த ராசன் அண்ணை
ஆறாத துயரத்தைத் தந்து
அவசரமாய் போனதேனோ?
மூச்சு நிற்கும் காலம் வரை தங்கள்
முகம் தெரியும்
பேச்சினிலும் மூச்சினிலும் உங்கள்
பெயர் நிலைத்திருக்கும் உண்மையிது!

15.11.2016 அன்று சிவபதம் அடைந்த இராசையா இராயேஸ்வரன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அவரது மறைவை யொட்டி துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

(6653)

யாழ்ப்பாணம். தகவல் :- யாழ். நவீன சந்தை வர்த்தகர்கள்.

## வீட்டுக்கிருத்திய நிகழ்வு

தோற்றம் 24 06 1944



மறைவு 23 10 2016

**அமரர் திருமதி புனிதவதி பஞ்சலிங்கம் (மணி)**

**20.11.2016 ஞாயிற்றுக்கிழமை**

அன்னாரின் மரணச்சடங்கில் பங்குபற்றியவர்கள், தொலைபேசி மூலம்தொடர்புகொண்டவர்கள், பத்திரிகை மற்றும் கண்ணீர் அஞ்சலி அச்சிட்டோர், மலர்வளையம் வைத்து அனுதாபம் தெரிவித்தவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரராஜசேகரன் பாதம் பணிகின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

(6650)

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி,
இணுவில் மேற்கு, இணுவில்.

- குடும்பத்தினர்

# ஒற்றுமையை சீர்குலைக்க இடமளிக்கப் போவதில்லை

## பிரதமர் ரணில் உறுதி



(கொழும்பு)

**நாட்டில் மீண்டும் தேசிய ஒற்றுமையை சீர்குலைக்கும் வகையில் இன, மத முரண்பாடுகளை ஏற்படுத்த ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

30 வருட கொடூர யுத்தத்திற்குப் பின்னர் இனங்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள ஒற்றுமை மற்றும் சமாதானத்தை சீர்குலைக்க இடமளிக்க முடியாது என்று தெரிவித்துள்ள பிரதமர், இனங்களுக்கிடையிலான சமாதானத்தை குழப்ப முற்படுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற வரவு- செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் மீண்டும் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவித்து, இன வன்முறைகளை தூண்டும் சதித் திட்டங்கள் இடம்பெற்று வருவதாக சந்தேகம் எழுந்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிராக கடந்த சில நாட்களாக மிகவும் மோசமான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி வன்முறைகளை தூண்டிய சிங்கள மக்களின் பாதுகாவலன் என தன்னை அழைத்துக்கொண்டடான் பிரயசாத் என்ற நபரை, கூட்டு எதிரணியில் அங்கம் வகிக்கும் சிலரே தூண்டிவிட்டதாக குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இவ்வாறான நடவடிக்கைகளுக்கு இனியும் நாட்டில் இடமளிக்க முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்த பிரதமர், நாட்டில் தற்போது நிலவும் சுதந்திரத்தை பயன்படுத்தி இவ்வாறான செயல்களில் ஈடுபட அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

அதேவேளை சில ஊடகங்களும் பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டு வருவதாகவும் குற்றம்சாட்டிய பிரதமர், மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைவதற்காக சில ஊடகங்கள் இவ்வாறு நடந்துகொள்வதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதனால் ஊடகங்களின் செயற்பாடுகள் தொடர்பில் மறுபரிசீலனை செய்ய வேண்டிய தேவை எழுந்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

அதேவேளை 19 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமக்குரிய அதிகாரங்கள் சிலவற்றை நாடாளுமன்றத்திடம் ஒப்படைத்துள்ள போதிலும் நாட்டில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நிரந்தர சமாதானத்தை கட்டியெழுப்பும் மிகப் பெரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் டி.எஸ். சேனாநாயக்கவின் பின்னர், அனைவர் மத்தியிலும் இலங்கைப் பிரஜைகள் என்ற உணர்வை ஏற்படுத்தும் பொறுப்பையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை அணி வெற்றிபெறும் போதே நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் கொண்டாடி நிலைமாறி, இலங்கைப் பிரஜைகள் என்ற அடையாளத்தை ஏற்றுக்கொண்டு செயற்படக்கூடிய நிலைமையை உருவாக்குவதே ஜனாதிபதியினதும், அரசாங்கத்தினதும் பிரதான நோக்கம் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## நிரந்தரத் தீர்வு வேண்டி சிவவேள்விப்பெருவிழா

அளவெட்டி சைவசமய பாதுகாப்புப் பேரவையால் தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வு வேண்டி 6ஆவது வருட திருமுறைச் சிவவேள்விப் பெருவிழாவும் பன்னிரு திருமுறை, கந்தபுராணம்,திருப்புகழ் முற்றோதலும் சிவமூலமந்திரம் உச்சரித்தலும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை முதல் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை இரவுபகலாக திருச்சிற்றம்பலம் மடாலயம் கூட்டுறவாளர் வீதி அளவெட்டியில் அமைந்துள்ள ஆறுமுகநாவலர் திருமுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இறுதிநாள் திருமுறை (1008) போற்றி அருட்சுனையும் நடைபெறும். எனவே இப்பிரார்த்தனையில் கலந்து கொண்டுதிருமுறை ஓதுவதற்கும் வாசிப்பதற்கும் ஓதுவார்கள், சமய நிறுவனங்கள், சங்கீதஆசிரியர்கள், பாடசாலை, அறநெறிப்பாடசாலை மாணவர்கள், அந்தணர் ஒன்றியங்கள் அனைவரையும் இப்பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன் 077 226 2572 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## காணி ஆணையாளர் நீக்கம்

காணி ஆணையாளர் ஆர்.பி.ஆர். ராஜபக்ஷவை அப்பதவியிலிருந்து உடன் அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளதாக பிரதமர் காரியாலயம் அறிவித்துள்ளது.

இவரது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றாமை இதற்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் தொடர்பாக கிடைக்கப் பெற்றுள்ள தொடர் முறைப்பாடுகளை அடுத்து இவர் இப்பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இவர் தொடர்பிலான ஒழுக்காற்று விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7-10)

## அமரர் ரவிராஜின் சிலை திறப்பும் 10-ம் ஆண்டு நினைவுக்கூட்டமும்



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜின் பத்தாம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும். பிற்பகல் 3 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக அமைக்கப்பட்ட அன்னாரது சிலை திறப்பு விழா இடம்பெற்று பிற்பகல் 3.45 மணிக்கு சாவகச்சேரி நகர சபை பொன்விழா மண்டபத்தில் நினைவுக்கூட்டம் இடம்பெறும்.

இந்நிகழ்வில் வரவேற்புரையினை க.அருந்தவபாலன், தலைமையுரையினை வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், மாமனிதருக்கு மதிப்பளிப்பது என்பது அவரது இலட்சியத்தை அடைய உழைப்பதே எனும் உறுதியுரையினை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளதுடன் நினைவுரைகளை தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் லங்கா நவசமசமாஜ கட்சியின் தலைவருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன, கல்முனை மாநகர சபையின் முன்னாள் மேஜரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் துணைப் பொதுச் செயலாளருமான அல்ஹாஜ் நிஸாம் காரியப்பர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் செயலாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி, வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சின்னத்துரை தவராசா, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மக்கள் விடுதலைக் கழக தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை. சேனாதிராசா, சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், தேசிய சகவாழ்வு மற்றும் கலந்துரையாடல், அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன், சுகாதார போசாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன, வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் , எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் ஆகியோர் வழங்கவுள்ளனர். மேலும் ஏற்புரையினை அமரர் ரவிராஜின் அன்னை திருமதி மங்களேஸ்வரி நடராஜா வழங்குவார். (இ-3)

## அடுத்த வருடத்திலிருந்து ஆசிரியர்கள் பரிசுப் பொருட்கள் வாங்கத் தடை

(கொழும்பு)

அடுத்த வருடம் முதல் பாடசாலை மாணவர்களிடமிருந்து, ஆசிரியர்கள் பரிசுப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பாடசாலை விழாக்கள் மற்றும் பிறந்தநாள் நிகழ்வுகளின் போது மாணவர்கள் ஆசிரியர்களுக்கு பெறுமதியான பரிசுப் பொருட்கள் வழங்குவது வழமையாக இருந்து வருகின்றன.

எனினும் அடுத்த வருடம் முதல் ஆசிரியர்களுக்கு மாணவர்கள் யாரும் பரிசுப்பொருட்கள் வழங்கக்கூடாது என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## இலங்கைக்கு மிகுதிக்கடனை வழங்க சர்வதேச நாணய நிதியம் இணக்கம்

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள கடன்தொகையின் இரண்டாம் தொகுதி விடுவிக்கப்படவுள்ளது.

இதன்படி 162.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தினால் 325.1 மில்லியன் ரூபா இலங்கைக்கான கடன் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த கடன் தொகையின் முதலாம் பகுதி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## எம்.பிக்களுக்கு வாகனம் கொடுப்பது தவறா? -ரவி



அரசாங்கத்தில் சிறந்த முறையில் பணியாற்றி வரும பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனம் பெற்றுக் கொடுப்பது ஒரு தவறா? என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கேள்விஎழுப்பியுள்ளார்.

அமைச்சர்களுக்குப் போன்று எம்.பி.களுக்கு வாகனம் கிடைப்பதில்லை. இந்த எம்.பிக்களுக்கு வாடகைக் கொடுப்பனவு முறையின் கீழ் 273 கோடி ரூபாவை செலவு செய்வது தனியார் பிரிவு. இந்த வாகனம்வழங்குவதன்மூலம் வரியாக அரசாங்கத்துக்கு 253 கோடி மீளக் கிடைக்கின்றது.

பாராளுமன்றத்திலுள்ள அரசாங்கம் சார்பு எம்.பிக்கள 58 பேருக்கு தீர்வை வரியற்ற முறையில் வாகனம் வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் குறித்து ஜே.வி.பியின் தலைவர் சபையில் கேள்வி எழுப்பியிருந்த கேள்விக்குப் பதிலாகவே நிதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7-10)

## அஸ்வின், ஹோலி ஜோர்

# விசாகப்பட்டின டெஸ்ட் இந்தியாவின் ஆதிக்கத்தை நோக்கி



ராஜ்கோட் டெஸ்ட் போட்டியை தட்டுத்தடுமாறி சமப்படுத்திய இந்திய அணிக்கு விசாகப்பட்டின ஆடுகளம் சுழல்பந்து வீச்சுக்கு சாதகமாக மாற்றமடைய அதை இந்திய சுழல் சூறாவளி அஸ்வின் தனக்கு சாதகமாக பயன்படுத்திய 5 விக்கெட்டுக்களை கைப்பற்ற நேற்றைய 3ஆம் நாள் ஆட்டநேர நிறைவில் இந்தியா தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளது.

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய இந்திய அணி விராட ஹோலி, செற்றேஸ்வர் புஜாரா ஆகியோரின் அபார சதம் கைகொடுக்க 455 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தது.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் 2ஆவது நாள் ஆட்ட நேர நிறைவில் 49 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 103 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று 3ஆம் நாளாட்டம் நடந்தது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஸ்ரோக்ஸ் மற்றும் பெரஸ்டோவ் ஆகியோர் அரைச் சதம் அடித்தனர். இதனால், இங்கிலாந்து அணி பாலோ ஒன் ஆகாமல் தப்பித்தது. அஸ்வின் சுழலில் தொடர்ந்து தடுமாறிய இங்கிலாந்து அணி 255 ஓட்டங்களை மாத்திரமே குவித்து ஆட்டமிழந்தது.

சுழலில் அசத்தி அஸ்வின் 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதையடுத்து 200 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணிக்கு முரளி விஜய் ஏமாற்றினார். ராகுல் 10 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். புஜாரா ஒரு ஓட்டத்தில் வெளியேற 40 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது இந்தியா

மறுமுனையில் அணித் தலைவர் விராட் ஹோலி சிறப்பாக ஆடி அரைச்சதம் அடித்தார்.

இந்நிலையில் நேற்றைய 3ஆம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வர இந்திய அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 98 ஓட்டங்களை எடுத்துள்ளது.

விராட் ஹோலி 56, ரஹானே 22 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.

இங்கிலாந்து அணியின் பந்து வீச்சில் பிரோட் 2, அண்டர் சன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இதன்மூலம் இந்திய அணி இங்கிலாந்தை அணியை விட 298 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

இதனால் விசாகப்பட்டின டெஸ்ட் முழுமையாக இந்தியாவின் கைகளுக்குள் வந்துள்ளதை 3ஆம் நாளாட்டம் உணர்த்தியுள்ளது. (க)



## நியூசிலாந்துடனான கிறைஸ்ட்சேர்ச் டெஸ்ட்

# தோல்வியின் பிடியில் பாகிஸ்தான்



பாகிஸ்தான் அணிக்கு எதிரான கிறைஸ்ட்சேர்ச் டெஸ்டில் நியூசிலாந்து அணி வெற்றி பெறுவதற்கான அருமையான சந்தர்ப்பம் வாய்த்துள்ளது.

பாகிஸ்தான்-நியூசிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கிறைஸ்ட்சேர்ச் நகரில் நடைபெற்று வருகிறது. முதல் நாள் ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது.

2ஆவது நாள் ஆட்டத்தில் தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 133 ஓட்டங்களை மாத்திரமே எடுத்து ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக அணித் தலைவர் மிஸ்பா 31 ஓட்டங்கள் எடுத்தார்.

நியூசிலாந்து அணியின் பந்து வீச்சில் அறிமுக வீரர் கொலின் கிராண்ட்ஹோம் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடாந்து தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து நேற்று முன்தினம் 2 ஆவது நாள் ஆட்ட நேர நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று 3ஆவது நாள் ஆட்டம் நடந்தது. தொடர்ந்து விளையாடிய நியூசிலாந்து அணி 59.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 200 ஓட்டங்களைக் குவித்தது.

இது பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் குவித்த ஓட்ட எண்ணிக்கையிலும் பார்க்க 67 ஓட்டங்கள் அதிகமாகும்.

துடுப்பாட்டத்தில் இந்திய வம்சாவளி வீரர் ஜீத்ராவல் அதிகபட்சமாக 55, நிக்கோலஸ் 30 ஓட்டங்களை எடுத்தனர்.

பாகிஸ்தான் தரப்பில் ரகாட் அலி 4, மொஹமட் அமீர், சொகைல் கான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

67 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தமது 2ஆவது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 64 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 3 விக்கெட்டை இழந்தது.

அதன்பின்னரும் சீரான இடைவெளியில் விக்கெட்டுக்கள் சரிந்தன. மிஸ்பா 13 ஓட்டங்களில் வெளியேறினார். நீண்டநேரம் தாக்குப்பிடித்து ஆடிய ஆரம்ப வீரர் வீரர் அசார் 173 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 31 ஓட்டங்கள் சேர்த்து டிரெண்ட் போல்ட் பந்தில் கிளீன் போல்டானார். பின்னர் சர்ப்ராஸ் அகமட் (2), மொகமட் அமிர் (6) ஆகியோரின் விக்கெட்டுகளை போல்ட் கைப்பற்றினார்.

இதனால் நேற்றைய 3ஆம் நாள ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நியூசிலாந்தைவிட 62 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ள பாகிஸ்தான் அணி வசம் மூன்று விக்கெட்டுகளே உள்ளன.

இதனால் இன்றைய நாளாட்டம் வெற்றி-தோல்வியை தீர்மானிக்கும் நாளாக இருக்கும். (க)



## ஐ. எஸ் பயங்கரவாதிகளுடன்

# இலங்கை முஸ்லிம்களுக்கு தொடர்பில்லை – ரிஷாத்

உலக பயங்கரவாத அமைப்பாக கருதப்படும் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புடன் இலங்கையிலுள்ள எந்தவொரு முஸ்லிம் அமைப்போ அல்லது தனி நபரோ தொடர்புகள் வைத்திருக்கவில்லை என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரிஷாத பதியுதின் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, இலங்கையின் 4 குடும்பங்களை சேர்ந்த 32 பேர் ஐ.எஸ். ஐ.எஸ் அமைப்பில் இணைநதுள்ளதாக தெரிவித்திருந்தார்.

நீதி அமைச்சரின் இந்த உரை குறித்து முஸ்லிம் அரசியல்வாதிகளும் சிவில் அமைப்புகளும் தங்கள் கருத்துககளை வெளியிட்டுள்ளனர்.

நேற்று சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் ரிஷாத் பதியுதின் "32 பேர் இணைந்ததாக கூறப்படுவது, தான் அறிந்த வரையில் இரு வருடங்களுக்கு முன்னதாக நடந்ததாக இருக்கலாம்" என்றார்.

"இலங்கையிலுள்ள எந்தவொரு முஸ்லிம் அமைப்போ அல்லது தனி நபரோ இந்த அமைப்போடு தொடர்பில் இல்லை. அவர்கள் அந்த அமைப்புக்கு உடந்தையாகவோ அல்லது ஆதரவாகவோ இருக்க மாட்டார்கள் "என்றும் வலியுறுத்தி கூறிய அவர், சிலர் அப்பாவி முஸ்லிம்கள் மீது வீண் பழி சுமத்துவதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை முஸ்லிம் சிவில் அமைப்புகளை உள்ளடக்கிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்சில் நீதி அமைச்சரின் உரைக்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

ஒரு வருடத்துக்கு முன்னர் அந்த அமைப்பில் இணைந்த ஒருவர் இறந்த பின்பு, இலங்கை முஸ்லிம்களின் பங்களிப்பு பற்றி அறிக்கை வெளியிடப்படவில்லை என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்சில் தெரிவித்துள்ளது.

ஐ.எஸ் அமைப்பில் இணைந்ததாக கூறப்படும் நபர்கள் தொடர்பாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்க அரசுக்கு உலமா சபை உட்பட அனைத்து இஸ்லாமிய அமைபபுகளும் ஒத்துழைப்பு வழங்கும் என்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்சில் மேலும் தெரிவித்துள்ளது. (செ-11)

# இன்றும் நாளையும்...

கொந்தளிப்பு நிலை காரணமாகவே நாட்டில் சில தினங்களுக்கு சீரற்ற காலநிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களத்தால் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டின் பல பகுதிகளில் எதிர்வரும் நாட்களில் 100 மில்லிமீற்றருக்கு அதிகமான கனமழை பெய்யக் கூடும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

மேற்கு, தெற்கு, சப்ரகமுவ, மத்திய, ஊவா, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்ய கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அப்பகுதி மக்களை அவதானமாக இருக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக மேற்கு, தெற்கு, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில தினங்களுக்கு பனிமூட்டமான காலநிலை ஏற்படக் கூடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் நேற்றைய தினம் வடக்கு - கிழக்கு பகுதிகளில் மாலை நேரம் பெய்த அடை மழை காரணமாக தாழ்வான பகுதிகளில் வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அறியக் கிடைத்துள்ளது. (செ-9)

## துரைரத்தினத்தின் நினைவு தின நிகழ்வு

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர்.க. துரைரத்தினத்தின் நினைவு தின நிகழ்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பருத்தித்துறை சிவன் கோவில் திருமண மண்டபத்தில் இடம் பெறும். (இ-7-60)


### யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவுனியா (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)
(சி/5649)



### தேவை

கம்பியூட்டர் அனுபவமுள்ள தமிழ், ஆங்கில ரைப்பிங், இன்டநெட், Email ஆர்வமுள்ளவர்கள் தேவை. சுயதொழிலாகவும் அனுமதிக்கப்படும்.

**ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்**
**303, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(6476)


## மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி இராணுவத்தினர் இருவர் காயம்





யாழ்ப்பாணம் கே.கே. எஸ். வீதியில் இராணுவத்தினர் இருவர் பயணித்த மோட்டார் சைக்கிள் நேற்று முன்தினம் நண்பகல் வேளை வீதியில் சறுக்குண்டு விபத்துக்குள்ளானதில் இராணுவத்தினர் இருவரும் காயமடைந்திருந்தனர் காயமடைந்த இருவரையும் அப்பகுதியில் நின்றிருந்த பொதுமக்கள் ஒன்று சேர்ந்து உடனடியாக முதலுதவிகளை மேற்கொண்டு பாதுகாபபாக அனுப்பி வைத்திருந்தனர். (இ-9)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



**அமரர் முருகுப்பிள்ளை இராமசாமி**
**(தோம்பார்)**

தோற்றம் 13.03.1938 மறைவு 22.10.2016

கடந்த 22.10.2016 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (21.11.2016) திங்கட்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து அவரின் இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிப்பதோடு தவறவிடப்பட்ட உற்றார், உறவினர், நண்பர்கள் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகள். அதேபோல் வெளிநாடுகளில் வாழும் எமது உறவுகள், நண்பர்கள் தொலைபேசி ஊடாகவும் வேறு வழிகளிலும் எமது துக்கத்தில் பங்கு கொண்டதற்கும் எமது நன்றிகள். மற்றும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், போஸ்டர்கள், மலர் வளையங்கள் வெளியிட்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய் வாழ்ந்து
எங்களை வளர்த்து ஆளாக்கி கலங்க வைத்து
விண்ணுலகு சென்றீர்களே!
மாதமொன்று ஆகிடினும் ஆறவில்லை எம்துயரம்
எங்களை வாழ வைத்த தெய்வமே,
என்றென்றும் உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்,
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஊரிக்காடு, மயிலியந்தனை, தொண்டைமானாறு.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி-6436)


## இராசி பலன்

20.11.2016
(கார்த்திகை 05, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
சஷ்டி காலை 8.53 மணிவரை
பூசம் முற்பகல் 10.22 மணிவரை
சுபநேரம் 9.09-10.39 மணிவரை
இராகுகாலம் 4.39-6.09 மணிவரை
உலக சிறுவர்கள் உரிமைகள் தினம்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூராடம், உத்தராடம் | | சந் |
| செவ் | | | ராகு |
| சுக் | சூரி, சனி<br>புத | | குரு |

வளவன்

**மீனம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**மேடம்:** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள்.

**இடபம்:** நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** உறவினர் வழியில் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், பொருளாதார விருத்திக்கு அடித்தளமிடுவீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்:** ஆரோக்கியமான நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கௌரவமான நாள்.

**கடகம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், சொந்தபந்தங்களின் வருகையுண்டு, பேச்சில் கனிவு பிறக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்:** சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், தேவையற்ற சஞ்சலங்கள் கூடும் நாள்.

**தனுசு:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தேவையற்ற விரயங்கள் ஏற்படலாம், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம்.

**விருச்சிகம்:** பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, கனிவான தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, எதிர்பார்த்த காரியமொன்று இன்று நடைபெறும் வாய்ப்புண்டு.

**துலாம்:** நல்ல காரியங்கள் நடைபெறும் நாள், வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள், எதிர்பாராத தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நண்பர்களால் நன்மையுண்டு.

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும், காரிய அனுகூலமுண்டு, போசன நன்மையுண்டு, வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

# வெளிநாடுகளில் தமிழைப்பரப்புவது ஈழத்தமிழினம்தான்



## யாழ்.இந்தியத் தூதுவர் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

***தமிழ் மொழியை வெளி நாடுகளில் பரப்பும் ஒரே இனம் இலங்கைத் தமிழினம் மட்டுமே என யாழ். இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன் தெரிவித்துள்ளார்.***

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாட்டின் முதலாம் நாள் மாலை நேர நிகழ்வு நேற்று முன்தினம் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில்நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் இல்லை என்றால் தமிழ் இல்லை, தமிழ் இல்லை என்றால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் இல்லை எனும் அளவுக்கு ஒன்றுக்கொன்று பிணைந்துள்ளது.

இந்தியா ஒரு மத சார்பற்ற நாடு மட்டுமல்லாமல் ஏராளமான மொழி பேசும் நாடுகளில் ஒன்று. அதில் தமிழனாக பிறந்து தமிழன் என்பதில் மிக பெருமைப்படுகிறேன். அதைத்தான் தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என கூறுவார்கள். எத்தனை மொழிகள் இருந் தாலும் இந்திய அரசு சில மொழிகளைத்தான் செம்மொழியாக்கியுள்ளது. அந்த வகையில் தமிழும்செம்மொழிகளில் உள்ளடங்கியுள்ளது.

மகாத்மா காந்தி வட இந்தியராக இருந்தாலும் அவர் கற்ற மொழி தமிழ் மொழி. அதற்கு காரணம் தமிழ் மேல் உள்ள பற்றுத்தான். மொழியை கற்கும் ஆர்வம் இருந்தால் தான் அதை திறம்பட கற்க முடியும்.

உலகத்திலே பெண்கள் தாலிக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆனால் தனது குழந்தைக்காக, குழந்தையின் கல்விக்காக அந்த தாலியை அடகு வைத்து அல்லது விற்று கல்வியை பெற்றுக்கொடுக்கும் ஒரே குலம் தமிழ் தாய் குலம் ஆகும்.

உலகில் உள்ள எந்த நாட்டுக்கு சென்றாலும் தமிழை பற்றி அறியாதவர்கள் இல்லை. அதற்கு ஒரே ஒரு காரணம் என்னவென்றால் வெளிநாட்டில் தமிழ் மொழியை தற்போதும் வளர்த்துக்கொள்ளும் ஒரே இனம் இலங்கை தமிழர்தான். அந்தவகையில் தமிழ் மொழி மற்றும் கலாசாரத்தை வெளிநாடுகளில் அதிகளவு பரப்பியுள்ளார்கள்.

ஆறுமுக நாவலரின் புத்தகங்கள் இங்கு அழிந்துள்ளதாக அறிந்தேன். எனவே தஞ்சாவூரில் உள்ள நூலகத்தில் ஆறுமுக நாவலரின் நூல்கள் பல உள்ளன. அந்த நூல்களின் பிரதிகளை யாழ். பொது நூலகத்தில் வைப்பதற்காக தருமாறு அவர்களிடம் கோரியுள்ளேன். அவை அடுத்த வருடம் ஜனவரி, பெப்ரவரியில் யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரப்படும்.

மேலும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்த தினம். அதற்கு இந்தியாவின் தமிழகத்தில் இருந்து சிறந்த பேச்சாளர் நெல்லை கண்ணன் யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி இந்திய குடியரசுதினம் கொண்டாடப்படவுள்ளது. அதற்காக மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கொள்ளுப்பேரன் இராஜ்குமார் பாரதி யாழ்ப்பணம் வருகை தரவுள்ளார். அவர் கண்டிப்பாக இந்த மண்ணுக்கு வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## நாவலர் மாநாடு; மூன்றாம் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு மற்றும் குருபூசை நிகழ்வுகளில் மூன்றாம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறும்.

தருமபுர ஆதீன முனைவர் கயிலை ஸ்ரீமத் குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள், நாயன்மார்கட்டு சித்தி விநாயகர் ஆலய பிரதம குரு ஆகம கிரியா ஜோதி சிவஸ்ரீ சதா மகாலிங்க சிவ குருக்கள் முன்னிலையில் நடைபெறும். இந்நிகழ்விற்கு யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமை தாங்குவார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண கல்வி, விளையாட்டு, கலாசார மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சர் சி.தண்டாயுதபாணி, கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார்போக்குவரத்து அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் மற்றும் கொக்குவில் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் எஸ்.பஞ்சலிங்கம், அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் டி.மனோகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் நாவலரின் தமிழ்க் கல்விப் பணி பற்றிய கருத்தரங்கம் இடம்பெறும்.

**உரைப்பணி** பற்றி பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, **பாடநூலாக்கம்** பற்றி பேராசிரியர் வ.மகேஸ்வரன், **இலக்கணப் பணி** பற்றி கலாநிதி க.இரகுபரன், **பாடசாலை உருவாக்கம்** பற்றி கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன், **பதிப்புப் பணி** பற்றி ஈ.குமரன் ஆகியோர் கருத்துக்களை வழங்கவுள்ளனர்.

மாலை நிகழ்வுகள் 4 மணிக்கு தருமபுர ஆதீன முனைவர் கயிலை ஸ்ரீமத் குமராசாமி தம்பிரான் சுவாமிகள், சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத சைதன்யா சுவாமிகள் முன்னிலையில் இடம்பெறும். வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, கௌரவ விருந்தினராக நாவலர் நற்பணி மன்றத் தலைவர் ந.கருணைஆனந்தன், சிறப்பு விருந்தினர்களாக தருமபுர ஆதீனத்தின் பன்னிரு திருமுறை மொழி பெயர்ப்பு இணைப்பாளர் மறவன்புலவு க.சச்சிதானந்தன், நொதேர்ன் சென்றல் தனியார் வைத்தியசாலையின் உரிமையாளர் எஸ்.பி.சாமி, சைவமகா சபையின் பொதுச் செயலாளர் வைத்திய கலாநிதி ப.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் திருவாசகம் (சிங்கள மொழிபெயர்ப்பு), பாலபாடம் முதலாம், இரண்டாம் புத்தகங்கள் பாலபாடம் மூன்றாம், நான்காம் புத்தகங்கள், நாவலர் நினைவுமலர் **Naavalar by Muthukumara Swamy,** ஆறுமுக நாவலர் சரிதம் ஆகிய நூல்கள் வெளியிடப்படவுள்ளன. நூல் அறிமுகவுரையினை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் வழங்குவார்.

தொடர்ந்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வரலாற்று அறிவுப் போட்டியில் திறமையை வெளிக்காட்டிய மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வும் வித்துவான் கலாபூஷணம் திருமதி வசந்தா வைத்தியநாதன் தலைமையில் உரையரங்கம் இடம் பெற வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வுரையரங்கில் நாவலர் கல்வி முறைகளும் என் வாழ்க்கையில் நெறிகளும் பற்றி ஸ்ரீ நடேசன் வித்தியாசாலா மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி நிறுவுநர் டாக்டர். என். ராமசுப்பிரமணியன், எமது ஆன்மீக உரை மரபு பற்றி கனடா சைவ சித்தாந்த பீட வைத்திய கலாநிதி இ.லம்போதரன் என்றென்றும் பெரிய புராணம் பற்றி சிதம்பரம் தவத்திரு ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை அறக்கட்டளை இணைச் செயலாளர் டாக்டர் திருமதி. எஸ். பத்மினி கபாலி மூர்த்தி ஆகியோர் உரையரங்கம் நிகழ்த்தவுள்ளனர். (இ-3)

## ஆவா அச்சத்தால் கத்தி தூக்குவதில்லை

# யுத்தத்தால் அழிவடைந்த பொருளாதாரத்தை கல்வியால் மட்டுமே நாம் சரிசெய்ய வேண்டும்

### வடமாகாணசபை உறுப்பினர் அனந்தி தெரிவிப்பு

யுத்தத்தால் அழிவடைந்த எமது பொருளாதாரத்தை கல்வியாலேயே சரிசெய்ய முடியும் என வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார். வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா கடந்த 17 ஆம் திகதி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் யுத்தத்தால் அழிவடைந்து போயுள்ள எமது பொருளாதாரத்தை கல்வியாலேதான் சீர் செய்ய முடியும். மாணவர்கள் மத்தியில் நல்லிணக்கம் தொடர்பான சில கருத்துக்கள் அதிகம் பகிரப்பட வேண்டும்.

நல்லிணக்கம் என்பது தேசிய ரீதியாக பேச்சு வழக்கிற்கு நல்லதாக இருக்கும். நல்லிணக்கம் தென்னிலங்கை அரசியல் வாதிகளுக்கு நுனி நாக்கில் ஏற்படுவது போல் அல்ல. அடி மனதில் இருந்து வரவேண்டும்.

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் ஒரு பௌத்த துறவி ஒருவர் மிக மோசமான வார்த்தைப் பிரயோகம் செய்து வருவதை பார்க்கலாம். இதுதான் நல்லிணக்கமா? அந்த இடத்தில் சட்டத்தை பேணவேண்டிய பொலிஸார் அமைதியாக இருப்பது கண்டிக்கத்தக்கது. இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாமல் நல்லிணக்கம் ஏற்படப்போவதில்லை. இந்த நல்லிணக்கத்தில் தான் கைதுகளும் காணாமல் போதல்களும் இடம்பெற்றுவருகின்றன.

கத்தி வைத்திருந்ததால் அனந்தி ஆவா என்று நல்லாட்சி நல்லிணக்கம் பேசி முத்திரை குத்திவிடும் என்பதால் இன்று நான் சமையல் செய்வதற்குக் கூட கத்தி தூக்குவதில்லை. யாழ். குடாநாட்டில் பெண்களுக்கான பாதுகாப்பு இந்த நல்லாட்சியிலும் இல்லை. ஆவாவை அவர்கள் உருவாக்கி விட்டு தமிழர் மேல் கைதுகளை ஆரம்பித்துள்ளார்கள். தங்கள் போலி முகங்களை மறைக்க எங்கள் இளைஞர்களை பலியாக்குகிறார்கள் என் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)





சொண்ட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் வீதி விபத்து, சுகாதாரம், மிதிவெடி அபாயம் போன்ற விடயங்களை உள்ளடக்கி விழிப்புணர்வு நாடகம் ஒன்று நேற்று முன்தினம் சுன்னாகம் பொதுச்சந்தை மற்றும் தொல்லிப்பழை சந்தியில் நடைபெற்றது. (படங்கள்:- பொ.சோபிகா)





ஊரெழு கலைவாணி முன்பள்ளியின் வருடாந்த கற்றல் கல்விக்கண்காட்சி கடந்த வியாழக்கிழமை முன்பள்ளியின் முகாமைத்துவக் குழுத் தலைவர் சி.இளங்கோவன் தலைமையில் முன்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபர்கள் கவிமணி க.ஆனந்தராசா, செ.கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தனர். (படங்கள்:- பொ.சோபிகா)

# சித்த மருத்துவத் துறையினர் யாழில் கவனயீர்ப்பு போராட்டம்

## ஜனாதிபதி, பிரதமருக்கு மகஜரும் கையளிப்பு




சுதேச வைத்தியர்களின் நியமனத்தின் போது சித்த வைத்தியர்கள் புறக்கணிக்கப்பட்டமையைக் கண்டித்து வட மாகாண அரச சித்த வைத்தியர்களும் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறை மாணவர்களும் இணைந்து நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை கைதடி வளாக முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

இவர்கள் கைதடியிலுள்ள வட மாகாண முதலமைச்சர் அலுவலகம் வரை பேரணியாகச் சென்று ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு தமது கோரிக்கைகளையும் தெரிவிக்கும் படி மகஜர் ஒன்றினையும் முதலமைச்சரின் பிரத்தியேக செயலாளரிடம் கையளித்தனர். மேற்குறித்த விடயம் தொடர்பாக சித்த மருத்துவ மாணவர் ஒன்றியத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சுதேச மருத்துவத்துறையில் நியமனம் வழங்கும் போது 2012 ஆம் ஆண்டுக்குக்கு முன்னர் விகிதாசார அடிப்படையில் 70 வீதம் ஆயுர்வேதத்துக்கும் 20 வீதம் சித்தமருத்துவத்திற்கும் 10 வீதம் யுனானிக்கும் என்ற அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டு வந்தது.

2012 ஆம் ஆண்டுக்கு பின்னர் 70வீதம் ஆயுர்வேதத்துக்கும் 20 வீதம் யுனானிக்கும் 10வீதம் சித்த மருததுவத்திற்கும் என முறையற்ற வகையில் வழங்கப்படுகின்றது. தற்போது வழங்கப்படும் நிரந்தர நியமனம் 75 ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் 21 யுனானி வைத்தியர்களுக்கும் 11 சித்த வைத்தியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் யுனானிக்கு ஏனைய மாகாணங்களில் உள்ள வெற்றிடம் காட்டப்படாது தனியே வடக்கு, கிழக்கில் உள்ள 32 சித்த வைத்தியர்களுக்குரிய வெற்றிடங்களில் 11 சித்த வைத்தியர்களுக்கு வழங்கி ஏனைய 21 சித்த வைத்தியர்களுக்குரிய வெற்றிடங்களை யுனானி வைத்தியர்களைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளது.

100இற்கு மேற்பட்ட சித்த வைத்தியர்கள் வேலையற்று இருக்கின்றனர் என்பதும், பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படுவது யுனானியை விட சித்தமருத்துவமே அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாம் இலங்கையின் அனைத்து மாகாணங்களிலிருந்தும் வருகை தந்து சித்த மருத்துவத்தை கற்கின்றோம. அத்துடன் தமிழ் பேசும் மக்கள் இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் வசிக்கின்ற போதிலும், வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் சித்த மருத்துவத்திற்குரிய இட ஒதுக்கீடு மறுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சித்த மருததுவம் புறக்கணிக்கப்படுவது தொடர்பாகவும், எமது எதிர்காலம் தொடர்பாகவும் நாம் மிகுந்த கவலையடைகினறோம். நியமனம் வழங்கப்படும் போது, சித்த மருத்துவத்திற்கு மீண்டும் விகிதாசார அடிப்படையில் ஒதுக்கப்பட வேண்டுமெனவும், சித்த வைத்தியர்களுக்குரிய வெற்றிடங்கள் சித்த வைத்தியர்களாலேயே நிரப்பப்பட வேண்டுமெனவும் தமிழ் பேசும் மக்கள் வசிக்கின்ற ஏனைய பகுதிகளிலும் எமக்கு இட ஒதுக்கீடு தர வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கவனயீர்ப்பு போராட்டத்தில் சித்த மருத்துவ வைத்தியர்கள் மற்றும் சித்த மருத்துவ மாணவர்கள் உள்ளிட்ட 300 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (இ-7-10)

## திருடர்கள் மூவர் கைது

ஆட்டோ திருடர்கள் மூவர் வெல்லம்பிட்டிய மற்றும் முல்லேரியா பிரதேசங்களில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். மிரிஹானை விசேட குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து திருடப்பட்ட இரண்டு ஆட்டோக்களும் ஆட்டோ உதிரிப்பாகங்களும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## மின்விளக்குகள் பொருத்தல்



நெடுந்தீவு பிரதேச செயலக சமுர்த்தி பிரிவினால் மாதிரி கிராமமாகத் தெரிவு செய்யப்பட்ட சீக்கிரியாம்பள்ளம் கிராமத்தில் வீதி மின்விளக்குகள் பொருத்தும் பணிகள் பிரதேச செயலர் சி.ஜெயகாந் தலைமையில் நெடுந்தீவு பிரதேச சபை, செஞ்சிலுவைச் சங்கம், மின்சார சபை என்பவற்றின் பங்களிப்புடன் அண்மையில் நடைபெற்றது. (இ-3)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா:17செவ் 4 இல்<br>உயர்ம்: 165cm<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: B/4928 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 37செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்<br>தொ.இ: G/733 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 58செவ் 8 இல்<br>உயரம்: 5'3''<br>தகைமை/தொழில்:Diploma<br>லண்டன் NOT PRஎதிர்பார்ப்பு:<br>வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/4933 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 17 செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BEd/ஆசிரியர்<br>தொ.இ: G/735 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 45 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:QS/தனியார்<br>தொழில் டுபாய்<br>தொ.இ: B/4934 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 23<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/788 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 23 உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:Civil Eng<br>அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும்<br>ஏற்கப்படும்<br>தொ.இ: B/4951 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 5 செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L/அரச<br>தொழில்<br>தொ.இ: G/792 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்ப தனையும் அறியத்தருகின்றோம்.

இனிவரும் நாட்களில் கல்யாணமாலை ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை தினமாகும்.



விற்பனைக்கு

யாழ்.நல்லூர் முருகன் கோவிலுக்கு அண்மையில் கோவில் வீதி முகப்புடன் 10 பரப்பு காணியுடன் கூடிய வீடும் மற்றும் பிறவுண் வீதியில் 2 வீடும் யாழ்.நகரின் வர்த்தக மையப்பகுதியில் பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் 50 அடி அகலமும் 300 அடி நீளமும் கொண்ட காணித்துண்டும் மற்றும் 3 மாடி கடைக்கட்டடமும் யாழ்ப்பாணம் திருநெல்வேலி பலாலி வீதியில் 6 பரப்புடன் கூடிய வீடும் பலாலி வீதி முகப்புடன் செல லங்கா முன்பாக 10 பரப்பு காணித்துண்டும் K.K.S வீதியில் தட்டார் சந்திக்கு அண்மையில் பழைய வீட்டுடன் 10 பரப்பு காணியும் சுண்டுக்குளியில் A 9 வீதியில் பஸ்ரியான் ஹோட்டல் முன்பாக 6 பரப்பு வெற்றுக்காணியும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு முன்பாக காந்தி வீதியில் 10 பரப்பு காணியும் யாழ்ப்பாணம் விக்ரோறியா வீதியில் 12 பரப்பு வெற்றுக்காணியும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் வின்சன் தியேட்டருக்கு அண்மையில் 10 பரப்பு காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

(இ-6439)

தொடர்பு:-கனகசபை தர்மகுலசிங்கம், இல.189, மின்சார நிலைய வீதி,யாழ்ப்பாணம். 077 723 2535

# மகிந்தவின் மகன் அனுப்பிய செய்மதியைக் காணவில்லை






முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இளைய மகனால் விண்ணுக்கு ஏவப்பட்ட செய்மதி, காணாமல் போய்விட்டது என்று சுட்டிக்காட்டிய ஜே.வி.பியின் எம்.பியான நளிந்த ஜயதிஸ்ஸ, அந்த செய்மதியைக் கண்டுபிடிப்பதற்கு, இன்னுமொரு செய்மதியை அனுப்புங்கள் என்றும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் விண்ணுக்கு ஏவப்பட்ட செய்மதி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவிடம் கேள்வி எழுப்பிய போதே நளிந்த எம்.பி மேற்கண்டவாறு கோரிக்கையை விடுத்தார். பண்டங்களை ஏற்றி இறக்கும் நிறுவனமான சுப்ரீம் செட் தனியார் நிறுவனம், செய்மதியை அனுப்பும் தகுதியை எவ்வாறு பெற்றது? என நளிந்த ஜயதிஸ்ஸ கேட்டிருந்தார். அக்கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, தெரியாது என்று எடுத்த எடுப்பிலேயே கூறிவிட்டார். இதனால் அவையிலிருந்தவர்கள் எல்லோரும் சிரித்தனர். அப்படியானால், மகிந்த ஆட்சியில் விண்ணுக்கு ஏவப்பட்டு காணாமற்போன அந்தச் செய்மதியைக் கண்டுபிடிக்க இன்னுமொரு செய்மதியை அரசாங்கம் அனுப்ப வேண்டும் என்றும் நளின் எம்.பி கோரிக்கைவிடுத்தார். (இ-7-10)

# மகிந்தவின் பிறந்தநாளில் புதிய இணையம் ஆரம்பம்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது 71 ஆவது பிறந்த தினத்தை நேற்று முன்தினம் கொண்டாடிய போது உத்தியோகபூர்வ இணையத்தளத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளார்.

http://www.mahindarajapaksa.lk/ என்ற இணையத்தளத்தையே அவர் ஆரம்பித்து வைத்துள்ளார். முன்னதாக நேற்று முன்தினம் காலை தனது இல்லத்தில் மகிந்த ராஜபக்ஷ கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடினார். இந்த நிகழ்வில் அவரது குடும்பத்தினர் மற்றும் ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# பொலநறுவையில் கண்டுபிடிக்கப்பட்ட பழைய கல்லறை



பொலன்னறுவையில் புராதன காலத்து மிகப்பழைய கல்லறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

2600 - 3000 ஆண்டுகளுக்கு இடையிலான காலப்பகுதிக்கு சொந்தமான பண்டைக்காலத்தின் கல்லறை இதுவென கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலன்னறுவை, எலஹெர, சிறிகதுயாய, கட்டுவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது இந்த மிகப்பழைய கல்லறையை கண்டுபிடித்ததாக மத்திய கலாச்சார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் பிரிஷாந்த குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதனை பாதுகாக்கும் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்படுவதாக அவர்தெரிவித்தார்.

பொலன்னறுவையில். அறிவியல்படி கிடைத்த முதலாவது மிகப் பழைய கல்லறையாக இதனை பெயரிடுவதற்கு நடவடிக்கை மேற கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## 11.2016 20 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 284 - டயோக்கிளேசியன் ரோமப் பேரரசின் மன்னன் ஆனான்.
- 1194 - இத்தாலியின் பலேர்மோ நகரம் ஆறாம் ஹென்றியால் கைப்பற்றப்பட்டது.
- 1658 - இலங்கையில் போர்த்துக்கீசர் மீதான வெற்றியைக் குறிக்க இந்நாள் டச்சு ஆட்சியாளர்களினால் நன்றி தெரிவிப்பு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.
- 1910 - பிரான்சிஸ்கோ மடேரோ மெக்சிகோ ஜனாதிபதி போர்பீரியோ டயஸ் என்பவரைப் பதவியில் இருந்து அகற்றிவிட்டதாகவும் தன்னை ஜனாதிபதியாகவும் அறிவித்தார். மெக்சிக்கோ புரட்சி ஆரம்பமாயிற்று.
- 1917 - உக்ரேன் குடியரசாக அறிவிக்கப்பட்டது.
- 1923 - ஜேர்மனியின் நாணயம் பேப்பியர்மார்க் ரெண்டென்மார்க் ஆக மாற்றப்பட்டது. (1 ரெண்டென்மார்க் = 1 திரில்லியன் பேப்பியர்மார்க்)
- 1936 - ஸ்பானிய அரசியல்தலைவர் ஜோசே அண்டோனியோ பிறிமோ டெ ரிவேரா கொல்லப்பட்டார்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஹங்கேரி, ருமேனியா, சிலவாக்கியா ஆகியன அச்சு அணி நாடுகள் அமைப்பில் இணைந்தன.
- 1947 - இளவரசி எலிசபெத் இளவரசர் பிலிப்பை திருமணம் புரிந்தார்.
- 1962 - சோவியத் ஒன்றியம் தனது ஏவுகணைகளை கியூபாவில் இருந்து அகற்றுவதாக வாக்குறுதி அளித்ததை அடுத்து, ஐக்கிய அமெரிக்கா கரிபியன் நாட்டுக்கெதிராக கொண்டுவந்த பொருளாதாரத்தடைகளை திரும்பப்பெற்றுக்கொண்டது.
- 1977 - ஆறு ஆண்டுகள் சிறைக்குப் பின் ஜனதா விமுக்தி பெரமுன தலைவர் றோகண விஜேவீர விடுதலை செய்யப்பட்டார்.
- 1979 - சவுதி அரேபியாவில் மெக்காவில் காபா மசூதியைத் தாக்கிய சுணி முஸ்லிம் தீவிரவாதிகள் 6,000 பேரைப் பணயக் கைதிகளாக்கினர். பிரெஞ்சுப் படைகளின் உதவியுடன் இத்தாக்குதல் முறியடிக்கப்பட்டது.
- 1985 - மைக்ரொசொஃப்ட்டின் விண்டோஸ் 1.0 வெளியிடப்பட்டது.
- 1988 - ராஜிவ் காந்திக்கும் மிக்கைல் கோர்பசேவுக்கும் இடையே இரு அணு உலைகளைக் கூடங்குளத்தில் அமைப்பது என்ற ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. எனினும் சோவியத் கலைப்பை அடுத்து இத்திட்டம் கைவிடப்பட்டது.
- 1992 - இங்கிலாந்தில் வின்சர் அரண்மனையில் தீ பரவியதில் பலத்த சேதம் ஏற்பட்டது.
- 1993 - மகெடோனியாவில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 116 பயணிகளில் 115 பேரும் 8 சிப்பந்திகளும் உயிரிழந்தனர்.
- 1994 - அங்கோலா அரசுக்கும் யுனீட்டா தீவிரவாதிகளுக்கும் இடையே சாம்பியாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியதில் 19 ஆண்டு கால உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. எனினும் அடுத்த ஆண்டு போர் மீண்டும் ஆரம்பமாயிற்று.
- 1998 - பன்னாட்டு விண்வெளி நிலையத்தின் முதலாவது பகுதி சாரியா விண்ணுக்கு அனுப்பப்பட்டது.
- 1999 - மன்னார் மடு தேவாலயம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 42 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

பிறப்புகள்

- 1750 - திப்பு சுல்தான், மைசூர் பேரரசன். (இ.1799)
- 1858 - செல்மா லோவிசா லேகர்லாவ், இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற சுவீடியர் .(இ.1940)
- 1889 - எட்வின் ஹபிள், அமெரிக்க வானியலாளர். (இ. 1953)
- 1905 - மினூ மசானி, இந்திய அரசியல்வாதி. (இ. 1998)
- 1923 - நாடின் கார்டிமர், இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற தென்னாப்பிரிக்க எழுத்தாளர். (இ. 2014)
- 1942 - ஜோ பைடன், அமெரிக்க அரசியல்வாதி.
- 1980 - ஷாலினி, தென்னிந்தியத் திரைப்பட நடிகை.

இறப்புகள்

- 1910 - லியோ டால்ஸ்டாய், உருசிய எழுத்தாளர். (பி. 1828)
- 1975 - பிரான்சிஸ்கோ பிராங்கோ, எசுப்பானிய அரசியல்வாதி. (பி. 1892)

சிறப்பு நாள்

- யுனிசெஃப் - குழந்தைகள் நாள்.
- மெக்சிக்கோ - புரட்சி நாள். (1910)
- வியட்நாம்- ஆசிரியர் நாள்.(Ngày nhà giáo Vi?t Nam)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 100 | 80 | 80 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 100 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 40 | 80-100 | 45 | 120 |
| தக்காளி | 40 | 60 | 45 | 60 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 | 50 | 60 | 60 |
| கோவா | 50 | 80 | 40 | 60 | 70 | 80 |
| கரட் | 120 | 80 | 70 | 120 | 80 | 160 |
| பூசணி | 30 | 30 | 25 | 40 | 40 | 50 |
| புடோல் | 50 | 60 | 30 | 60 | 40 | 60 |
| வாழைக்காய் | 40 | 60 | 40 | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 100 | 100 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 80 | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 120 | 200 | 95 | 160 | 100 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 60 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 70 | 80 | 80 | 100 |
| பயற்றங்காய் | 80 | 100 | 100 | 160 | 90 | 160 |
| லீக்ஸ் | 80 | 200 | 90 | 120 | 100 | 120 |
| பீற்றூட் | 80 | 50 | 50 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 140 | 120 | 105 | 160 | 110 | 160 |
| முருங்கைக்காய் | 60 | 50 | 30 | 80 | 60 | 120 |
| போஞ்சி | 160 | 200 | 180 | 160 | 160 | 200 |
| கத்தரிதும்புள்ள | 40 | 30 | 30 | 60 | 50 | 60 |
| கீரை - 1பிடி | 20 | 30 | 20 | 30 | 20 | 40 |
| தேசிக்காய் | 500 | 400 | 400 | 600 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 15-35 | 50 | 35 | 35-45 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | 200 |
| முள்ளங்கி | 50 | — | 30 | 50 | 50 | 80 |
| பொன்னாங்காணி | 30 | — | 15 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 10 | — | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | — | — | — | — | — |

## ஜாதிக ஹெல உறுமய புதிய அரசியலமைப்பு தொடர்பான கருத்து வாக்கெடுப்புக்கு எதிர்ப்பு



புதிய அரசியலமைப்பு குறித்து கருத்து வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. கொழும்பில் நேற்று முந்தினம் செய்தியாளர் மாநாடு ஒன்றில் உரையாற்றிய போது ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரான அமைச்சர் சம்பிக்க ரணவக்க, இதனைத் தெரிவித்துள்ளார்.

"புதிய அரசியலமைப்பு குறித்து கருத்து வாக்கெடுப்பு நடத்தப்படத் தேவையில்லை. ஆனால் நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளின் ஒருமித்த ஆதரவுடன் புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்படும்.

அரசியல் சார்பு மற்றும் செல்வாக்குச் செலுத்தக் கூடிய ஏனைய காரணிகளால் கருத்து வாக்கெடுப்பு மக்களின் கருத்தைப் பிரதிபலிக்காது.

பிரித்தானியாவில் நடத்தப்பட்ட, பிரெக்சிட் கருத்து வாக்கெடுப்பு இதற்கு ஒரு உதாரணம்.

இந்த வாக்கெடுப்பினால் அரசியல் மற்றும் பொருளாதார தளம்பல் நிலை மற்றும பிளவுகள் போன்ற தேவையற்ற பிரச்சினைகள் பிரித்தானியாவில் ஏற்பட்டன.

நாம் கருத்து வாக்கெடுப்பை நடத்தினாலும் அதே போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தனது பிரிவினை அரசியல் பரப்புரைக்கு இதனைப் பயன்படுத்தக் கூடும்.

மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது ஊழல் கூட்டாளிகள் இதனைத் தமது வங்குரோத்து பரப்புரைக்காக பயன்படுத்திக் கொள்வார்கள்.

முன்னர் சிறிமாவோ பண்டாரநாயக்கவும் ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் கருத்து வாக்கெடுப்பை நடத்தாமல், நாடாளுமன்றப் பெரும்பான்மையைக் கொண்டே புதிய அரசியலமைப்புகளை நடைமுறைப்படுத்தினார்கள்.

இப்போது எல்லாக் கட்சிகளுமே புதிய அரசியலமைப்பு தேவை என்று இணங்கியுள்ளன. எல்லாக் கட்சிகளும் யோசனைகளை சமர்ப்பித்துள்ளன. எனவே அனைவரதும் ஒருமித்த ஆதரவுடன் இதனை நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(இ-7-10)

## வடக்கிலுள்ள சாதாரண மக்களுக்கும் புலி முத்திரை குத்துவதற்கு முயற்சி!

(கொழும்பு)

வடக்கில் உள்ள சாதாரண தமிழ் மக்களுக்கும் புலி முத்திரை குத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று நீதித் துறை அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற, வரவு-செலவுத்திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான இறுதி நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஆவா குழுவுக்கு, விடுதலைப் புலிகள் என்றும் முத்திரையை குத்த முயற்சிக்கப்படுகிறது. இராணுவத்தினரை வேட்டையாடுவதாகவும் எம்மீது குற்றச்சாட்டொன்றுள்ளது. இந்த நாட்டில் சட்டமொன்று இருக்கிறது. இராணுவத்தினரை நாம் மதிக்கும் அதேநேரம், விடுதலைப் புலிகள் அமைப்பினருக்கு உதவி புரிந்தமைக்காக மற்றும் உளவு பார்த்தமைக்காகவே சில இராணுவத்தினர் சிறைக்கு சென்றுள்ளனர். ஆகவே, தவறிழைத்தால் அவர்களும் சட்ட நடவடிக்கைக்கு உட்பட்டே ஆக வேண்டும்.

யுத்தத்தில், நல்லயுத்தம், கூடாத யுத்தம் என்றில்லை என்பதுடன் சமாதானத்திலும் நல்ல சமாதானம், கூடாத சமாதானம் என்றும் இல்லை. அத்துடன், கொள்ளை, கொலை மற்றும் பாலியல் குற்றங்களுடன் தொடர்புபட்டு நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள படை வீரர்களை, நாட்டைக்காத்த ரணவிருவா, என்று ஏற்றுக் கொளளுமாறு வலியுறுத்தும் குழுவினர் அதனை கைவிட வேண்டும். நல்லாட்சி அரசாங்கமானது படைவீரர்களுக்கு வழங்கவேண்டிய மரியாதையை வழங்கிக் கொண்டுதான் இருக்கிறது என்றும் தெரிவித்தார்.(இ-7-10)



## சு.கவை பிளவடையச் செய்யும் பாவச்செயலில் ஈடுபடவேண்டாம்

### மகிந்தவிடம் கோரிக்கை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவடையச் செய்யும் பாவச் செயலில் ஈடுபட வேணடாம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணி இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இவ்வாறு கட்சியை பிளவடையச் செய்வதனால் அதன் நன்மைகள் சுதந்திரக் கட்சிக்கோ அதன் உறுப்பினர்கள், ஆதரவாளர்களுக்கோ கிடைக்கப்பெறாது என இளைஞர் முன்னணியின் தலைவர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.



கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட புதிய கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எந்த வகையிலும் சவாலாக அமையாது.

மகிந்த ராஜபக்ஷவின் பெயரை விற்று சிலர் அரசியல் இலாபமீட்ட முயற்சிக்கின்றனர்.

எவ்வாறான சவால்கள் வந்தாலும் சுதந்திரக் கட்சியை வலுப்பெறச் செய்யும் முயற்சிகள் கைவிடப்படாது என அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## பண்டாரவெலவில் இருபேருந்துகள் மோதி விபத்து! 40 பேர் காயம்



கொழும்பு - பதுளை பிரதான வீதியில் பண்டாரவெல ஹல்பே பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற பேருந்து விபத்தில் சுமார் 40 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இ.போ.ச.பேருந்தும் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்தும் ஒனறுடன் ஒன்று மோதிக் கொணடதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர்கள் பலாங்கொட ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.(இ-7-10)

## வாரம் ஒரு தகவல்

### வித்தையின் விலை

இராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு முறை கங்கைக் கரையில் தியானத்தில் அமர்ந்திருந்தார். தியானம் முடிந்து கண் திறந்த போது, ஒருவர் நீர் மேல் நடந்து வருவதைக் கண்டார். இதைப் பார்த்து இராமகிருஷ்ணர் சிரிக்கலானார்.

அம்மனிதர் இராமகிருஷ்ணர் அருகே வந்து இந்தக் கடினமான வித்தையை நான் பத்து ஆண்டுகளாக முயன்று கற்றுத் தேர்ந்துள்ளேன்; இதைக் கண்டு நீங்கள் ஏனோ சிரிக்கிறீர்கள்? என்று கேட்டார்.

இல்லை, நீர் கற்ற வித்தை காலணாவுக்குத் தான் பயன்படும் என்று பதில் கூறினார் இராமகிருஷ்ணர்.

அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள்? என்று மீண்டும் கேட்டார் அம் மனிதர். காலணா கொடுத்தால் தான் படகில் கரையைக் கடந்து விடலாமே! என்று பதிலளித்தார் இராமகிருஷ்ணர்.

**கவிஞர் தே.ப.பெருமாள்**

## அம்பாந்தோட்டை துறைமுகம் 50ஆண்டுகள் இலாபமீட்டாது

### அமைச்சர் அர்ஜுன தெரிவிப்பு

அடுத்து வரும் 50 ஆண்டுகளுக்கு அம்பாந்தோட்டை துறைமுகம் இலாபத்தை ஈட்டாது என்று துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சர் அர்ஜுன. ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"அம்பாந்தோட்டை துறைமுகத்தை கட்டியதால் ஏற்பட்டுள்ள கடன் சுமைகளை தாங்கிக் கொள்ள முடியாது. எனவே, இந்த துறைமுகத்தை கூட்டு முயற்சியாக நிர்வகிக்கவும் செயற்படுத்தவும அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பான உடன்பாடு அடுத்த சில வாரங்களுக்குள் இறுதிப்படுத்தப்படும்.

இவ்வாறு செய்யாது போனால அடுத்த 50, 100 ஆண்டுகளுக்கு இந்தக் கடனுக்கான வட்டியைச் செலுத்திக் கொண்டிருக்க வேண்டியிருக்கும்.

இந்த துறைமுகத்தை அமைப்பதற்கு 750 மில்லியன் டொலர்கள் தேவை என்று சீன நிறுவனம் மதிப்பீடு செய்திருந்தது.

ஆனால் 1.5 பில்லியன் டொலர் செலவில் இந்த துறைமுகம் அமைக்கப்பட்டது. எனவே எஞ்சிய நிதிக்கு என்ன நடந்தது?" என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (இ-7-10)

## ஆஸிக்கு புகலிடக்கோரிக்கையாளர்கள் படகுகளைக் கட்டுப்படுத்துவதில் வெற்றி

அவுஸ்திரேலியாவுக்கு ஆட்களைக் கடத்தும் படகுகளின் வருகையை கட்டுப்படுத்துவதில் Operation Sovereign Borders வெற்றி பெற்றுள்ளதாக அவுஸ்திரேலியா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வெற்றியானது கடல் எல்லை பாதுகாப்பு உறுதியாக செயற்படுவதை வெளிக்கொணர்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் அவுஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமான முறையில் படகு மூலம் புகலிடம் கோர முயற்சிப்பவர்களின் எந்தவொரு படகும் இடை நிறுத்தப்பட்டுத் திருப்பி அனுப்பப்படும் எனவும் மீண்டும் அவுஸ்திரேலியா அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

Operation Sovereign Borders ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 29 படகுகளில் புகலிடம் கோரிய 740 இற்கும் மேற்பட்டோர் இடைநிறுத்தப்பட்டு மீண்டும் அவர்களின் நாடுகளுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

அத்துடன் நவுறு. மற்றும் பப்புவா நியூகினியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகளை அமெரிக்காவில் குடியேற்றுவதற்கு அமெரிக்கா இணங்கியுள்ளதாகவும் அவுஸ்திரேலியா அரசாங்கம் அறிவித்துள்ளது.

பெண்கள், குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் எனவும் இந்த செயற்றிட்டமானது ஒரு தடவை மாத்திரமே மேற்கொள்ளப்படும் எனவும் அவுஸ்திரேலியா அரசாங்கம் தெரிவித்துள்ளது. (இ-7-10)

# எட்கா உடன்படிக்கையால் பாதிப்பு ஏற்படின் முன்னறிவிப்புடன் இரத்து செய்யப்படும்



## அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவிப்பு

தற்பொழுது பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்பட்டுள்ள பொருளாதார தொழில் நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் (எட்கா) உள்ளிட்ட எந்தவொரு ஒப்பந்தமும் நாட்டுக்கு இழப்பை ஏற்படுத்துமாயின் ஆறுமாத முன் அறிவிப்புடன் அந்த ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியும் என அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்தார். 23/2 நிலையியற் கட்டளையின் கீழ் டக்ளஸ் தேவானந்தா எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

இந்த வர்த்தக ஒப்பந்தம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உள்ளிட்ட பலரை சந்தித்து அவர்களின் கருத்துக்களை அறிந்து கொண்டோம், தொடர்ந்தும் இவ்வாறான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு அவர்களின் கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்படும் என்றார்.

"வர்த்தக ஒப்பந்தங்களின் ஊடாக ஏற்றுமதி மாத்திரமன்றி இறக்குமதிக்கும் சர்வதேச சந்தைவாய்ப்புக் கிடைக்கும். இருதரப்பு அல்லது பல்தரப்பு ஒப்பந்தமாக இருந்தாலும் ஏற்றுமதி, இறக்குமதிக்கு அது வழியை ஏற்படுத்தும். இதனால் சம்பந்தப்பட்ட தொழிற்றுறைகளில்முன்னேற்றம் ஏற்படும். குறிப்பாக சீனாவுடன் 451 பொருட்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்த எதிர் பார்த்துள்ளோம். இதன் ஊடாக நாட்டின் ஏற்றுமதி 500,000 அமெரிக்க டொலர களிலிருந்து 1 பில்லியன் டொலர்கள் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கின்றோம்" எனவும் தெரிவித்தார்.

இந்தியாவுடனான ஒப்பந்தத்தில் ஆடைத்துறை மற்றும் மிளகுக்கான கோட்டாக்களை இல்லாமல் செய்வதற்கு எதிர்பார்த்துளளோம். முதலீட்டுக்கான வசதிகள் என்பனவும் வர்த்தக ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்படும். இதனூடாக வெளிநாட்டு முதலீடுகள் நாட்டுக்குள் கொண்டு வரப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# இலங்கை உள்நாட்டுப்போர் குறித்த சிவசங்கர் மேனனின் நூல் வெளியீடு




இலங்கையில் இடம்பெற்ற போர் உள்ளிட்ட ஐந்து முக்கிய விவகாரங்களில் இந்தியாவின் வெளி விவகாரக் கொள்கை முடிவுகள் தொடர்பான உள்ளகத் தகவல்களை உள்ளடக்கிய நூல ஒன்றை, இந்தியாவின் முன்னாள் இராஜதந்திரி சிவசங்கர் மேனன் எழுதி வெளியிட்டுள்ளார்.

இந்தியாவின் வெளி விவகாரச் செயலராக 2006ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை பதவி வகித்த சிவசங்கர் மேனன், அந்தப் பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர், 2010 ஜனவரி தொடக்கம் 2014 மே மாதம் வரை தேசிய பாதுகாப்பு ஆலோசகராக பணியாற்றியிருந்தார்.

இவர் இந்திய வெளிவிவகாரக் கொள்கை தொடர்பான முடிவுகளை எடுக்கும் செயல் முறைகள் தொடர்பான உள்ளகத் தகவல்கள் அடங்கிய நூல் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார்.

"Choices: Inside the Making of Indias Foreign Policy"(வாய்ப்புகள் - இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை உருவாக்கத்தின் உள்ளே) என்ற தலைப்பிலான இந்த நூல் நேற்று முன்தினம் வெளியாகியுள்ளது.

எனினும், இந்த நூல் அதிகாரபூர்வமாக எதிர்வரும டிசெம்பர் 2ஆம் திகதி டில்லியில் உள்ள இந்திய அனைத்துலக நிலையத்தில் வெளியிடப்படவுள்ளது.

இந்த நூலில், தற்போது இந்தியாவில், அண்மைய வரலாற்றில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய ஐந்து முக்கியமான தருணங்கள் தொடர்பாக சிவசங்கர் மேனன் விபரித்துள்ளார்.

வெளிவிவகாரச் செயலராக இருந்த காலப்பகுதியில், தாம் நேரடியாகவோ, இணைந்தோ எடுத்த சில முக்கியமான இந்திய வெளி விவகாரக் கொள்கை முடிவுகள் குறித்தும் அவர் இந்த நூலில் குறிப்பிட்டுள்ளார்.



2009 இல் தோற்கடிக்கப்பட்ட, இலங்கையில் உள்நாட்டுப் போர், இந்திய - அமெரிக்க அணுசக்தி உடன்பாடு, இந்திய- சீனா இடையிலான முதலாவது எல்லை தொடர்பான உடன்பாடு, மும்பையில் நடந்த 26/11 தீவிரவாத தாக்குதலுக்குப் பின்னர் பாகிஸ்தானுக்கு எதிராக பலத்தைப் பயன்படுத்துவதில்லை என்று இந்தியா எடுத்த முடிவு, அணுவாயுதங்களை முதலில் பயன்படுத்துவதில்லை என்ற இந்தியாவின் முடிவு ஆகிய ஐந்து பிரதான விடயங்கள் குறித்து இந்த நூலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவின் துறைசார் இராஜதந்திரியான சிவசங்கர் மேனன், இஸ்ரேல், சீனா பாகிஸ்தானுக்கான தூதுவராகவும் பணியாற்றியவர்.

இந்திய வெளிவிவகாரச் செயலராகப் பதவியேற்பதற்கு முன்னர் அவர், 1997 தொடக்கம், 2000ஆம் ஆண்டு வரை, இலங்கைக்கான இந்தியத் தூதுவராகப் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# பட்ஜெட்டுக்கு ஆதரவளித்த தமிழ்க் கூட்டமைப்பின் மீது சிவாஜிலிங்கம் கடும் விசனம்

(யாழ்ப்பாணம்)

வரவு செலவு திட்டமானது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நிபந்தனையின்றிய ஆதரவு வழங்கியமைக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கடுமையான விசனம் தெரிவித்துள்ளதோடு வெளிநாட்டு பிரதிநிதிகளை இரா.சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் மாத்திரமே சந்திப்பதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்ட விடயங்களை குறிப்பிட்டிருந்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண மட்டத்திலான அபிவிருத்திகளையே மாகாணசபை உறுப்பினர்கள் செய்ய வேண்டும் எனவும் தேசிய ரீதியிலான விடயங்களை பாராளுமன்ற உறுப்பினர்களே செய்ய வேண்டும் எனவும் கூறுகின்றார்கள். இவ்வாறான நிலையில் பாராளுமன்றத்தில் அவர்கள் இறுக்கமான கோரிக்கைகளையும் நிபந்தனைகளையும் முன்வைத்து அரசாங்கத்துடன் பேச வேண்டும்.

ஆனால் அத்தகைய செயற்பாடுகள் எதனையும் அவர்கள் செய்யவில்லை. குறிப்பாக எதிர்வரும் ஆண்டுக்குரிய வரவு செலவு திட்டத்தைக் கூட தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது எந்தவிதமான நிபந்தனையுமின்றி ஆதரித்துள்ளது. இவர்கள் இவ்வரவு செலவு திட்டத்தை ஆதரிப்பதற்கு மக்களது காணிகள் முழுமையாக மீள கையளிக்கப்பட வேண்டும், மாவீரர் துயிலும் இல்லங்களில் உள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும் போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து அதன் பின்னர் இவ் வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவளித்திருக்கலாம். ஆனால் அவ்வாறான எந்த நடவடிக்கையையும் அவர்கள் செய்யவில்லை.

பாராளுமன்றத்தில் இது போன்ற விடயங்களுக்கு வாக்களிப்பதற்கு முன்னர் தத்தமது கட்சிகளுடன் பேசுவதுமில்லை. இவ்வாறான சந்தர்ப்பங்களில் அது எந்தக் கட்சியாக இருந்தாலும் கூட்டமைப்பானாலும் சரி அல்லது அதனுள் அங்கம் வகிக்கக் கூடிய கட்சியானாலும் சரி இது விடயங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான விவாதங்களை நடத்தி தீர்வு தொடர்பாக பரவலாக பேசி இறுதி தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

மேலும் வெளிநாட்டு பிரதிநிதிகள் வருகின்ற போது அவர்களோடு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் எதிர்க்கட்சி தலைவரும் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனும் மாத்திரமே சந்திப்புக்களில் ஈடுபடுகின்றார்கள். இவ்விடத்தில் இது தொடர்பாக நாம் ஏன் சந்திக்க முடியாது என்று எமது கட்சி தலைமைகளும் சிந்திப்பதில்லை.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலிலே ஹிலாரி வெற்றி பெற வேண்டும் என்பதற்காக நான் தேங்காய் உடைத்த போது அதற்கு சிவாஜி தேங்காய் உடைத்ததால் கூட்டமைப்பு இளநீர் குடிக்க வேண்டியுள்ளது என கூறினார்கள். அப்படியாயின் சுமந்திரன் எம்மை அழித்த இராணுவ வீரர்களை நினைவுகூரும் நிகழ்வில் பொப்பி மலரினை அணிந்தார். அப்போது துரோகம் இழைத்துவிட்டார்கள் என்ற பட்டியலில் நாமும் சேர் ந்தே இணைந்திருந்தோம். ஆனால அதற்காக நாம் எதுவும் பேசவில்லையே.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலிலே கூட்டமைப்பு நடுநிலை வகிக்க வேண்டும் என்று தீர்மானங்கள் எதுவும் எடுத்திருப்பின நான் செய்ததை கண்டித்திருக்க முடியும். ஆனால் அப்படியான எதுவும் இடம்பெறவில்லை. ஆகவே நாம் ஹிலாரியை ஆதரிக்க வேண்டும் என்று கூறியது தமிழர்களது பிரச்சினைக்கு சர்வதேச ரீதியான நீதியும் தீர்வும் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே என மேலும் தெரிவித்தார்.(இ-4)

# 150தொழிற்சாலைகளை அமைக்க சீன முதலீட்டாளர்கள் குழு திட்டம்

சீன முதலீட்டாளர்கள் குழுவொன்று இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டு, புதிய முதலீட்டு வாய்ப்புகள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

தெற்கு ஒத்துழைப்புக்கான சீன பேரவையின் பிரதி பணிப்பாளர் ஷியாவோ லிமின் ஒருங்கிணைப்பில், 12 சீன முதலீட்டாளர்கள் இலங்கைக்கான பயணத்தை மேற கொண்டுள்ளனர். இவர்கள் இலங்கையின் அமைச்சர்கள் பலரையும் சந்தித்து முதலீட்டு வாய்ப்புகள் குறிதது கலந்துரையாடியுள்ளனர்.

அம்பாந்தோட்டை முதலீட்டு வலயத்தில் முதலீடுகளைச் செய்வதில் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ள இவர்கள் இயற்கை எரிவாயு மின்திட்டம் ஒன்றை ஆரம்பிபதற்கும் விருப்பம் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் 150 தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும் சீன முதலீட்டாளர்கள் ஆர்வம் காட்டியுள்ளனர்.

வடக்கு கிழக்கிலும் பாரிய திட்டங்களை முன்னெடுப்பதற்கு சீன முதலீட்டாளர்கள் இலங்கை அமைச்சர்களிடம் விருப்பத்தை வெளியிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7-10)

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 16.11.2016-15.12.2016

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



***சுய கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல் நடந்து கொள்ளும் துலாம் இராசி நேயர்களே!***




## தளர்ச்சி அகலும்!

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்ரன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். லாபாதிபதி 2 இல் விரயாதிபதியோடு கூடியிருக்கின்றார். எனவே தேவைக் கேற்ற பணம் வந்து கொண்டேயிருக்கும். சேமிப்புக் கரையாது என்றாலும் ஏழரைச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் ஒருசில சமயங்களில் பணத்தட்டுப்பாடு அதிகரிக்கும்.

விரய ஸ்தானத்தில் குரு வீற்றிருப்பது யோகம் தான். 6 இற்கு அதிபதியாகவும் 3 இற்கு அதிபதியாகவும் விளங்கும் குரு பகவான் 12 இல் சஞ்சரிக்கும் பொழுது வெளிநாட்டுத் தொடர்பால் ஒரு சிலருக்கு நன்மை கிடைக்கும். படித்து முடித்து வெளிநாட்டு வேலைக்கு விண்ணப்பித்தவர்கள், மேல்படிப்பு படிக்க வெளிநாடு செல்ல வேண்டுமென்று நினைத்தவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். இடமாற்றம், ஊர்மாற்றம், வீடு மாற்றம், நாடு மாற்றம் போன்றவைகள் விரும்பும் விதத்தில் அமையும்.

பொருத்தமான வரன்கள் வரவில்லையே, புதிய பாதை புலப்படவில்லையே, வந்த வரன்கள் எல்லாம் வாயிலோடு நிற்கிறதே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது மகிழ்ச்சியடையும் விதத்தில் மணமாலை சூடும் வாய்ப்பு வரப்போகின்றது. களத்திர ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் கல்யாண யோகம் கைகூடும்.

தொழில் ஸ்தானத்தைச் செவ்வாய் பார்ப்பதால் தொழில் வளர்ச்சி கூடுதலாகவே இருக்கும். சுய தொழில் செய்பவர்கள் இடமாற்றம் செய்து தொழில் நிலையத்தை மாற்றி அமைத்துக்கொள்வதன் மூலம் வருமானத்தை உயர்த்திக் கொள்ள இயலும். வீடு கட்ட, வாங்க கடனுதவி கிடைக்கும். ஏழரைச் சனி நடப்பதால் வேலைப் பளு கூடுதலாகத் தான் இருக்கும். இருப்பினும் உழைப்பிற் கேற்ற பலன் உண்டு. மாதக் கடைசியில் பிள்ளைகளால் பெருமை வந்து சேரும். சண்முகநாதப் பெருமானை கார்த்திகையன்று வழிபாடு செய்யுங்கள். சந்திரபலக் குறைவோடு மாதம் தொடங்குவதால் கிரிவலம் வருவதன் மூலம் பலன் கிடைக்கும்.

**தனுசு புதனின் சஞ்சாரம்!**

உங்கள் இராசிக்கு 9, 12 இற்கு அதிபதியானவர் புதன். அவர் நவம்பர் 25 ஆம் திகதி சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாகப் பெற்றோர் வழியில் இருந்த விரிசல்கள் அகலும். அவர்களின் ஆதரவு உங்களுக்கு கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் ஏற்பட்ட சலசலப்புகள் அகலும்.

**மகர சுக்ரனின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 4 ஆம் திகதி மகர இராசிக்குச் சுக்ரன் செல்கின்றார். உங்கள் திறமை பளிச்சிடும். தெய்வீக சிந்தனை மேலோங்கும். விடாப்பிடியாக சில காரியங்களைச் செய்து வெற்றி காண்பீர்கள். கட்டடத் திறப்பு விழா, கடைத்திறப்பு விழாக்களை நடத்திப் பார்க்கும் நேரமிது. அஞ்சல் வழி அனுகூலம் உண்டு. அச்சுறுத்தும் நோய்கள் அகலும். தொழில் கூட்டாளிகளை விலக்கி விட்டுத் தனித்து இயங்க முற்படுவீர்கள்.

**கும்பச் செவ்வாயின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 6 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். தனாதிபதி பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது குழந்தைகளாலும் உங்களுக்கு வருமானம் வந்து சேர வேண்டும். உடன் இருப்பவர்களாலும் வருமானம் வந்து சேர வேண்டும். எனவே வாரிசுகளுக்கும், வாழ்க்கைத் துணைக்கும் வேலை கிடைக்கும். இதுவரை தள்ளிப்போன காரியங்கள் தானாக நடைபெறும். சொத்துப பிரச்சினைகள் சுமுகமாக முடியும். இம்மாதம் மகாலட்சுமி வழிபாடு மகிழ்ச்சியான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

**பெணகளுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் உறவினர்கள் ஒத்துழைப்பு கூடுதலாக கிடைக்கும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். ஆரோக்கியத் தொல்லை அகலும். வீடு மாற்றங்கள் விரும்பும் விதத்தில் அமையும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உங்கள் சேமிப்பு கணவரது முன்னேற்றத்திற்கு கை கொடுக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவீர்கள். மாதக் கடைசியில் சுபச்செலவுகள் அதிகரிக்கும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். சனிக்கிழமை அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. 5 இல் கேதுவும், 11 இல் ராகுவும் இருப்பதால் சர்ப்ப கிரக வழிபாட்டையும் முறையாக செய்தால் ஒப்பற்ற வாழ்க்கைக்கு உத்தரவாதம் கிடைக்கும்.



***வெற்றியை இலக்காகக் கொண்டு செயற்படும் விருச்சிக இராசி நேயர்களே!***




## செல்வாக்கு உயரும்!

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் உச்சம் பெற்று சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்கும். மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசியில் சூரியன், புதன், சனி ஆகிய மூன்று கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. எனவே புத ஆதித்ய யோகம் உருவாகின்றது.

மாதத்தொடக்கத்திலேயே உச்சம் பெற்ற சந்திரனை குரு பார்ப்பதால் குருச் சந்திர யோகமும் உருவாகின்றது. இத்தனை யோகங்களுக்கு மத்தியில் பிறக்கின்ற இந்த மாதம் உங்களுக்கு ஈடு இணையற்ற மாதமாகும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பொருளாதாரம் நினைக்க இயலாத அளவு உயரும். சகோதர ஒற்றுமை பலப்படும்.

குரு பகவான் உங்களுக்குச் சாதகமாக விளங்குகின்றார். குருவின் அனுகூலமிருந்தால் கொடிகட்டிப் பறக்கும் யோகம் உண்டு என்பார்கள். அரசியல் யோகம் முதல் அயல்நாட்டு யோகம் வரை உங்களுக்கு குரு பகவான் கொடுக்கப் போகின்றார். அதன் அருட்பார்வை 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிகிறதல்லவா? எனவே நல்ல மாற்றங்கள் இல்லம் தேடி வரும்.

ஜென்மச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் சிறு சிறு உடல்நிலைத் தொல்லைகள் ஏற்பட்டாலும் வைத்தியரின் ஆலோசனையால் அவை சரியாகிவிடும். சனி கொஞ்சம் வலிமை இழந்திருப்பதால் தடைப்பட்ட காரியங்கள் இனி தானாகவே நடைபெறும். அரசியல்வாதிகளால் அனுகூலம் உண்டு.

ஜென்மச் சனிக்குப் பரிகாரமாக ஆனைமுகப் பெருமானையும் அனுமனையும் வழிபடுவது நல்லது. சனிக்கிழமை விரதமிருந்து இந்த வழிபாட்டை மேற்கொண்டால் சந்தோசங்கள் நாளும் வந்து சேரும். பௌர்ணமி கிரிவலம் வருவது பலன் தரும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

நவம்பர் 25 ஆம் திகதி உங்கள் இராசிக்கு அஷ்டம லாபாதிபதியான புதன் தனுசு இராசிக்கு செல்கின்றார். இதன் விளைவாக வருமானம் இருமடங்காக உயரும். அருமை உடன்பிறப்புகள் உங்களுக்கு அனுகூலமாக நடந்து கொள்வர். உங்கள் இலட்சியக் கனவுகள் நிறைவேற நண்பர்களின் நல் ஆதரவு கிடைக்கும். நெருக்கமான அரசியல்வாதிகளால் நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். மாமன், மைத்துனர் வழியில் மகிழ்ச்சியான தகவல் வந்து சேரும்.

**மகர சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் இராசிக்கு 7, 12 இற்கு அதிபதியான சுக்ரன், டிசெம்பர் 4 ஆம் திகதி சகாய ஸ்தானத்திற்கு செல்கிறார். எனவே திருமண முயற்சிகளில் உங்களுக்கு வெற்றி கிடைக்கும். கல்யாண வாய்ப்புகள் கைகூடச் செய்த பரிகாரங்களுக்கு இப்பொழுது பலன் கிடைக்கப் போகின்றது. பெண்களால் பெருமை வந்து சேரும்.

**கும்பச் செவ்வாயின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 6 ஆம் திகதி கும்ப இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகின்றார். தைரியகாரகன் செவ்வாய் சுக ஸ்தானத்தில் சஞ்சரித்து தொழில் ஸ்தானத்தைப் பார்க்கும் இந்த நேரம் பொன்னான நேரமாகும். தொட்டது துலங்கும். தோள் கொடுத்து உதவும் நண்பர்களின் எண்ணிக்கை உயரும். பட்டி தொட்டிகளில் எல்லாம் உங்கள் புகழ் பரவும். பணிபுரியும் இடத்திலும் உங்களுக்கு உயர்வு கிடைக்கும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்குத் தக்க விதத்தில் தலைமைப் பொறுப்புகள் கிடைக்கலாம். இம்மாதம் ஆனைமுகப் பெருமானை வழிபாடு செய்வதோடு ஆறுமுகப் பெருமானைக் கார்த்திகை நாளிலும் அனுமனை சனிக்கிழமையிலும் வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் வெற்றிப்படிக்கட்டின் விளிம்பில் ஏறும் மாதமாகும். கற்ற கல்விக்கேற்ற வேலை கிடைக்கும். கனிவாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். உற்றார், உறவினர் உதவிக்கரம் நீட்டுவர். உடல் ஆரோக்கியம் சீராகும். உடன்பிறப்புகள் உங்கள் எண்ணங்கள் பூர்த்தியாக வழிவகுப்பர். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குடும்பப் பெரியவர்கள் உங்கள் பெயரிலேயே வீடு, வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். பிறந்த வடும், புகுந்த வீடும் உங்களுக்கு பெருமை சேர்க்கும் மாதமிது. முருகப் பெருமான் வழிபாடும் அனுமன் வழிபாடும் அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொடுக்கும்.

(தொடரும்)

# உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக புலமைப்பரிசில் பரிசுகள்

(மல்லாவி)

ஜனாதிபதி செயலகத்தினால் வடக்கு மாகாணம் உட்பட நாடு தழுவிய ரீதியிலுள்ள கல்வி வலயங்களில் கல்வி பயின்று வருகின்ற பாடசாலை மாணவர்களில் இருந்து கடந்த 2015ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில் முதல் தடவையாக பரீட்சை எழுதி சித்தி அடைந்து க.பொ.த உயர்தரப் பிரிவில் கல்விகற்று எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக புலமைப்பரிசில் பரிசு களை வழங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளரும் ஜனாதிபதி நிதியத்தின் செயலாளருமான டி.என்.நாணயக்காரா அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா வருமானத்திற்குட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கே இப்புலமைப்பரிசில் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திற்குட்பட்ட 12 கல்வி வலயங்களிலும் இருந்து தலா 100 மாணவர்கள் வீதம் 12 கல்வி வலயங்களிலும் இருந்து ஆயிரத்து 200 மாணவர்கள் தெரிவாகவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படும்மாணவர் ஒருவருக்கு மாதாந்தம் 500 ரூபா வீதம் 24 மாணவர்களுக்கு மொத்தம் 12 ஆயிரம் ரூபா பணம் கல்வித் தேவைகளுக்காக வழங்கப்படும்.

இப்புலமைப்பரிசில் பரிசு பெறுவதற்கு அரசாங்க பாடசாலைகள் மற்றும் கட்டணம் அறவிடப்படாததும் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டதுமான தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் விண்ணப்பப்படிவங்களை தமது பாடசாலை அதிபரிடம் இருந்து பெற்று பூரணப்படுத்தி மீளவும் அதிபரிடம் ஒப்படைக்க வேண்டும்.

பாடசாலை அதிபர்கள் மாணவர்களது பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக தமது வலயக்கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

வலயக்கல்விப் பணிப்பாளர்கள் எதிர்வரும் டிசெம்பர் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மாகாண கல்விப் பணிப்பாளர் எதிர்வரும் 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி ஜனாதிபதியின் புலமைப்பரிசில் நிதியத்திற்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு அத்தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# 16 மில்லியன் ரூபா செலவில் நவீன விதை சுத்திகரிப்பு நிலையம்

## ஊற்றுப்புலத்தில் திறந்து வைப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஊற்றுப்புலத்தில் நவீன விதை சுத்திகரிப்பு நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைந்த பண்ணையாளர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்துக்கென 16 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட விதை சுத்திகரிப்பு நிலையத்தை வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைந்த பண்ணையாளர்கள் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளை ஒருங்கிணைத்து அவர்களுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதோடு தூய விதைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான பணிகளையும் முன்னெடுத்து வருகிறது. இந்நிலையில், விவசாயிகளுக்கான விதை நெல்லை இச்சங்கமே குறைந்த செலவில் சுத்திகரித்து வழங்கும் நோக்கில் வடக்குமாகாண விவசாயத் திணைக்களத்தின் ஊடாக விதை சுத்திகரிப்பு நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டம் விதை சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டடங்களை அமைக்க 11.6 மில்லியன் ரூபாவையும் சுத்திகரிப்பு இயந்திரங்களைக் கொள்வனவு செய்ய 4.4 மில்லியன் ரூபாவையும் வழங்கியுள்ளது. இந்நிதிக்கு மேலதிகமாக பயிற்சி வகுப்புக்களுக்கென 0.5 மில்லியன் ரூபாவையும் விதை சுத்திகரிப்புக்குத் தேவைப்படும் பொருட்களின் கொள்வனவுக்கு ஒரு மில்லியன் ரூபாவையும் வழங்கி உள்ளது. அத்தோடு விதை சுத்திகரிப்பு நிலையத்தை சிறப்பாக நடத்துவதற்கான முகாமைத்துவ ஆலோசனையை கைத்தொழில் பணியகத்தின் மூலம் வழங்கியுள்ளது.

விதை சுத்திகரிப்பு நிலையத்தின் திறப்பு நிகழ்ச்சியில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், பிரதி விவசாயப் பணிப்பாளர் பூ.உகநாதன் ஆகியோரும் மத்திய விவசாயத் திணைக்களத்தின் அதிகாரிகளும் விவசாயிகளும் கலந்து கொண்டிருந்தார்கள்.

விதை சுத்திகரிப்பு நிலையத்துக்கான அடிக்கல் ஒரு வருடத்துக்கு முன்பாக, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் திகதி அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் நாட்டப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (2)




# 13 மில்லியன் நிதிக்கான திட்டம்

## முல்லை.அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு என ஜப்பான் உயர்ஸ்தானிகர் ஆலயத்தால் 2017ஆம் ஆண்டு ஒதுக்கப்படவுள்ள சுமார் 13 மில்லியன் ரூபாவுக்கான திட்டமானது முல்லைத்தீவு மாவட்டத்தில் நிரந்தரமாக இயங்கி வரும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கே வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாக ஜப்பான் உயர்ஸ்தானிகர் ஆலயத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி தகவலை ஜப்பான் நாட்டை தளமாகக் கொண்டு இயங்கும் PARCIC நிறுவனத்தின் திட்ட இணைப்பதிகாரி அகிராலிடா மாவட்ட அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

கடந்த 15ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய மாதாந்த கூட்டத்தில் மேற்படி தகவலை அகிராலிடா வெளியிட்டார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜப்பானிய உயர்ஸ்தானிகரை அண்மையில் கொழும்பில் சந்தித்த போது அவர் மேற்கண்டவாறு கூறியதாகவும் ஆகவே முல்லைத்தீவை நிரந்தரமாகக் கொண்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது திட்டமுன்மொழிவுகளைத் தயாரித்து கொழும்பிலுள்ள ஜப்பான் கூட்டுத்தாதரகத்தில் கையளிக்கலாம் எனவும் குறிப்பிட்டார். (2-310)



நெடுங்கேணி நகரப்பகுதியிலுள்ள பிரதான வீதியில் கட்டாக்காலி மாடுகள் போக்குவரத்திற்கு இடையூறாக அலைந்து திரிவதால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக பயணிகள், பொதுமக்கள்,வாகன சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

ஆதலால் விபத்துகள் ஏற்பட்டு உயிர்ச்சேதங்கள் நிகழா வண்ணம் இருக்க உரிய அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா? என பாதிக்கப்பட்டவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

(படம்:-முள்ளியவளை செய்தியாளர்)

# சம்மளங்குள வீதி போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் சீர்செய்து தரப்படும்

## துணுக்காய் பிரதேச செயலாளர் உறுதிமொழி

முல்லைத்தீவு மல்லாவி பிரதேசத்திலுள்ள புகழேந்தி நகர் சம்மளங்குள வீதி போக்குவரத்திற்கு இடையூறாகவுள்ளதாக பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.



துணுக்காய் பிரதேச சபைக்குச் சொந்தமான இவ்வீதியானது கடந்த 2 மாதகாலமாக அபிவிருத்திப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு கிரவல்கள் நடுவீதியில் பறிக்கப்பட்ட நிலையில் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றது. தற்போது பருவப்பெயர்ச்சி மழை ஆரம்பித்துள்ள நிலையில் வீதி முழுவதும் சேறு காணப்படுவதனால் இவ்வீதி வழியாக மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்காக கடைகளுக்கோ, மருத்துவ நிலையங்களுக்கோ செல்லமுடியாத அளவிற்கு காணப்படுகின்றது. இவ்வீதி தொடர்பாக பிரதேச வாசிகள் துணுக்காய் பிரதேச சபையிடம் முறையிட்ட போதிலும் இதுவரைக்கும் எந்தவித பயனும் கிடைக்கப்பெறவில்லையென தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக துணுக்காய் பிரதேசசபை செயலாளரிடம் தொடர்பு கொண்டு வினவிய போது மழை குறைவாக இருக்கும் போது இதனை சீர்செய்து பாவனைக்கு வழங்கப்படுமென உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# இணையத்தை புதிதாக பதிவு செய்து நடைமுறைப்படுத்தத் தீர்மானம்

முல்லைத்தீவு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தை மாவட்ட மட்டத்தில் புதிதாகப் பதிவு செய்து நடைமுறைப்படுத்துவது என இணையத்தின் மாதாந்த பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டம் தலைவர் கெங்கநாதன் தலைமையில் முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள 'FRIDSRO' நிறுவனத்தின். மாநாட்டு மண்டபத்தில் கடந்த 15ஆம் திகதி முற்பகல் 10மணிக்கு நடைபெற்ற போதே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாட்டில் இடம்பெற்று முடிந்த யுத்தத்திற்கு முன்பு முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கிய மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தை தொடர்ந்தும் அதே பெயரில் இயங்குவதால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை தவிர்ப்பதற்காகவே புதிதாக பதிவை மேற்கொண்டு இயங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் சுமார் 15 இற்கும் மேற்பட்ட நிறுவனப் பிரதிநிதிகள் கலந்துகொண்டதுடன் இணையத்தின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றதாக இணையசெயலாளர் க.நிதர்சன் தெரிவித்துள்ளார். (2-310)

என்னுடையது; உன்னுடையது என்பது இல்லாவிட்டால் உலகம் சுவர்க்கமாக இருக்கும். ~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii.lk

## ஜனாதிபதி மைத்திரியின் உத்தரவு அமுலாகுமாயின்...

இனவாதம், மதவாதம் பேசுவோர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த உத்தரவு வரவேற்கப்பட வேண்டியது. ஏனெனில் இலங்கையில் மிகப்பெரிய யுத்த அழிவுகள் ஏற்பட்டுள்ள போதிலும் இன்றுவரை பேரினவாதிகள் தமிழ் மக்களுக்கு எதிரான தமது போக்கை மாற்றுவதாக இல்லை.

எனவே இனவாதத்தை, மத்வாதத்தை தூண்டுவோர் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

அந்தவகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்த உத்தரவு நடைமுறைக்கு வருமாக இருந்தால், இலங்கை ஒரு அமைதியான நாடாக மிளிரும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது.

அதேவேளை மதவாதம், இனவாதம் பேசுவோர் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி விடுத்த உத்தரவுக்கமைய பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுப்பாராக இருந்தால்,

அதன் முதற்கட்டமாக மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் பிரதம விகாராதிபதி சுமணரத்ன தேரரைக் கைது செய்வதாகவே இருக்க முடியும்.

பிரஸ்தாப தேரர் அண்மையில் பொது இடத்தில் வைத்து கொட்டித் தீர்த்த தகாத வார்த்தைகள் தமிழினத்தை இழிவுபடுத்துவதாக அமைந்திருந்தது.

ஒரு பெளத்த துறவியிடம் இத்துணை இன வன்மம் இருக்குமாயின் அது மிகவும் ஆபத்தானதாகவே அமையும்.

இத்தகைய வெளத்த பிக்குகள் தமிழ் மக்களுக்கு எதிராகச் சிங்கள மக்களைத் திசை திருப்புவதற்கு தமக்கு இருக்கக்கூடிய மதகுரு என்ற அங்கீகாரத்தை நிச்சயம் பயன்படுத்துவர்.

ஆகையால் ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய குறித்த புத்த பிக்குவைக் கைது செய்வது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

இருந்தும் அத்தகைய நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறுவதாகத் தெரியவில்லை. தமிழ் மக்களை இழிவுபடுத்தும் வகையிலும் தமிழ் மக்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் என்று குற்றம்சாட்டும் வகையிலும் துள்ளிக்குதித்த புத்த பிக்குவைக் கைது செய்யாவிட்டால்,

தமிழ் மக்களுக்கு எதிராக இன வன்மம் பேசி தமது இருப்பையும் தமக்கான அந்தஸ்தையும் காப்பாற்றிக் கொள்வதில் பெளத்த தேரர்கள் முண்டியடிப்பர்.

எனவே மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், பொது மக்கள் என யார் இனவாதம், மதவாதம் பேசினாலும் அவர்கள் சட்டப்படி கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் என்ற நிலைமை இருந்தால் அது பலருக்கு பலமான எச்சரிக்கையாக அமையும்.

எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவை நல்லதாக அமுல்படுத்தும் பொருட்டு சுமணரத்ன தேரரைக் கைது செய்வதே பொருத்துடையது.

தமிழ் மக்களுக்கு எதிராகக் கண்டபாட்டில் தகாத வார்த்தைகளைக் கொட்டித் தீர்த்த பிரஸ்தாப தேரரைக் கைது செய்யும் போது அது பலருக்கு மிகப் பெரும் திருத்தமாகவும் பாடமாகவும் அமையும்.

இதேவேளை ஜனாதிபதியின் உத்தரவை அமுல்படுத்துதல் என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் அடுத்த கட்டம் வடக்கின் முதலமைச்சருக்கு எதிராக சிங்கள சமூக வலைத்தளங்களில் வெளியாகும் பிரசாரங்களை செய்வோர் கைது செய்யப்பட வேண்டும். இவை அமுலுக்கு வருமாக இருந்தால் இனவாதத்தைத் தூண்டுவோர் வாலை மடக்கி அமைதி காப்பர்.

இல்லையேல் இனவாதப் பேய் சன்னதம் ஆடவே செய்யும்.

# கலைத்தூது அழகியல் கல்லூரி வருடாந்த பரிசில் தினம் இன்று

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் வருடாந்த பரிசில் தினம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறும்.

கலைத்தூது அழகியல் கல்லூரி அதிபர் திருமதி அஞ்சலா அல்போன்சஸ் தலைமையில் இடம்பெறும்.

இந்நிககழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு பல்கலைக்கழக கட்புல ஆற்றுகைக் கலைகள் பட்டப்படிப்புக்கள் கற்கை நெறி பீடாதிபதி பேராசிரியர் சரத் சந்திர ஜீவா, சிறப்பு விருந்தினராக யாழ்.தென்னிந்தியச் திருச்சபை முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

## பெரதெனியா பல்கலை. மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

2017ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் கல்வித்துறைக்கும் சுகாதாரத்து றைக்கும் உரிய அளவில் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. இலவச கல்விமுறைமை தற்போது மாற்றமைடைந்து வியாபார முறையாக மாற்றம் பெற்றுள்ளது என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெரதெனியா பல்கலைக்கழக, உயர்தர மாணவர்கள் தெரிவித்தனர்.கல்வித்துறைக்கும் சுகாதாரத்துறைக்கும் உரிய அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று சனிக்கிழமை, கொட்டகலை நகர விநாயகர் ஆலய சந்தியில் பெரதெனியா பல்கலைக்கழக உயர்தர மாணவர்களால் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. (இ-7)

## நட்டஈடு தொடர்பாக அமைச்சருடன் சந்திப்பு

நாளை 21 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள முத்துத்தம்பி அன்னதான மண்டபத்தில் (துர்க்காமணி மண்டபத்திற்கு அருகில்) முன்னாள் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையில் பணியாற்றிய பணியாளர்களின் நட்டஈடு சம்பந்தமாக புனர் வாழ்வு புனரமைப்பு மீள்குடியேற்ற இந்து கலாசார அமைச்சர் டி.எம். சுவாமிநாதனுடன் கலந்துரையாடல் ஒன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையில் பணியாற்றிய முன்னாள் பணியாளர்களா கிய அனைவரையும் தவ றாது கலந்து கொள்ளுமாறு காங்கேசன் சீமெந்து தொழிற்சாலைமுன்னாள் ஊழியர் ஒன்றியத் தலைவர் அறிவித்துள்ளார். (இ

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2016

“மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப் பெருக்குகளில் இருந்து காப்பாற் றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை.'' ~ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியலாளர்)

## மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும்தாழ அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை வவுனியா பிரதேசத்தில் குருமன்காடு பிரதேசத்திலும் மன்னார் பிரதேசத்தில நானாட்டானிலிருந்து அச்சங்குளம் வரை, எருவிட்டான், அறுக்குக்குன்று ஆகிய பிரதேசங்களி லும் மின்சாரம் தடைப்படும்.(இ-9)

# “ஆயுதங்களின் அச்சமும் சூழ்ச்சிகளும் நிறைந்துள்ள அரசை தவிர்ப்போம்”



இன்று கிறிஸ்து அரசர் பெருவிழா. இன்று நமக்கு தரப்படும் பைபிள் பகுதி இயேசுவை-கிறிஸ்துவை ஓர் அரசர் என்று நினைவுபடுத்துகின்றது. திருத்தந்தை பதினொராம் பத்திநாதரும் திருஅவைத் தலைவர்களும் 1925ஆம் ஆண்டு கிறிஸ்துவை அரசராக அறிவித்தனர். கிறிஸ்துவும் ஓர் அரசர்தான், அவரது அரசத்தனமையையும், அவர்நிறுவ வந்த அரசையும் மக்கள் கண்டு பாடங்கள் பலவற்றைகற்றுக்கொளள வேண்டுமென இந்தத் திருநாள் ஏற்படுத்தப்பட்டது.

### பரமபிதா காட்டிய பாதை

இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது, அவரை அரசராக எண்ணிப் பார்த்தவர்கள் சிலர். அரசராக்க முயன்றவர்கள் இன்னும் சிலர். பைபிளில் புதிய ஏற்பாட்டு நூலின் மத்தேயு புத்தகத்தின் படி இயேசுவை அரசர் என்று கூறிய முதல் மனிதர்கள் கீழ்த் திசை ஞானிகள். இயேசு பிறந்ததும, அவரைக் காண நெடுந்தூரம் பயணம் செய்து வந்து ஏரோது அரசனின் அரண்மனைக்குச் சென்றனர். ஏரோதிடம், 'யூதர்க ளின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம அவரை வணங்க வந்திருக்கிறோம்" என்றார்கள்.

இரண்டாவது சம்பவம் யோவான் புத்தகத்தின் படி இயேசு அப்பத்தைப் பலுகச் செய்து, மக்களின் பசியைத் தீர்த்தார். இயேசு செய்த இநத அரும் அடையாளத்தைக் கண்ட மக்கள், 'உலகிற்கு வர விருந்த இறைவாக்கினர் உண்மை யில் இவரே" என்றார்கள். அவர்கள் வந்து தம்மைப் பிடித்துக் கொண்டு போய் அரசராக்கப் போகிறார்கள் என்பதை உணர்ந்த இயேசு மீண்டும் தனிமையாய மலைப் பகுதிக்குச் சென்றார்.

மூன்றாவது சம்பவம் - எருசலேம் வீதிகளில் நடந்தது. திருவிழாவுக்குப் பெருந்திரளாய் வந்திருந்த மக்கள் இயேசு எருசலேமுக்கு வருகிறார் என்று கேள்வியுற்று, குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு அவருக்கு எதிர் கொண்டுபோய், 'ஓசன்னா! ஆண்டவரின் பெயரால் வருகிறவர் போற்றப்பெறுக! இஸ்ரயேலின் அரசர் போற்றப்படுவாரா' என்று சொல்லி ஆர்ப்பரித்தனர்.

நான்காவது சம்பவம் இயேசுவின் விசாரணைகளின் போது நடந்தது. இயேசுவை அரசர் என்று பிறர் கூறிய வதந்திகளால் பயம் கொணட பிலாத்து, இயேசுவிடமே 'நீர் அரசரா?" என்று கேட்டான்'.

ஐந்தாவது சம்பவம் கல்வாரியில்நடந்தது. இயேசுவை அரசராகப் பார்க்க முடியாத உரோமைய வீரர்களின் ஏளனக் குரலும், இயேசுவை அரசர் என்று ஏற்றுக் கொண்ட குற்றவாளியின் ஏக்கக் குரலும் அங்கே காணப்படுகிறது. இயேசுவுடன் அறையப்பட்டிருந்த குற்றவாளியின் ஏக்கக் குரல் இயேசுவின் அரசத்துவத் தன்மையை வெளிப்படுத்துகிறது. 'இயேசுவே, நீர ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவற்கொள்ளும்." இவ்வாறு பலர் இயேசுவை அரசராக எண்ணப் பார்த்துள்ளனர். இயேசுவின் அரச பண் புகள் என்ன என்று நோக்கும் போது, இது இவ்வுலக அரசுகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டது.

ஆயுதங்களின் அச்சமும் சூழ்ச்சிகளும் நிறைந்துள்ள இந்த உலகில், கிறிஸ்துவன் அரச வல்லமை, உண்மையிலும் அன்பிலும் காணப்படுகின்றது. கிறிஸ்துவின்அரச பலம் அன்பு. நம்மீது ஆதிக்கம் செலுத்துகின்ற மற்றும் நம்மை மனிதத்திற்குப் புறம்பாக நடத்துகின்ற அரசர் அல்ல கிறிஸ்து அரசர். மாறாக நம்மை அவா் தனது சொந்த மாண்புக்கே உயர்த்துகின்றவர். கிறிஸ்துவின் அரசு, நம்மை அடக்கி ஒடுக்காமல், நம் பலவீனங்கள் மற்றும் நம் துன்பங்களிலிருந்து நம்மை விடுவிப்பது. ஒப்புரவு மற்றும் மன்னிப்புப் பாதையில் நம்மை ஊக்குவிப்பது.

இயேசுபிலாத்துவிடம் தமது அரசு இவ்வுலகு சார்ந்தது அல்ல. இவ்வுலகம் சொல்லும் காரண காரியங்களும், பைபிள் கூறும் காரண காரியங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை என்று தெளிவுபடுத்தினார். இவ்வுலகின் காரண காரியங்கள், போட்டியிலும், புகழார்வத்திலும் வேரூன்றியுள்ளன. அவை, பயத்தின் ஆயுதங்கள், மனச்சான்றைச் சூழ்ச்சியுடன் கையாள்தல் மற்றும் அச்சுறுத்தி சாதிப்பதைக் கொண்டு போராடுகின்றன. பைபிள் கூறும் காரண காரியங்கள், தாழ்மையிலும், நன்றியுணர்விலும், உண்மையின் பலத்திலும் வெளிப்படுத்தப்படுகின்றன. கிறிஸ்தவர்க்கு அதிகாரமும், வல்லமையும் என்பது, திருச்சிலுவையின் வல்லமை மற்றும் இயேசுவின அன்பின் சக்தியாகும். இவ்வன்பு, புறக்கணிப்புக்கு மத்தியிலும், எப்பொழுதும் முழுமையானதாகவும், உறுதியானதாகவும் அமைந்திருக்கும்.

இயேசுவும் ஓர் அரசை நிறுவியவர். அவர் ஒருவரே போதும் என்று சொல்லக் கூடிய மனங்களில் இந்த அரசு நிறுவப்படும். இந்த அரசில் யார் பெரியவர் என்ற கேள்வி இல்லாததால், எல்லோரும் இங்கு அரசர்கள். இந்தஅரசர்கள்மத்தியில்இயேசு ஓர் உயர்ந்த, நடுநாயக மான அரியணையில் வீற்றிருப்பார் என்று நாம் தேடினால், ஏமாந்துபோவோம். அவர் நம் பாதங்களைக் கழுவிக் கொண்டு இருப்பார். மக்கள் அனைவரையும் அரியணை ஏற்றி, அதன் விளைவாக, அம் மக்களின் மனம் எனும் அரியணையில் அமரும் இயேசு என்ற மன்னரின் அரசுத்தன்மையைக் கொண்டாடத்தான் இந்த கிறிஸ்து அரசர் திருநாள்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்









இந்து சமய கலாசார திணைக்களத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலர் மாநாடு மற்றும் குருபூஜை நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நேற்று நடைபெற்றது. (படங்கள்: உ.சாளின்)

# ஆறுமுக நாவலர் ஆற்றிய பணிகள் சிந்தித்து பார்க்க வேண்டியவையே

## வடமாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆறுமுக நாவலரின் தூர நோக்கு சிந்தனை, சைவத்திற்கும் தமிழிற்கும் அவர் ஆற்றிய உதவிகள், சமய நெறிகள் மாட்சிமை பெறுவதற்கு அவர் ஆற்றிய பணிகள் யாவும் மேலும் மேலும் எம்மால் சிந்தித்துப் பார்க்க வேண்டியவையே. **"தமிழர் என்றோர் இனம் உண்டு. தனியே அவர்க்கோர் குணம் உண்டு"** என்று மற்றவர்கள் எம்மைப் பார்த்து விளிப்பதற்கு ஏற்ற விதத்தில் நாவலர் வாழ்ந்து காட்டினார். அதே போன்று இன்றைய கால கட்டத்தில் நாமனைவரும் வாழப்பழக வேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். இந்து சமய கலாசார திணைக்களத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவையொட்டிநடைபெறும ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு மற்றும் குருபூஜை நிகழ்வின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் நல்லூர் துர்க்கா தேவி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகியமும் மொழிகளிலும் பேசவும் எழுதவும் புரிந்து கொள்ளவும் சிறந்து விளங்கிய நாவலர் அவர்களின் அறிவு, அவரைப் பார்த்துப் பலர் அஞ்சி ஒதுங்க வழி வகுத்தது. எனவே அவரின் சிறப்பு மேலோங்கியது. சமயத்தின்பால் கொண்டுள்ள அதீத பற்றின் காரணமாக குடும்ப பந்தங்கள் தமது சமய வாழ்க்கைக்கு ஒவ்வாதவை எனக் கருதி திருமண பந்தத்தில் இருந்து தூர விலகியிருந்து தமது பணிகளை ஆற்றினார். அவரின் சகோதரர்களும் அவரின் குருமார்களும் எவ்வளவோ வற்புறுத்தியும் நாவலர் தமது பிடியில் நின்றும் சற்றும் தளராது பிரம்மச்சாரியாகவே காலத்தைப் போக்கினார். நாவலரின் ஆழமானதும் அகலமானதுமான அறிவு இன்று எம்மிடையே குறைந்தளவே காணப்படுகின்றது. பன்மொழிப் பாண்டித்தியமே பல்கலை விற்பன்னர்களாகவும் பலர் கருத்தறியும் பாங்கைப் பெற்றவர்களாகவும் எம்மை ஆக்க வல்லன என்பதை அவர் வாயிலாக அறிகினறோம்.

அவரின் திறமைகள் இந்தியாவிலும் பேசப்படடன. அவர் தமது வாழ்நாட்களில் அரைவாசிப் பகுதியை இந்தியாவிலேயே கழிக்க வேண்டியிருந்தது. அவர் இலங்கையிலும் இந்தியாவிலும் ஆற்றிய பிரசங்கங்கள் அனைவராலும் பெருமையாகப் பேசப்பட்டன. பிரசங்க முறைமையை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் ஆறுமுக நாவலர் அவர்களே. இவர் தனது முதலாவது பிரசங்கத்தை வண்ணார் பண்ணை சிவன் கோவிலிலே ஆற்றினார் எனக் கூறப்படுகின்றது. இலகு மொழிநடையில் பரசங்கம் பண்ணும் போதும் அர்த்தம் சொல்லும் போதும், பேசும் போதும் சொற்கள் மடைதிறந்த வெள்ளம் போல வந்துகொண்டே இருக்குமாம். சொற்பஞ்சம் என்பது இவருக்கு ஒரு காலத்திலும் இருந்ததில்லை. ஒரு சொல்லையாவது அல்லது விடயத்தையாவது திருப்பிச் சொல்லும் வழக்கம் அவருக்கு இருக்கவில்லை. அந்தளவுக்கு ஒத்தகருத்துள்ள பல சொற்களை அவர் அறிந்திருந்தார். அத்துடன் சிறுபிள்ளைகளோடு பேசும் பேச்சில் கூட இலக்கணப் பிசகின்றி ஆனால் அவர்களால் விளங்கிக் கொள்ளக்கூடிய இலகு மொழிநடையை பயன்படுத்துவது அவருக்கே உரிய தனிச்சிறப்பாக அமைந்திருந்தது.

அக்காலப் புலவர்களும் பண்டிதர்களும் தாம் கற்ற ஏட்டுச் சுவடிகளையும் மற்றும குறிப்புக்களையும் ஏனைய வர்கள் கற்றுத் தேறுவதற்கு அல்லது அதன் பயனைப் பெறுவதற்கு அனுமதிக்காதிருந்தனர். தமது குறிப்புக்கள் அனைத்தையும் அவர்களின் இறுதி நெரு ங்குகின்ற போது தீயில் இட்டு சாம்பலாக்கி விட்டுத்தான் அவர்கள் இறைவனடி சேர்வார்களாம்.

நாவலர் அவர்கள் அதற்கு மாறாக அச்சியந்திரங்களை இந்தியாவில் இருந்து தருவித்து அவ்வாறான அரிய ஏட்டுக்குறிப்புக்களையும் மற்றும் வேத நூல் களையும் அச்சில் பதிப்பிட்டு நூல்களாக வடிவமைத்து எல்லோரும் வாசிக்க இடம் அளித்தமை மிகச்சிறப்பான ஒரு நிகழ்வாகும்.

சைவத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டும் என்ற முனைப்புடன் எமது மக்கள் கல்வி அறிவிலும் சிறந்து விளங்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஏட்டுச்சுவடிகளையும் மற்றும் இன்னோரன்ன வேதக் குறிப்புக்களையும் தேடி எடுத்துவந்து அச்சேற்றி அவற்றை தமிழ் மற்றும் சமய கல்விகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு நூல்களாக வழங்கியமை அவர் சமயத்தின்பால் வைத்த பக்தியை எடுத்துக் காட்டுகின்றது.

நாவலரிடத்தில் கொலை, களவு, வஞ்சனை, காமம் முதலிய குற்றங்கள் எள்ளளவேனும் இல்லாத போதும் கோபம் எனும் குணம் மாத்திரம் மிகையாக இருந்ததாக கூறப்படுகின்றது. அதனை சிலர் குற்றமாக எடுத்துக் கூறுகின்ற போதும் தமக்குத் தீங்கு செய்தவர்களை அவர் கோவித்ததை ஒரு காலத்திலும் எவரும் கண்டதில்லை. மாறாக அவர் கோவித்தது சிவநிந்தை, சிவசாஸ்திர நிந்தை முதலிய சிலவற்றில் ஈடுபட்டவர்களையே. அவரின் கோபத்திற்கு குருமார், பிராமணர்கள், சிநேகிதர்கள், பிரபுக்கள், சுற்றத்தார் ஆகியோரும் ஆளாகத் தவறவில்லை. அவரின் கோபம் நற்கோபமே என அறிந்து கொண்டதாலும் எந்த அளவிற்கு கோபம் உண்டோ அந்த அளவிற்குப்பதின் மடங்கு இரக்கமும் அவரிடம் இருந்தது என்ற காரண த்தினால் அவரின் கோபம் பலராலும் பொறுத்துக் கொள்ளப்பட்டது.

இத்தனை சிறப்புக்களையும் கொண்ட நாவலர் பெருமான் அவர்கள் இன்று நினைவுகூரப்படுவது சாலச் சிறந்ததே. காலத்தின் கட்டாயமே. அவரின் தூர நோக்கு சிந்தனை, சைவத்திற்கும் தமிழிற்கும் அவர் ஆற்றிய உதவிகள், சமயநெறிகள் மாடசிமை பெறுவதற்கு அவர் ஆற்றிய பணிகள் யாவும் மேலும் மேலும் எம்மால் சிந்தித்துப் பார்க்க வேண்டியவையே. "தமிழர் என்றோர் இனம் உண்டு. தனியே அவரக்கோர் குணம் உண்டு" என்று மற்றவர்கள் எம்மைப் பார்த்து விளிப்பதற்கு ஏற்ற விதத்தில் நாவலர் வாழ்ந்து காட்டினார். எளிய வாழ்க்கை முறைமைக்கு அவர் எடுத்துக் காட்டாக விளங்கினார்.

ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களின் பெருமைகளையும் சிறப்புக்களையும் பற்றி நான்கு நாட்கள் தொடர்ச்சியாகக்கலை நிகழ்வுகளுடன் கூடிய மாநாட்டில் ஆராய இருக்கின்றீர்கள். இந்த மகாநாட்டின் ஆரம்ப தினமாகிய இன்று உரையாற்றக் கிடைத்தமைக்கும் குருபூஜை நிகழ்வுகளில் கலந்து கொள்ளக் கிடைத்தமைக்கும் இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனுக்கும் தலைவருக்கும் அமைச்சைச் சார்ந்த ஏனைய அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் இந்நிகழ்வை திறம்பட அமைத்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்து நிறைவு செய்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# மரநடுகை மாதத்தை முன்னிட்டு வல்லை வெளியில் மரநடுகை



(கரணவாய்)

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு வல்லை வெளியின் இரு புறங்களிலும் நேற்று சனிக்கிழமை மரங்களை நடுகை செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. வடக்கு சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியில் தொண்டைமானாறு வீரகத்தி மகாவித்தியாலய மாணவியொருவர் முதலாவது மரக் கன்றை நாட்டி மரநடுகையை ஆரம்பித்து வைத்துள்ளார்.

தொண்டைமானாறு கடல் நீரேரி ஊடறுத்துச் செல்லும் தாழ்வான பகுதியாக வல்லைவெளி உள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தால் மணல் மேடுகள் அமைக்கப்பட்டே மரங்கள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் வடமாகாண சபை உறுப்பினர்கள் க.சிவாஜிலிங்கம், க.தர்மலிங்கம், ச.சுகிர்தன், சி.அகிலதாஸ், விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி வே.பிறேமகுமார், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எநதிரி ந.சுதாகரன், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி ஆகியோரும் தொண்டைமானாறு வீரகத்தி மகா வித்தியாலய மாணவர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மரநடுகையில் ஈடுபட்ட மாணவர்கள் அனைவருக்கும் அவர்களது வீடுகளில் நடுகை செய்வதற்கென பழமரக்கன்றுகளும் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு மரங்களை நடுகை செய்வதில் அரச திணைக்களங்கள் மட்டும் அல்லாது பொது நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களும் உணர்வுபூர்வமாக ஆர்வம் காட்டி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ-60)



பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு முன்னால் மழைநீர் தேங்கி நிற்பதால் சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் அவல நிலைக்கு உள்ளாகின்றனர். இதனை கவனத்தில் கொண்டு பருத்தித்துறை பிரதேசசபை நடவடிக்கை எடுக்குமாறு ஆதார வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். (படம்: மகாலிங்கம்)

# மடிக்கணனி அன்பளிப்பு



சிவன் அறக்கட்டளை நிலையத்தால் காங்கேசன்துறை நடேஸ்வர கல்லூரிக்கு நேற்று முன்தினம் மடிக்கணனி ஒன்று அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது. (இ-9)

# விடுதலைக்காக...

போராட்டத்தில் தங்கள் உயிர்களை தியாகம் செய்த போராடி மடிந்த எமது மாவீரர்களுக்காக நாம் நாளை 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மாவீரர் வாரத்தை அனைத்து தமிழ் மக்களும் அனுஷ்டிக்க வேண்டும். எமது தமிழ் மக்கள் விடுதலையுடன் வாழ வேண்டும் என்பதற்காக பல்லாயிரக்கணக்கான போராட்ட வீரர்கள் கடந்த காலத்தில் வீர மரணம் அடைந்திருக்கின்றனர். அந்த வீர மறவர்களை ஒவ்வொரு மக்களும் நினைவு கூர வேண்டும்.

அந்தவகையில் எதிர்வரும் 27ஆம் திகதி காலை 9.30 மணியளவில் நல்லூர் ஆலய சுழலில் மாவீரர்களை நினைவுகூரும் நிகழ்வு நடத்தப்படும். இதில் இறந்துபோனவர்களின் உறவினர்கள் கலந்துகொண்டு தமது உறவுகளை நினைவுகூரவும் போராடி உயிர்நீத்த வீர மறவர்களுக்கு வீரவணக்கங்களையும் செலுத்த வேண்டும். இவற்றை விட தமிழர் தாயக பூமியில் மக்கள் தமக்கு வசதியான இயலுமான இடங்களில் ஆலயங்களில் வீடுகளில் அல்லது பொது இடங்களில் இறந்துபோன உறவுகளுக்காகவும் போராளிகளுக்கும் தமது நினைவேந்தல்களை நடத்த வேண்டும்.

அந்தவகையில் எமது விடுதலைக்காக போராடி உயிர் நீத்தவர்கள்ளை நினைவுகூருவதென்பது எமது உரிமை. அதற்காக யாரிடமும் நாம் அனுமதி கேட்க வேண்டியதில்லை என்பதுடன் அவ்வாறு நாம் நினைவுகூருவதை யாரும் தடுக்கவும் முடியாது. குறிப்பாக கடந்த காலங்களில் ஜே.வி.பியின் போராட்டங்களின் போது அரச படைகளினால் ஜே.வி.பியின் தலைவர் உட்பட பெருமளவிலான ஜே.வி.பி இளைஞர்கள் அரச படைகளால் கொலை செய்யப்பட்டதை அவர்கள் இன்றும் நினைவுகூர முடியுமாக இருக்கும் போது எம்மாலும் எமது விடுதலைக்காக போராடி உயிர்நீத்த வீரர்களை நினைவுகூர உரிமையுடையவர்களாகின்றோம்.

மேலும் நல்லாட்சி அரசாங்கம் என்ற இந்த அரசாங்கத்தின் முகத்திரையும் நாம் கிளர்ந்தெறிய வேண்டியவர்களாகவே இருக்கின்றோம். அந்தவகையில் இவ்வாறு நாம் மாவீரா தினத்தை அனுஷ்டிக்கும் போது எம்மை அவர்கள் கைது செய்வார்கள் என்று நாம் அஞ்சுவோமேயானால் மக்களது விடுதலையை நாம் கேட்க முடியாது. எமக்காக போராடி உயிர் நீத்தவர்களை நாம் நினைவுகூருவதை கைவிடுவோமானால் நாம் எமக்கு தீர்வு கிடைக்க வேண்டும் என்றும் கேட்பதற்குரிய தார்மீக உரிமையை இழந்துவிடுவோம். ஏனெனில் அத்தகையவர்களின் ஒட்டுமொத்த தியாகங்கள் ஊடாகவே இன்று எமது பிரச்சினையானது சர்வதேச ரீதியானதாக மாற்றமடைந்துள்ளது.

எனவே நாம் இப்போதும் எழுந்து நிற்கின்றோம். எமக்கு உரிமை வேண்டும் என்பதை சர்வதேசத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் உரக்க கூறும் வகையில் இவ் நினைவேந்தல்களை வழமையாக ஓர் இறந்தவருக்கு நடத்தும் சாதாரன நினைவுநாள் போன்றல்லாது உணர்வெழுச்சியுடன் இந்நாளை அனுஷ்டிக்க வேண்டும் என அவர் தெரிவித்திருந்தார்.

மேலும் புலம்பெயர் நாடுகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நினைவேந்தல் நிகழவுகளை உணர்வெழுச்சியுடன் சிக்கனமாக நடத்தி அதில் சேமிக்கப்படுகின்ற பணத்தை இலங்கையிலே போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி திட்டங்களை வழங்குவதற்கு பயன்படுத்த வேண்டும் எனவும் சிவாஜிலிங்கம் கேட்டுக்கொண்டார். (செ-4)

# தமிழர்களுக்கும்...

ழர்களும், முஸ்லிம்களும் இந்தியாவிலிருந்து கள்ளத்தோணிகளில் வந்தவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை சிங்கள பௌத்த மக்களின உரிமைக்காக குரல்கொடுத்துவரும் பௌத்த பிக்குகளை ஒடுக்க அரசாங்கம் சதித்திட்டமொன்றை முன்னெடுத்து வருவதாகவும் குற்றம்சாட்டிய அவர், சிங்கள பௌத்த மக்களின் மதத் தலைவர்களான மகாநாயக்கத் தேரர்கள் இணைந்து கூட்டாக சங்க ஆணையை வெளியிட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

முஸ்லிம்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கில் பொது பல சேனா அமைப்பு, ஏனைய பௌத்த பிக்குகள் தலைமையிலான அமைபபுக்களுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த பேரணி கெட்டபே விகாரைக்கு முன்னால் ஆரம்பமாகி ஊர்வலமாக கண்டி தலதா மாளிகை வரை சென்றது.

இதில் அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அடாவடித்தனங்களில் ஈடுபட்டுவரும் மங்களராம விகாரையின் தலைமை பிக்கு அம்பிட்டியே சுமனரத்ன தேரர் உட்பட பௌத்த பிக்குகள் ஏராளமானோர் கலந்து கொண்டிருந்தனர்.

இவர்கள் ஸ்ரீ தலதா மாளிகைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட நிலையில், தலதா மாளிகைக்கு முன்னால் கூடியிருந்த மக்கள் மத்தியில் பொது பல சேனா அமைப்பின் பொதுச செயலாளர் உரையாற்றினார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடவும், சுதந்திரமாக வாழவும் முடியும் என்றால், அதேபோல் பள்ளிவாசல்களை அமைத்து, ஒலிபெருக்கிகள் மூலம் சத்திமிட்டுக்கொண்டு தமது மத அனுட்டானங்களை மேற்கொள்ள முடியும் என்றால் ஏன இந்த நாட்டை கட்டியெழுப்பி, எழுத்துமூலம் வரலாற்று உரிமைக்கு உரிமை கொண்டாடும சிங்கள பௌத்த இனத்திற்கு அந்த உரிமை மறுக்கப்படுகின்றது என்று கேட்க விரும்புகின்றோம்.

அதேபோல் கள்ளத்தோணிகளில் வந்த தமிழர்களைப் போன்றோ முஸ்லிம்களைப் போன்றே தொடர்ந்தும் எம்மால் வாழமுடியாது என்ற செய்தியையும் எமது தலதா பெருமானிடம் முறையிடவே இங்கு கூடியிருக்கின்றோம்.

இன்று இந்த நாட்டின் வெட்கக் கேடான, முதுகெலும்பில்லாத ஆட்சியாளர்கள், தமது இனம், மதம் தொடர்பான அனைத்து கடப்பாடுகளையும் மறந்து செயற்பட்டுவருகின்றனர்.

மேற்குலகத்திற்கும், ஐரோப்பாவிற்கும் கைப்பொம்மைகளாக இருக்கும் இந்த பொம்மை ஆட்சியாளர்கள் இந்த நாட்டின் பௌத்த பிக்குகளை அடக்கி, ஒடுக்க ஆரம்பித்துள்ளனர்.

சில அமைச்சர்கள் இந்த நாட்டின் காவல் தெய்வங்களாக கருதப்படும் பௌத்த பிக்குகளை ஏளனப்படுத்தும் செயல்களிலும் பகிரங்கமாக ஈடுபட்டுள்ளனர். அது மாத்திரமன்றி நாட்டில் இன்று முஸ்லிம் கடும்போக்குவாதம் முழுமையாக ஆக்கிரமித்துள்ளது.

ஆனால் எமது ஆட்சியாளர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றனர். நாம் இந்த வேண்டுதல் பூஜையை முடித்துக்கொண்டு மல்வத்து பீட மகாநாயக்கத் தேரரை சந்திக்கவுள்ளோம். சிங்கள பௌத்த மக்களின் மதத் தலைவர்களாக சியாம் பீடத்தின் மல்வத்து பீட மகாநாயக்கத் தேரரை சந்தித்து சிங்கள பௌத்த இனம் எதிர்நோக்கும் இந்த பிரச்சினைகளை எடுத்துக்கூறி அவற்று நீதியை கோரவுள்ளோம்.

மகாநாயக்க தேரர்கள் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் வெள்ளைக்காரன் வழங்கிய சொத்துக்களை அனுபவித்துக்கொண்டு அவன் கூறிய கடமைகளை மாத்திரம் செய்துகொணடிருக்காது சிங்கள பௌத்த இனம் எதிர்நோக்கியுள்ள இந்த நெருக்கடிகள் குறித்தும் தமது கவனத்தை செலுத்த வேண்டும்.

இந்த கட்டுப்பாட்டை அவர்கள் செய்யத் தவறினால் சிங்கள பௌத்த இனத்தை பாதுகாப்பதற்காக பல்வேறு மட்டங்களில் போராடி வரும் எமது இளைய தலைமுறையினர் உட்பட பௌத்த ஆதரவாளர்கள், எவ்வாறான போராட்டத்தை தெரிவுசெய்தாலும் அவற்றுக்கு நாம் பொறுப்பு கூற மாட்டோம்.

இந்தப் பிரச்சினைகளால் கடும் விசனமடைந்துள்ள எமது பிள்ளைகள், கற்களையும், பொல்லுகளையும் எடுத்துக்கொண்டு தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண முறப்பட்டால் இந்த நாட்டிற்கு என்ன நடக்கும் என்பதை எண்ணியும் பார்க்க முடியாது. அதனால் இந்த அபாயத்தை புரிந்துகொண்டு, இந்த இளைய பௌத்த பிக்குகள் மற்றும் இளைஞர்களை இனிமேலும் பலிகொடுக்காது, பொம்மை ஆட்சியாளர்களுக்கு எதிராக சங்க ஆணையை வெளியிட வேண்டும்.

சிங்களவர்களுக்காக நாட்டை எவ்வாறு ஆட்சிசெய்வது என்பதை தெளிவுபடுத்தி மகாநாயக்கத் தேரர்கள் இந்த ஆட்சியாளர்களுக்கான சங்க ஆணையை பிரகடனப்படுத்த வேண்டும். இந்த நாட்டு சொத்துக்கள் தமிழருக்கோ, முஸ்லிம்களுக்கோ சொந்தமானவை அல்ல. அவர்களின் தாய், தந்தையரினால் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட சொத்துக்களும் அல்ல. இவற்றை எமது பாட்டன், பூட்டனே உயிரைப் தியாகம்செய்து பாதுகாத்தனர்.

ஆனால் அவற்றின் பலனை அனுபவித்து வரும் தமிழரும், முஸ்லிம்களும் சிங்களவனின் தலையில் கொட்டிக்கொண்டிருக்கின்றனர். அதனால் பொம்மை ஆட்சியாளர்களுக்கு சங்க ஆணையை வெளியிடுமாறு நாம் எமது மகாநாயக்கத் தேரர்களிடம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம் என்றார். (செ-11)

# சுமணரத்தின...

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் மட்டக்களப்பு மங்களாராமய விகாரைக்கு சென்று விகாராதிபதி சுமணரத்தின தேரரை சந்தித்து கலந்துரையாடி வந்தார். இதன்பிறகே மட்டக்களப்பு மங்களாராமய விகாராதிபதி தொடர்பான சம்பவம் நிகழ்ந்தது.

ஆகவே இந்த இரண்டுக்கும் தொடர்பு உள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னிடம் தெரிவித்ததாக தேசிய சக வாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது முகநூல் பதிவொன்றில் நேற்றையதினம் குறிப்பிட்டுள்ள அமைச்சர் மனோ கணேசன் இதுதொடர்பில் மேலும் பதிவு செய்துள்ளதாவது,

கடந்த 10ஆம் திகதி வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட அன்று பிற்பகல் நாடாளுமன்ற உணவு விடுதியில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேநீர் அருந்தியவாறு தனது ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் உரையாடி கொண்டிருந்தார். அந்த சந்தர்ப்பத்தில் அங்கு சென்ற என்னிடமும் அவர் உரையாடினார். என்னுடன் அமைச்சர் பழனி திகாம்பரமும் இருந்தார்.

சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் நீங்கள் உரையாடுவது நன்று. வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்கள மக்கள் சிறுபான்மையாக வாழ்கிறார்கள். அவர்களைப் பற்றியும் நீங்கள் தமிழ் மக்களுக்கு எடுத்து கூற வேண்டும். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இப்போது சிங்கள மக்களை விரட்டியடிக்கும் ஒரு திட்டம் நடைமுறையாகிறது. அது பற்றி நீங்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று மகிந்த என்னிடம் கூறினார்.

இதற்கு வட- கிழக்கில் சிங்களவர்கள் சிறுபான்மையாக வாழ்வது எனக்கு தெரியும். அவர்களைப் பற்றிய அக்கறை எனக்கு நிச்சயம் இருக்கிறது. அண்மையில் இலங்கை வந்த சிறுபான்மையினர் தொடர்பாக ஐ.நா அறிக்கையாளர் ரீடா ஐசக்கிடம் தென்னிலங்கை சிறுபான்மையினர் போன்று, வட-கிழக்கில் வாழும் சிங்கள சிறுபான்மையினரையும் நீங்கள் சந்தித்தீர்களா என நான் கேட்டேன் என நான் மகிந்தவுக்கு பதில் சொன்னேன்.

உண்மையில் இந்நாட்டின் எந்த இடத்திலும் சிங்களவர்கள் மட்டுமே பெரும்பான்மை. தமிழ் பேசுபவர்கள் எங்கேயும் சிறுபான்மை தான் என்ற பாரம்பரிய பேரினவாத நிலைப்பாட்டை தளர்த்தி, வட-கிழக்கில் வாழும் சிங்களவர்களை சிறுபான்மை என மகிந்த ராஜபக்ஷ அடையாளப்படுத்தியுள்ளார். இதை இதற்கு முன் எங்கேயும் அவர் சொன்னதாக நான அறியவில்லை. இதை அவர் எங்கேயோ சொல்லி அது திரிபுபடுத்தப்பட்டு, என்னிடம் வந்து சேரவும் இல்லை. இதை அவர் நேரடியாக என்னிடம் கூறினார்.

எனவே, இது ஒரு முன்னேற்றக்கரமான நிலைப்பாடு என நான் நம்புகிறேன். இது ஒரு புறமிருக்க, மட்டக்களப்பு மங்களாராமய விகாராதிபதி சுமணரத்தின தேரர் எப்போதுமே ஒரு குழப்பக்காரர்தான். அவர் புதிதாக குழப்பம் செய்யவில்லை. அவரை மகிந்த சந்தித்து, தனது அரசியல் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள உசுப்பி விட்டுள்ளார். இதைதான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் உறுதிப்படுத்தியுள்ளார் என அமைச்சர் மனோ கணேசன் தனது முகநூல் பதிவில் தெரிவித்துள்ளார். (செ-11)

# தரம்-5 மாணவர்...

ண்ணங்களை உருவாக்க வேண்டும். அத்துடன் எமது வேலைச் சுமைகளைத் தாங்கிக்கொண்டு இப்படியான பொது நிகழ்வுகளிலும் கூட்டங்களிலும் நாம் கலந்து கொள்வது எமது மக்களின் வருங்காலம் பற்றிய அக்கறையைக் கருத்தில் கொண்டே ஆகும் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வித்திணைக் களத்தினால் நேற்றையதினம் நடத்தப்பட்ட சாதனையாளர் கௌரவிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில்,

இங்கே தரம் 5ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் மாகாண ரீதியில் வெற்றியீட்டிய 15 பேருக்கான பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. இந்தப் புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பாக நாம் சற்று ஆராய வேண்டியுள்ளது.

சிறுவயதுகளிலேயே அந்தச் சின்னச் சிறிய பிள்ளைகளின் மனதில் போட்டிமனப்பான்மையும் அதிகளவான நினைவாற்றல் சுமைகளையும் இந்த தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்காக அவர்களுக்குத் திணிக்கின்றோம். இதனால் அதிகமான மாணவர்கள் விரக்தியடைந்தும் மனச் சஞ்சலங்களுக்கும் உள்ளாகின்றனர்.

உண்மையில் சிறுவர்கள் விளையாட்டுடன் கூடிய கல்விமுறைமைக்கு மாற்றப்பட வேண்டும். ஏட்டுக்கல்வியுடன் மட்டும் நின்றுவிடக்கூடாது. செயன்முறை ரீதியாக மாணவர்களுக்கு இயற்கையுடன் கூடிய அறிவை உட்புகுத்த வேண்டும். கல்வியென்பது மாணவர்களுக்கு சுமையாக அமையக்கூடாது. தற்போது பரீட்சைகளில் தோல்விகண்ட எத்தனை மாணவர்கள் உயிர்களை மாய்த்துள்ளனர்.

பெற்றோர்கள் ஆரம்பக் கல்வியை பிள்ளைகளுக்கு புகட்டும் பொருட்டு அதிகளவான சுமைகளை கொடுக்கின்றனர். இதனால் ஆரம்பக் கல்வியை சரியாகக் கற்காமல் பிள்ளைகள் விரக்கியடைந்தவர்களாக மாறுகின்றனர். குறிப்பாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மொத்தமாக 195, 196 புள்ளிகளைப் பெற்று சிறப்புச் சித்திகளை அடைகின்ற மாணவ மாணவிகள் எவ்வளவு விடயங்களை அவர்களின் அந்தப் பிஞ்சு மனங்களில் தேக்கி வைக்கிறார்கள். எனவே மாணவர்களின் கல்வித்தரத்திற்கேற்ப அவர்களுக்கு ஏற்ற வகையில் கற்றல் செயற்பாடுகள் அமைவது முக்கியமான ஒன்றாகும் என முதலமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டார். (செ-11)

# ஒற்றையாட்சிக்குள்...

அரசாங்கம் ஒற்றை ஆட்சிக்குள் அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதற்கு இணங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் 22 சுயாதீன நிறுவனங்களுக்கான செலவுத் தலைப்பிற்கான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

தேசிய இனப் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று தீர்வைக் காண்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யுத்தத்திற்கு முன்னதாக கூறினார்.

ஆனால் யுத்தத்திற்கு பின்னர் அவர் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை தெரிவுக்குழுவே தீர்மானிக்க வேண்டும் என்றார். தற்போது அதனையே நாம் முன்னெடுத்துச் செல்கின்றோம்.

அதிகாரப் பரவலாக்கத்திற்கு நாம் பூரணமாக இணங்கியுள்ளோம். தேசிய அரசாங்கமானது தேசிய பிரச்சினையை தீர்ப்பதற்காகவே நிறுவப்பட்டுள்ளது. நாம் ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்களை பரவலாக்குவதற்கு முயற்சிப்போம் என தனது உரையில் அவர் குறிப்பிட்டார். (செ-11)

# வெளிநாடு சென்ற...

மான சம்பவம் வடமராட்சியில் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சி கொற்றாவத்தையைச் சேர்ந்த இரத்தினசிங்கம் வினோதரன் (வயது 32) என்ற இளைஞர் வெளிநாடு செல்வதற்காக முகவர் ஒருவர் ஊடாக ஒரு வருடத்திற்கு முன்னர் சென்றுள்ளார்.

அவ்வாறு சென்ற இளைஞர் துருக்கி நாட்டில் நின்றுள்ளார். இந் நிலையில் கடந்த ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி அன்று அங்குள்ள கட்டிடம் ஒன்றிற்கு கீழ் அவர் சடலமாக காணப்பட்டதாக இங்குள்ள உறவினர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து துருக்கி தூதரகத்தின் உதவியுடன் அவரது உடலம் இலங்கைக்கு எடுத்துவரப்பட்டு அவரது சொந்த ஊரான கொற்றாவத்தையில் நேற்று சனிக்கிழமை இறுதிக்கிரியை நடத்தப்பட்டிருந்தது. (செ-60)

**Job Vacancy**
வவுனியா/ யாழ்ப்பாணம்/ மதவாச்சி/ கிளிநொச்சி
(6636)
Sakya, No.218, Kantharmadam Junction, Jaffna.
077 817 7017, 077 852 7394

**காணி விற்பனை**
➢ பலாலி வீதி திருநெல்வேலியில் 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு. ➢ கே.கே.எஸ். வீதி கொக்குவிலில் 1 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. ➢ குளப்பிட்டி றோட் C.C.T.M.S வீதியில் 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. ➢ இராசபாதைவீதியில் 20 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
◆ பழைய வீடு விற்பனைக்கு உண்டு
(6652) தொடர்பு : 0771671174, 0777286061

**தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு தொழில்நுட்ப உதவியாளர் தேவை. (சிவில், Q.S. டிப்ளோமா பாடநெறியை முடித்த 25 வயதிற்குட்பட்ட மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம் உள்ள ஒருவர்)
தொடர்புகளுக்கு:
077 232 3000
(சி-6437)

**வேலையாட்கள் தேவை**
■ சமையலாளர் (உதவி–ஆண்/பெண்)
■ பொதி செய்பவர் (ஆண்/பெண்)
மாலை 4 மணிக்கு பின் நேரில் வரவும்
**இடியப்பக்கடை**
இல.05, மானிப்பாய் வீதி, மருதனார்மடம்
(6593)

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062
(C-6432)

FALC FRENCH LANGUAGE CENTRE
FOR THE BEST FRENCH FOREVER
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French·
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.
விரிவுரையாளர் : France இல் ஆசிரியப் பயிற்சி - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவர்.
DELF A1, A2,B1 பரீட்சைகளில் 100 % சித்தி. 1154 மாணவர்கள் French கற்றுள்ளனர்.
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 26.11.16 சனி 8 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 28.11.16 Mon @ 3.30pm.
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre
(சி-6422)

நவம்பர் 26,27,28ஆம் திகதிகளில்
O/L மாணவர்களுக்கான கருத்தரங்கு
வரலாறு | ஆசிரியர்: R.S. சந்திரன்
கட்டணம் 500/-
TIME: 8.00 AM - 1.00 PM
➢ வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
➢ எதிர்பார்க்கை வினாக்களும், பாடக்குறிப்புக்களும் வழங்கப்படும்.
றோயல் அக்கடமி அரசடி வீதி, யாழ்ப்பாணம் 0776649134
(சி-6441)

## ஆறு உப குழுக்களின்....

பான உபகுழு,நிதி தொடர்பான உபகுழு, பொது மக்கள் பாதுகாப்பு, பொலிஸ், சட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பான உபகுழு, அரச சேவையில் மறுசீரமைப்பை ஏற்படுத்துவதற்கான உபகுழு மற்றும் மத்திய அரசுக்கும் மாகாணங்களுக்கும் இடையிலான உறவுகளை கட்டியெழுப்புவதற்கான உபகுழு ஆகியவற்றின் அறிக்கைகளே நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள உபகுழுக்களுக்கு ஒவ்வொரு அரசியல் கட்சியையும் சேர்ந்த உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை அந்த உப குழுக்களுக்கு தலைவர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

உப குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், புதிய அரசியல் யாப்பை தயாரிப்பதற்கான உத்தேச அறிக்கை முன்வைக்கப்பட்டதும், அந்த அறிக்கை நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் என தெரிவித்தார்.

அதேவேளை சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாகவும் உத்தேச அரசியல் யாப்பு அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர இரா.சம்பந்தன் தெரிவித் துள்ளார். எதிர்க்கட்சித் தலைவரின் இந்த கருத்துக்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கீகரித்துள்ளார்.(செ)

## இராணுவச் சூழ்ச்சி அரசுக்கு...

நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத்திட்டத்தின் குழு நிலை விவாதத்தின் முதலாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது தினேஸ் குணவர்த்தன தெரிவித்த இந்தக் கருத்தால் நாடாளுமன்றில் பெரும் குழப்பமும் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று நாடாளுமன்ற கூட்டத் தொடரில் கலந்துகொண்டிருந்த நிலையிலேயே, இராணுவ சதிப் புரட்சியொன்று ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அவருடைய இந்தக் கருத்தைத் தொடர்ந்து ஆளும் கட்சி உறுப்பினர்கள் அவருக்கு எதிராக குரல் எழுப்பியதுடன், எதிர்த்தரப்பிலிருந்த ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதிலுக்குக் குரல் எழுப்பியதால் சிறிது நேரம் சபையில் சலசலப்பு ஏற்பட்டது.

இதேவேளை, ஜனாதிபதி முன்னிலையில் இராணுவ சூழ்ச்சி ஏற்படப் போவதாகக் கூறுவது அவரை அகௌரவப்படுத்துவதாக அமைந்திருப்பதாக தினேஷ் குணவர்த்தனவின் பின்னர் உரையாற்றிய பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார். (செ-11)

அதிரடி விலைக்குறைப்பு!!



என்ன ஆச்சரியமாக இருக்கிறதா?
இன்று முதல்
அனைத்து விளம்பரப் பலகைகள் மற்றும் பனர் பிறிண்டிங் வேலைகளுக்குமான விலைகள் சடுதியாக குறைக்கப்பட்டுள்ளன!
எமது உற்பத்திகளுக்கான மூலப் பொருட்களை நாம் இப்போது குறைந்த விலையில் நேரடியாக இறக்குமதி செய்வதனால் இவ் விலைக்குறைப்பானது சாத்தியமாகியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



3 வருட உத்தரவாதத்துடன்
ஒருபக்க டிஜிற்றல் விளம்பரப்பலகை (கல்வனைஸ் சீற் இல்லாமல்) High Quality 190/- சதுர அடி
ஒருபக்க டிஜிற்றல் விளம்பரப்பலகை (கல்வனைஸ் சீற்றுடன்) High Quality 250/- சதுர அடி
ஒருபக்க ஒளியூட்டப்பட்ட விளம்பரப்பலகை (Light Board) High Quality 490/- சதுர அடி
டிஜிற்றல் பனர் பிறிண்டிங் சதுர அடி 38/- இலிருந்து
4 Colour ID Card 100/- 50இற்கு மேற்பட்ட எண்ணிக்கை
Mug Print 350/- 100இற்கு மேற்பட்ட எண்ணிக்கை 450/- Mug 01இற்கு



உங்கள் வேலை திருப்திகரமானதாக அமைய நாங்கள் உத்தரவாதமளிக்கின்றோம்
ANDRA DIGITAL IMAGE
வடக்கில் அச்சுப்பதிப்பின் தனித்துவமான நிறுவனம்
021 221 7279 / 021 222 8929 / 077 7481696
(சி-6440)

அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK – 550*/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226243
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS (C-6359)

**வேலையாட்கள் தேவை**
அளவெட்டியில் இயங்கும் பலசரக்குக் கடை ஒன்றுக்கு சேல்ஸ்மன் (பொருட்களை கட்டிக் கொடுப்பவர்) , சிட்டை எழுதுநர் (ஆண், பெண்) போன்ற வேலையாட்கள் தேவை.
தொடர்புகளுக்கு:
077 894 3539
(6644)

CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு
வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வேலைவாய்ப்பு உத்தரவாதம் *Condition apply
100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி



12th Batch start on :- 23.11.2016
Mobile Phone Repairing Course



9th Batch start on 10.12.2016
Weekdays & Weekend Batches
SmartPhoneகள் உட்பட அனைத்து Phoneகளிலும் பயிற்சி விளங்கக்கூடியவகையில் கற்பிக்கப்படும்.
iCS EDUCATION 77, மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம் (பெருமாள் கோவில் அருகாமையில்)
076-7013060 , 021-7306000
(சி-6434)



புதிய பிரிவுகள் ஆரம்பம்
LONDON METROPOLITAN COLLEGE
IELTS
Duration : 60 hours (Week, Weekends)
• Student Visa • Skill Migration
IELTS LIFE SKILLS A1, B1
(Speaking & Listening)
Duration : 48 hours (Week, Weekends)
UKBA இன் புதிய நடைமுறைக்கேற்ப Settlement விசாக்களுக்கான IELTS A1 பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.
APPLIED SPOKEN ENGLISH (with Grammar)
Duration: 48 hours (Week, Weekends)
ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்துக்கொள்ள விரும்புவோர்க்கான கற்கை நெறி
DIPLOMA IN ENGLISH
Duration: 60 hours (Week, Weekends)
COMPUTER COURSES
▸ Certificate in MS Office 2013
▸ Certificate in JAVA, VB, Net, C#
▸ Internet & Email
▸ Diploma in Computer Studies
▸ Diploma in Computer Programing
LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road, parameswara junction, Jaffna.
HOTLINE : 0714150995 I 021 753 8395
(சி-6433)

நீர்க்கசிவைத் தடுப்பதற்கு (Water Proofing)
உங்கள் இல்லங்கள், நிறுவனங்கள் போன்றவற்றிலுள்ள சீமெந்தினாலான கட்டடங்கள், நீர்த்தாங்கிகள் மற்றும் மாடிக் கட்டடங்களில் உள்ள குளியல் அறைகள் என்பவற்றில் ஏற்படும் நீர்க்கசிவுகளை தடுத்து நிறுத்துவதுடன் உங்களின் வீட்டுச் சுவர்களில் ஏற்படும் நீர்க் கசிவுகளின் பாதிப்புக்களை உத்தரவாதத்துடன் சீர்செய்து தருவதோடு கோவில்,வில்லு மண்டபம் கோபுரங்களுக்கிடையிலான நீர்க் கசிவுகளையும் நிறுத்தித் தருகிறோம்.
FINCO ஸ்தாபனத்தின் ஏக விநியோகஸ்தர்களாகிய எங்களிடம் விசேட கழிவு வழங்கப்படும்.
(சி-6323)
N&EE FINCO
North and East Engineering
No.55, Stanly Road, Jaffna.
பீப்பிள் லீசிங்குக்கு முன்பாக
021 222 2363, 077 524 4177, 077 232 3000

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
சங்குநாதம்
Sankunatham
நாதம் 92
வள்ளுவர் ஆண்டு 2047 20.11.2016 தொலைபேசி : 021 222 3378

# இனவாதப் பேயை இல்லாதொழியுங்கள்

## "கவுண்ட்டவுண்" ஆரம்பம்










உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் எண்டு வாத்தியார் அறிவித்ததும் அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**வாத்தியார்:** யாழ்ப்பாண மாநகர சபையில கடமையாற்றும் சுத்திகரிப்புப் பணியாளர்களின்ர வேலை நிறுத்தப் போராட்டம் ஒரு மாதிரியாக முடிவுக்கு வந்திருக்கு...

**விதானையார்:** வேலை நிறுத்தம் முடிவுக்கு வராவிட்டால் யாழ்ப்பாணம் நாறியிருக்கும். அதிலும் இப்ப பெய்யிற மழைக்கு குப்பை கூழங்கள் அகற்றப்படாமல் இருந்தால் நிலைமை எப்படி இருந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்க்கக்கூட நெஞ்சம் பதறுது.

**கங்காணி:** யாழ்ப்பாண மாநகர சபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் முழுமையாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால யாழ்ப்பாண மாநகரம் முழுவதிலும் குப்பைகள் தேங்கத் தொடங்கிற்று. எங்க போய் முடியுமோ எண்டு ஏங்கின நேரத்தில எங்கட வடக்கு மாகாண சபை உறுப்பினர் தம்பி சிவாஜிலிங்கம் தலையிட்டு ஒரு மாதிரியா வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

**மூப்பர்:** அது சரி வாத்தியார் யாழ்ப்பாண மாநகர சபையின்ர சுத்திகரிப்பு ஊழியர்கள் ஏனாம் வேலை நிறுத்தம் செய்தவியள்.

**வாத்தியார்:** ஏன்? மூப்பர் பேப்பர் ஒண்டும் பார்க்கிறதில்லையோ. கடந்த ஏழு வருடமாக தங்களை நிரந்தரமாக்காமல் நாட்கூலியில வைத்து வேலை வாங்குவதாகவும் தமக்கு உடனடியாக நிரந்தர நியமனம் தருமாறும் கோரித்தான் வேலை நிறுத்தம் நடந்தது.

**மூப்பர்:** அவர்கள் கேட்கிறது நியாயம்தானே. ஏழு வருடமா நிரந்தர நியமனம் இல்லை எண்டால் அதுகளின்ர குடும்பம் எப்படிச் சீவியம் நடத்துறது.

**சாத்திரியார்:** மூப்பர் பதவியில நிரந்தரமாக்கிறது என்ற விடயம் தானாக நடக்க வேணும். அப்பதான் அந்த ஊழியர்களும் மனத்திருப்தி யோட வேலை செய்வினம். ஆனால் எங்கட நாட்டில வேலை நிறுத்தம், சாகும் வரை உண்ணாவிரதம் எண்டு போராட்டம் நடத்தினால் தான் நிரந்தர நியமனம் வழங்குறதுக்கு நடவடிக்கை எடுப்பினம்.

இதைத் தெரிந்ததாலதான் யாழ்ப்பாண மாநகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்களும் முழுமையாக வேலை நிறுத்தத்தில ஈடுபட்டிருக்கினம் போல.

**பண்டிதர்:** ஊழியர்களை உரிய காலத்தில நிரந்தரமாக்கிறது கட்டாயம் நடக்க வேணும். ஆனால் அதற்காக சுத்திகரிப்புப் பணியை முற்றுமுழுதாகச் செய்யாமல் விடுறது என்பதை நான் ஒரு போதும் ஏற்கமாட்டன்.

ஊழியர்களின்ர உரிமைகளும் நலன்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில மாற்றுக் கருத்திற்கிடமில்லை.

அதேநேரம் சுத்திகரிப்புப் பணி என்பது மிகமிக அத்தியாவசியமான பணி. இந்தப் பணியை முற்றுமுழுதாக நிறுத்துகிறது கடமையை உதாசீனம் செய்யிறதாகவே கருத வேணும்.

அனைத்து சுத்திகரிப்பு ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில ஈடுபடுவது என்ற தீர்மானத்தை எடுத்த தொழிற் சங்கத்தின்ர முடிவு என்பது ஒரு நீதியான முடிவல்ல என்பது என்ர கருத்து.

சட்டப்படி வேலை செய்யிறது அல்லது முக்கியமான சுத்திகரிப்புப் பணியில ஈடுபடுவது அல்லது நிரந்தர நியமனம் பெற்றவர்கள் வேலை செய்ய நிரந்தரமாக்கப்படாத ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில ஈடுபடுவது என்றவாறாக போராட்டத்தை முன்னெடுத்திருந்தால் தேவையற்ற அசௌகரியங்களைத் தவிர்த்திருக்க முடியும்.

**வாத்தியார்:** பண்டிதர் சொல்லுறதிலும் நியாயம் இருக்கத்தான் செய்யிது. யாழ்ப்பாண மாநகரத்தை நாற வைத்துக் கொண்டு ஊழியர்களின் உரிமையை மட்டும் கேட்பதென்பது சுயநலம் என்பதாகவே பார்க்கப்படும் .

எதுவா இருந்தாலும் இதுபோன்ற சம்பவங்கள் இனிமேல் நடக்காமல் இருக்க வேணும்.

ஆகையால இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாத ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கி வேலையில உத்தரவாதத்தைக் கொடுப்பது கட்டாயம்.

அதுமட்டுமல்ல சுத்திகரிப்புப் பணியில ஈடுபடுகிற ஊழியர்களின்ர நலன்கள் அவர்களுக்கான தொழிற் பாதுகாப்பு இவற்றைச் செய்து கொடுப்பதும் அவசியம்.

**விதானையார்:** அது சரி வாத்தியார் எங்கட சிவாஜி லிங்கத்தார் போய் உத்தரவாதம் வழங்கி யாழ்ப்பாண மாநகரசபை சுத்திகரிப்பு ஊழியர்களின் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த பின்பு, அன்றைய நாள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின்ர யாழ்ப்பாண அலுவலகத்தில சுத்திகரிப்புப் பணியாளர்கள் சிலரை அந்தக் கட்சி சார்ந்த மூன்று பேர் சந்தித்தவியளாம். அதிலும் இந்தச் சந்திப்பு இரவு நேரத்தில நடந்திருக்கு.

**கங்காணி:** நானும் கேள்விப்பட்டனான். சிவாஜிலிங்கத்தார் உத்தரவாதம் வழங்கி வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த பின்பு அதேநாள் இரவுப் பொழுதில இந்தச் சந்திப்பு ஏன் நடந்தது. இதன் நோக்கம் என்ன என்பதுதான் தெரியாமல் இருக்குது.

**சாத்திரியார்:** கங்காணி யார் இந்தச் சந்திப்பில கலந்து கொண்ட அந்த மூன்று பேரும் வேலை நிறுத்தம் நடந்தபோது அந்த ஊழியர்களைப் போய்ச் சந்தித்தவியளோ.

**கங்காணி:** சாத்திரியார் அதுதானே நடக்கல்ல. ஏழெட்டு நாளாக யாழ்ப்பாண மாநகர சபையின்ர அலுவலகத்திற்கு முன்னால சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் குந்தியிருந்த போது ஏன்? எதற்கு எண்டு கேட்காமல், போராட்டத்தைக் கைவிட்ட பின்பு அதிலும் சிவாஜிலிங்கத்தார் உத்தரவாதம் கொடுத்து வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த பின்பு சந்திப்பு நடந்தது தான் சந்தேகத்தை தருகுது.

**வாத்தியார்:** அரசியலில இதெல்லாம் சகஜமப்பா. இதை விட்டிட்டு மாநாட்டிற்கு வந்த கடிதங்களை வாசியுங்கோ.

**விதானையார்:** கடிதங்களை அடுத்த மாநாட்டில வாசிப்பம்.

இப்ப வன்னியில உள்ள ஒரு பாடசாலையில சப்பாத்து அணியாமல் வந்த மாணவர்களின்ர பாட்டாக்களை ஒரு ஆசிரியர் தீயிட்டுக் கொளுத்தியதாக ஒரு செய்தி, இதுபற்றி ஆலடி மாநாட்டில ஏன்? கதைபடவில்லை எண்டு பலரும் கேட்கினம்.

**வாத்தியார்:** விதானையார் நீங்கள் சொல்லுறதில உண்மை இருக்கத்தான் செய்யுது. எல்லாப் பிள்ளைகளுக்கும் சப்பாத்து வாங்கிற வசதி இருக்காது. இருந்த சப்பாத்தும் கிழிந்து போனால் என்ன செய்யிறது.

சப்பாத்து அணிந்து மாணவர்கள் பாடசாலைக்கு வருவது முக்கியம் தான். சப்பாத்து வாங்க வசதியில்லாத பிள்ளைகளுக்கு யாருடைய உதவிகளையாவது பெற்று சப்பாத்து வாங்கிக்கொடுக்கிற பணியைப் பாடசாலைச் சமூகம் செய்யுமாக இருந்தால் அதுதான் மிகப் பெரும் புண்ணியம்.

எப்பவும் அன்பு நிறைந்தவர்களாக நாம் இருந்தால் எல்லாம் சாத்தியமாகும். இப்படி வாத்தியார் கூறியதும் ஆலடியில் மௌனம் நிலவியது.

மாநாட்டில் நிலவிய மௌனத்தைக் கலைத்து வாத்தியார் சொன்ன அன்புதான் இந்த உலகின் மிகப்பெரும் சக்தி என் பதை அங்கீகரிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடி யில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## போராட்டம் நின்ற பின்பு நடந்த சந்திப்பு அறிந்தீரோ

*ஆலடி மாநாட்டுக்கு உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள்.*

ஆதித்தன்



# இனவாதப் பேயை இல்லாதொழியுங்கள்



இலங்கையில் மீண்டும் தலைதூக்கியுள்ள இனவாதச் செயற்பாடுகளை இல்லாதொழிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேரடியாகக் களத்திலிறங்கியுள்ளார்.

நாட்டில் இனவாதம் பேசும் அனைவருக்கு எதிராகவும் தயவு தாட்சண்யம், இன, மத பேதம பார்க்காமல் உடன் நடவடிக்கையில் இறங்குமாறு உத்தரவிட்டுள்ளதன் மூலம் அதிரடி நடவடிக்கைகளுக்கு அவர் தயாராகியுள்ளார் என்பது வெளியுலகிற்கு வந்துள்ளது.

கொழும்பில் கடந்த 17 ஆம் திகதி இரவு 8 மணியிலிருந்து பத்து மணிவரை இடம்பெற்ற பாதுகாப்புசபைக் கூட்டத்தில் இனவாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இனவாதக் கருத்துக்களை சமூகவலைத்தளங்களில் பதிவிடுபவர்களையும் கண்காணித்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் இதன்போது ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி இவ்வாறு உத்தரவிட பல காரணங்கள் உள்ளன. மட்டக்களப்பு விகாராதிபதியான மங்கள ராமயதேரரின் இனவாத, மதவாத, அடாவடித்தனமான செயற்பாடுகள் முக்கிய காரணம் எனலாம்.

மட்டு. விகாராதிபதியின் இனவாதச் செயற்பாடுகளுக்கு எதிராக வெளிக்காட்டப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளும் விகாராதிபதியின் வில்லங்கமான இனவாதச் செயற்பாடுகளும் முடிவுக்கு வரமுன்னர் மீண்டும் இனவாதச் செயற்பாடுகள் அரங்கேறியுள்ளன.

வடக்கு மாகாண (தமிழ்) மக்களின் ஏகோபித்த தெரிவாக அரசியலுக்குள் நுழைந்த நீதியரசர், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை கடும் இனவாதியாகச் சித்திரித்து நாட்டைப் பிளவுபடுத்தும் தமிழ் அரசியல் தலைவராகவும் கடும் இனவாதியாகவும் காண்பித்து காணொலி வெளியிடப்பட்டுள்ளது.

இந்தக் காணொலியில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புடன் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை இணைத்துக் காண்பித்து புலிகள் அமைப்பை மீள உருவாக்க முயற்சிக்கிறார் என்று கடுமையாக சாடியுள்ளனர்.

இத்தகைய இனவாதச் செயறபாடுகளில் சிங்களவர்களே அதிகமாக ஈடுபடுகின்றனர் என்பது தற்போது பட்டவர்த்தனமாகியுள்ளது.

தமிழர்களை இனவாதிகளாகவும் பயங்கரவாதிகளாகவும் சித்திரித்து அதன் மூலம நாட்டில் பிரிவினையையும் கலவரங்களையும் ஏற்படுத்தி தமது நோக்கங்களை நிறைவேற்ற துடிக்கின்றனர்.

ஆனால், நல்லிணக்கம், நீடித்த சமாதானத்தை எதிர்பார்த்துள்ளத்தாகக் கூறும் நல்லாட்சியின் தலைவர் ஜனாதிபதி, இனவாதிகளின் செயற்பாடுகளை முற்றிலுமாக ஒடுக்க வேண்டும் என்பதுவே தமிழ் மக்கள் உட்பட நாட்டிலுள்ள பொதுமக்களின் கோரிக்கையாகவுள்ளது.

இதேவேளை இனக்கலவரத்தை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருப்பதாக கூட்டு எதிரணி கூச்சலிடும் அளவிற்கு இனக்குரோதங்கள் மேலோங்கியுள்ளன.

தமிழ் மக்களை அடிமைப்படுத்துவதையே இலக்காகக் கொண்டவர்கள் போன்று சிங்களவர்கள் செயற்படுவதால் இந்த அச்சம் தமிழ் மக்கள் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது.

"சிங்களவர்களை அச்சுறுத்தினால் தமிழருக்கு நிம்மதி கிடைக்காது என்று முன்னாள் பொருளாதார அமைச்சரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான பசில் ராஜபக்ஷ எச்சரிக்கும தொனியில் கூறியுள்ளார்.

மகிந்த ஆட்சிக்காலத்தில் வெளிவிவகார அமைச்சராக இருந்த பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தலைமையில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் கடந்த 17 ஆம் திகதி தன்னை அங்கத்தவராக இணைத்துக் கொண்ட பன்னர் கொழும்பு ராஜகிரியவில் உள்ள மகிந்த ராஜபக்ஷவின் அலுவலகத்தில் நடந்த அக்கட்சியின் முதலாவது ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அதேவேளை தவறுகளைத் தாங்கள் உணர்ந்துள்ளதாகவும் மீண்டும் ஆட்சியமைக்க ஒரு சந்தர்ப்பத்தைத் தருமாறும் கோரியுள்ளார்.

ஜி.எல்.பீரிஸ் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட கட்சிக்கு பொது எதிரணியான மகிந்த அணியின் முழு ஆதரவு உண்டு என்று நாட்டு மக்கள் நன்றாக அறிந்திருந்தும் அந்தக் கட்சிக்கும் தனக்கும் எந்தவதத் தொடர்பும் இல்லை என்றாற் போல் மகிந்த ராஜபக்ஷ கருத்துரைத்து வந்தார்.

ஆனால், தற்போது பசில் ராஜபக்ஷ அக்கட்சியில் அங்கத்துவம் பெற்றுள்ள அதேவேளை அண்ணன் மகிந்த ராஜபக்ஷ விரைவில் பெரமுனவின் தலைமைப் பதவியை ஏற்றுக் கொள்வார் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவராக நீண்டகாலம் இருந்தவர். அவர் இப்போதும் அக்கட்சியின் போசகராகவுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் தான் இறுதியாக இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் பிரதமர் கனவுடன் களம் கண்டார். இவ்வாறு சுதந்திரக்கட்சிக்கும் மகிந்தவுக்கும் இடையிலான தொடர்பை பீரிஸ் தலைமையில் ஆரமபிக்கப்பட்ட கட்சியின் வளர்ச்சியையும் எழுச்சியையும் காண்பதற்கு முன்னர் கைவிட வாய்ப்பில்லை.

அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவராக ஜனாதிபதி மைத்திரி இருக்கும் வரை மகிந்த தலையெடுக்க முடியாது. மைத்திரியுடன் சுதந்திரக்கட்சியின் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க போன்றோர் ராஜபக்ஷ குடும்பத்தாரை கட்சிக்குள் ஆதிக்கம் செலுத்தவிட மாட்டார்கள் என்பது உறுதியானது.

சு.கவினரை அச்சுறுத்தி அடிபணிய வைக்கும் நோக்குடனும் கட்சிக்குள் ஆதிக்கமுள்ள தரப்பாக மீண்டும் எழுச்சி பெறும் நோக்குடனும் ஆரம்பிக்கப்பட்ட தாமரை மொட்டை சின்னமாகக் கொண்ட பெரமுனவின் எதிர்பார்ப்பு செல்லாக் காசானது.

இக்கட்சிக்கு தனது ஆதரவுண்டு என்று கூறமுடியாத நிலைக்கு மகிந்த தள்ளப்பட்டுள்ளார்.





ஆனால், இனவாதத்தை கக்கும் நடவடிக்கையில் அவரும் அவரைச் சார்ந்தோரும் என்றும் பின்நிற்கமாட்டார்கள் என்பது பசிலின் அண்மைய கருத்தின் ஊடாக வெளிப்பட்டுள்ளது.

இலங்கையில் இனவாதிகளை இல்லாதொழிக்கும் ஜனாதிபதியின் முயற்சிக்கு தமிழர்கள் என்றும் தடையாக இருக்க மாட்டார்கள். நல்லிணக்கம், சமாதானத்தை தமிழர் தரப்பு என்றும் வெறுக்கவில்லை என்பதை ஆயுதப் போராட்டக் காலத்திலேயே வெளிப்படுத்தியிருந்தனர்.




அவ்வாறு இருக்கையில் போர்க்குற்றங்களைச் சுமந்து இன அழிப்புக்கு உட்பட்டு நிற்கும் நிர்க்கதியான நிலையில் தமிழினம் சமாதானம், நல்லிணக்கம் மீது பற்றை இழக்காது.

எனவே இனவாதிகளை அடக்கி ஒழிக்கும் ஜனாதிபதியின் நடவடிக்கையை காணொலி வெளியிட்டவர்களைக் கைது செய்வதன் ஊடாக ஆரம்பித்தால், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை தெரிவு செய்த மக்கள் தான் தங்களையும் ஜனாதிபதியாக்கினார்கள் என்பதை தாங்கள் மறக்கவில்லை என்பதையும் செய்நன்றி மறவாமையை வெளிப்படுத்தியவராகவும் பார்க்கப்படுவீர்கள்.

மட்டு. விகாராதிபதி மீது தாங்கள் உடனடி நடவடிக்கை எடுக்க முடியாத தர்மசங்கட நிலையை தமிழர்கள் நன்கறிவர். ஆனால், இனவாதக் காணொலி வெளியிட்டவர்களைக் கைது செய்யத் தடையில்லை.

இனவாதிகள் யாராக இருந்தாலும் தயவுதாட்சண்யம் இன்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாட்டு மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி விட்டு விகாராதிபதி மீது எவ்வாறு நடவடிக்கை எடுப்பது என்று தயக்கம் காண்பித்தால் பொது ஒழுங்கிற்குள் எவரையும் கொண்டுவர முடியாத செயலற்ற தலைவராகவும் இனவாதியாகவும் அடையாளப்படுத்தப்படுவீர்கள்.

ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களையும் அழித்து இரத்தக் களறியை ஏற்படுத்துவேன் என்று பொதுபலசேனாவின் பொதுச் செயலாளரான பல குற்ற வழக்குகளுடன் தொடர்புடைய கலகொட அத்தே ஞானசார தேரர் போன்றவர்களால் பௌத்த மதமும் அனைத்து பௌத்த துறவிகளுக்கும இழுக்கு ஏற்படுவதைத் தடுக்க முற்படாதுவிட்டால் கால ஓட்டத்தில் தாங்களும் காணாமற்போய் விடுவீர்கள்.

நல்லாட்சியின் தலைவராகவும் நல்லிணக்கவாதியாகவும் நாட்டு மக்களுக்கு தோற்றமளிக்கும் ஜனாதிபதியான தாங்கள் இனவாதிகளை இல்லாதொழித்து ஆழ வேரூன்றியுள்ள இனக்குரோதங்களையும் களைய வேண்டும் என்பதே அனைத்து மக்களின் எதிர்பார்ப்பு.

எஸ்.ஆர்.கரன்




# உண்மையைச் சொல்கிறேன்

வெகு காலத்துக்கு முன் பழ முதிர்ச்சோலை என்ற நாட்டை மன்னன் பழவர்த்தன் ஆண்டு வந்தான்.

அவர் நீதி நெறி தவறாதவர், வாய்மை நிரம்பியவர், உண்மை பேசுபவர்.

தன்னைப் போலவே தன் குடிமக்களும் இருக்க வேண்டும் என்று விரும்புபவர்.

அவருக்கு திருமணமாகி நீண்ட நாட்களாகியும் குழந்தைகள் இல்லை. தனக்குபின் தன் நாட்டை ஆளத் தக்க வாரிசுகள் இல்லாததால், தன் நாட்டு மக்களில் நீதியும் நேர்மையும் தவறாத உண்மையான ஒரு இளைஞனைக் கண்டுபிடித்து, அவனை மன்னனாக்க வேண்டும் என்று விரும்பினார்.

இதற்காக யாருடைய ஆலோசனையையும் நாடவில்லை.

அவரே மிகச் சிறந்த அறிவாளியாக இருந்த படியினால், பல நாட்கள் யோசித்து ஒரு முடிவு செய்தார்.

நாட்டில் உள்ள வீரம் மிக்க இளைஞர்களை அழைத்து வில் போட்டி நடத்தினார்.

அதில் வென்றவர்களை அழைத்து, வாள் போட்டி நடத்தி பரிசீலனை செய்தார்.

அதன்பின், வாய் மொழிக் கேள்விகள், சமயோசிதமான கேள்விகள் என்று இராணுவத்துக்கு ஆள் எடுப்பதைப் போல அவர்களைச் சோதித்தார்.

கடைசியாக, பத்து இளைஞர்கள் தேறினர். அவர்களை மன்னர் அழைத்து, அவர்கள் அனைவரிடமும் தனித்தனியாக ஒரு செடியின் விதையைக் கொடுத்தார்.

இந்த விதையை ஒரு தொட்டியில் போட்டு வளர்த்து, கவனமுடன் கண்காணித்து, ஆறு மாதம் சென்ற பிறகு, வளர்த்த செடியுடன் என் முன் வரவேண்டும்.

இதுதான் நான் உங்களுக்கு வைக்கக்கூடிய இறுதி கட்டச் சோதனை என்றார்.

பத்துப் பேரும்



அதனை வாங்கிக் கொண்டனர்.

அதில், சாந்தனு என்ற வாலிபன் ஒருவனும் இருந்தான். எல்லோரும் மன்னர் சொன்னபடி அந்த விதையைத் தொட்டியில் போட்டுச் சிறந்த உரங்களையும், எருவையும் இட்டு வளர்க்க ஆரம்பித்தனர்.

சாந்தனுவும் அப்படியே செய்தான்.

ஆனால், என்ன காரணத்தினாலோ அவனது விதை முளைத்துச் செடியாகவில்லை.

மற்றவர்களின் வீட்டுக்குப் போய் அவர்கள் செடி வளர்ந்திருக்கிறதா? என்று அவன் கண்காணித்தான்.

என்ன ஆச்சரியம்! மற்றவர்களின் விதையானது நன்றாக முளைவிட்டு, இலை விட்டுச் செழித்து வளர ஆரம்பித்திருந்தது.

வீட்டுக்கு வந்த சாந்தனு தன்னிடமுள்ள விதை செடியாக எல்லாவிதமான முயற்சிகளையும் செய் தான்.

ஆனால், என்ன காரணத்தினாலோ, அந்த விதை முளைக்கவில்லை.

"முளைக்காத விதையை ஒரு வேளை மன்னர் தனக்குத் தந்திருப் பாரோ?" என்று எண்ணினான். மறுகணமே, ச்சே... என்ன மோசமான எண்ணம்... எல்லோருக்கும் கொடுத்தது போலத்தான் எனக்கும் கொடுத்தார்.

என் விதை முளைக்கவில்லை என்றால் அது என் துரதிர்ஷ்டம். மற்றவர்கள் விதை எல்லாமே முளைத் திருப்பது அவர்களுடைய அதிர்ஷ்டம்.

"ஆறு மாதம்வரை பொறுத்திருந்து பார்ப்போம்... அப்போதும் விதை முளைக்காவிட்டால்,

"அரசே, என் விதை மட்டும் முளைக்கவில்லை" என்று உண்மையைக் கூறி விடுவோம். அதற்காக மன்னர், நான் சரியாக செடியைப் பராமரிக்கவில்லை என்று கருதி எனக்குத் தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்வோம்! என்று கருதினான்.

ஆறு மாதம் சென்றன.

வெற்றிப் பெருமிதத்துடன் மீதியுள்ள ஒன்பது பேரும் தங்கள் கையில் தொட்டியை ஏந்தி வந்தனர்.

அதில் இரண்டடி நீளத்துக்குச் செடி வளர்ந்திருந்தது. அது ஆரோக்கியமாக இருந்தது.

மன்னர் எல்லோருடைய தொட்டிகளையும் பார்த்துக் கொண்டே வந்தார். அவர் இதழ்களுக்கிடையில் புன்முறுவல் ஒன்று நெளிந் தது.

சாந்தனுவிடம் வந்ததும் அவன் காலித் தொட்டியுடன் நிற்பதைக் கண்டவுடன் மன்னர் முகம் மாறியது.

நடுநடுங்கிப் போனான் சாந்தனு. அவனையே உற்றுப் பார்த்த மன்னர் அவனிடம் அதிகாரமாக கேட்டார்,

"உன்னுடைய பெயர் என்ன?"

"என் பெயர் சாந்தனு அரசே!" தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும்.

நான் ஆறு மாத காலமாக இந்த விதையைச் செடியாக்க எவ்வளவோ பாடுபட்டேன்.

ஆனால், உண்மையிலேயே என்னால் அதைச் செடியாக்க முடியவில்லை. என்னை நம்புங்கள் அரசே! என்று மண்டியிட்டு கதறினான்.

மன்னர் கீழே குனிந்து அவனைத் தூக்கி நிறுத்தித் தன் மார்போடு அணைத்துக் கொண்டார்.

"எதிர்கால மன்னனைத் தேர்ந்தெடுக்கவே இப்போட்டிகளை வைத்தேன்.

அதில் வென்றவனாக இந்த சாந்தனுவை அறிவிக்கிறேன். இவன்தான் எதிர்கால மன்னன்!" என்றார்.

இதைக் கேட்ட அனைவரும் வியப்படைந்தனர்.

முதலமைச்சர் எழுந்து, "அரசே, தாங்கள் சொன்னபடி ஒரு செடி கூட வளர்க்கத் தெரியாத இந்த வாலிபனா எதிர்கால மன்னன்? மன்னருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து செடியைக் கண்ணும் கருத்துமாகப் பராமரிக்காமல் சோம்பேறித்தனமாக இருந்து விட்டு, வெறும் பூந்தொட்டியைக் காட்டிய இவனா இந்த நாட்டு மன்னன்?" என்று கேட்டார்.

"அமைச்சரே, நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டீர்கள்.

இவன் அவனால் ஆகக் கூடிய முயற்சிகளை எல்லாம் செய்து பார்த்தான் என்பதை நான் நம்புகிறேன்.

ஏன் தெரியுமா? நான் பத்து இளைஞர்களுக்கும் செடி வளர்க்கக் கொடுத்த பத்து விதைகளும் நன்றாக வேக வைக்கப்பட்டு உலர்த்தப்பட்ட விதைகள்.

"அதில் எந்தச் செடியும் முளைக்காது.

என்னிடமிருந்து பரிசுகளோ, பதவியோ பெறுவதற்காக மற்ற இளைஞர்கள் வேக வைக்கப்பட்ட விதைகளைத் தூக்கி எறிந்துவிட்டு, அதற்குப் பதிலாக அதே போன்ற நல்ல விதைகளை வாங்கிப் பயிரிட்டுச் செடிகளாக்கிக் கொண்டு வந்திருக்கின்றனர்.

"ஆனால் சாந்தனு அப்படிச் செய்யவில்லை.

அரச கட்டளையை ஏற்று ஆறு மாத காலம் போராடிப் பார்த்திருக்கிறான். விதை முளைக்க வில்லை என்றதும், அதை உள்ளபடியே என்னிடம் அறிவிக்கக் காலித் தொட்டியுடன் வந்தான்.

உண்மையைச் சொல்லும்போது என்னால் அவனுக்குத் தண்டனை ஏற்பட்டால் கூட அதைத் தாங்கச் சித்தமாயிருந்திருக்கிறான் என்பதை அவன் செயல், பார்வை, பேச்சு, வார்த்தை, நடத்தை மூலம் அறிந்து கொண்டேன்.

"இப்படி நேர்மையாக நடந்து கொண்டதன் மூலமாக அவனால் நிச்சயம் நாடு செழிக்கும்" என்றுதான் அவனை மன்னனாக அறிவித்தேன்.

மன்னரின் அறிவுக் கூர்மையை எண்ணி அனைவரும் வியந்து பாராட்டினர். அங்கிருந்த செடி வளர்த்த ஏனைய இளைஞர்கள் அரசனிடம் மன்னிப்புக் கோரினர். அரசனும் அவர்களை மன்னித்தார்.

**எவன் ஒருவன் சுகம், துக்கம் எல்லாவற்றையும் சமமாக எண்ணுகிறானோ அவனே வாழ்வின் உண்மையை உணர்ந்தவன் ஆவான்.**





# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



புதிய அமெரிக்க ஜனாதிபதியால் எமக்கு நன்மை கிடைக்குமா?

முதல் காதலை மறப்பது எப்படி?

எல்லாளன் ஆட்சிக்கும் இன்றைய ஆட்சிக்கும் என்ன வித்தியாசம்?

**இராசதுரை — சுழிபுரம்**

**எல்லாளன் ஆட்சிக்கும் இன்றைய ஆட்சிக்கும் என்ன வித்தியாசம்?**

அன்று அரசன் கையில் வாள். இன்று ஆவா குழு கையில் வாள். அவ்வளவுதான்.

**சயன் — யாழ்ப்பாணம்**

**அரசியலில் இனி என்ன மாற்றம் நடக்கும்?**

மாவீரர் தினம் வருகிறதல்லவா. அதனால் இவ்வளவு நாளும் தூக்கத்தில் இருந்த எம் அரசியல்வாதிகளின் தூக்கம் கலைந்து தீபம் ஏற்றுவது, அகவணக்கம் செலுத்துவது இப்படியெல்லாம் பேசி அடுத்த தேர்தலுக்கு அத்திபாரம் போடுவார்கள்.

**தர்சிகா — மல்லாவி**

**உண்மையான உறவுகள் யார்?**

நீ அழும்போது உன்னுடன் கூட யார் நிற்கிறார்களோ அவர்களே.

**லக்ஷ்மன் — கொடிகாமம்**

**முதல் காதலை மறப்பது எப்படி?**

பத்துமாதம் வயிற்றில் வைத்து தொப்புள் கொடியில் உணவளித்து பக்குவமாய்ப் பெற்றெடுத்த தாயை மறந்து தூக்கியெறியும் உங்களால் முதல் காதலை மறக்க முடியவில்லையோ?

**டிலா — துன்னாலை**

**உங்கள் வாழ்க்கையில் மிகப் பிடித்தவர்கள் யார்?**

என் மனைவி என்று சொல்வதை விட எனக்கு வேறு வழியில்லை. (வாழ்க்கைக்கு சோறு ரம்ப முக்கியமாச்சே)

**கமலேஸ்வரன் — யாழ்ப்பாணம்**

**மரமண்டை என்றால் என்ன?**

மரத்தை அறுக்க தூசி வரும். அந்த தூசிதான் உன் மண்டைக்குள் மூளைக்குப் பதிலாக இருக்கிறது என்பதுதான்.

**அறிவு — யாழ்ப்பாணம்**

**அனைவரும் வெளிநாடு சென்றால் ஈழத்தின் நிலை?**

வாக்குப்போட யாருமின்றி பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இன்னும் இன்னும் குறைக்கப்படும். குடியேற்றங்கள் தாராளமாய் நடக்கும். புரம் எல்லாம் புர ஆகும். வடக்கில் அவர்களுக்கு 3 எங்களுக்கு 2 என்கின்ற நிலை வரும். சந்திகளில் காணும் புத்தர் சிலைகளை வீட்டுக்கு வீடு காணமுடியும். எம் அடுத்த சந்ததி அடித்தால் அம்மா என்று கத்தாது. கத்தும் அம்மே...

**வக்சி — யாழ்ப்பாணம்**

**அண்ணன் காதலித்துக் கொண்டு தங்கை காதலிப்பதை தடுப்பது சரியா?**

தடுக்காவிட்டால் அவன் அண்ணன் அல்ல மாமா.

**லக்ஷன் — யாழ்ப்பாணம்**

**அமெரிக்க தேர்தலில் ஹிலாரியின் தோல்வி பற்றி?**

அமெரிக்க மக்களைப் புரிந்து கொள்ளவே முடியாது. தேர்தலுக்கு முன்பு நடைபெற்ற கருத்துக் கணிப்பிலெல்லாம் ஹிலாரிதான் வெல்லுவார் என்பது உறுதியாகியது. அதன் பின் என்ன ஆனது என புரியவே இல்லை

ஒரு பெண்ணிடம் உலக வல்லரசான அமெரிக்க ஜனாதிபதி பதவியைக் கொடுக்க அவர்கள் விரும்பவில்லையோ என எண்ணத் தோன்றுகிறது.

**அனு — பருத்தித்துறை**

**புதிய அமெரிக்க ஜனாதிபதியால் எமக்கு நன்மை கிடைக்குமா?**

அடிமைப்பட்ட இனத்திலிருந்து மீண்டுவந்த ஒபாமா இருக்கும் வேளைதான் வன்னியில் கொத்துக் கொத்தாய் எம்மினம் கொல்லப்பட்டது. கொட்டுண்ட குடலை அள்ளி கையில் வைத்தபடி என் இன இளைஞன் ஒருவன் கதறினான். ஏய் வெளிநாடே எங்களைக் காப்பாற்று என்று.
பசிக்கும் போது தானையா உணவுதேவை. அழும்போது தானையா ஆறுதல் தேவை. எமக்குத் தேவையானபோது யாரும் வரவும் இல்லை. வந்தவர்களை விடவும் இல்லை. இனி மோதகம் வந்தாலென்ன, கொழுக்கட்டை வந்தால் என்ன. எல்லாம் அவன் செயல்.

**ஒரு காதலன்**

**சாதி, மத, சொந்த பந்தங்களைக் கடந்தது தான் காதலா?**

ராஜேந்திரனின் மகன் சிம்புவிடம் கேட்டால் பதில் கிடைக்கும். இதற்கு அடுத்த வரிகூட இதுதான்.
***சொந்த பந்த எதிர்ப்பையெல்லாம் மீறி நிற்பதே காதலடி.***

**காயத்திரி — வத்தளை**

**போராட்டம் தான் வாழ்க்கையா?**

ஓட்டப் பந்தயத்தில் பங்குபற்றி விட்டு ஓடினால்தான் பரிசு கிடைக்குமோ என்று கேட்க முடியுமா? எமக்குத் தரப்படுவது எங்கோ எழுதப்பட்டது. ஏற்கவேண்டும். அதில் வரும் சவால்களை எதிர்த்து நடக்க வேண்டும். அப்படியென்றால்தான் அதன் பெயர் வாழ்க்கை.

**நந்தகுமார் — மானிப்பாய்**

**சில பிக்குகளின் நடவடிக்கை பற்றி?**

நடக்கும்போது கூட நிலத்தில் இருக்கும் உயிர்களைக் கொல்லக்கூடாது என்பதற்காகவே மிதிவெடிக்கட்டை போடுகிறார்கள். அந்த மிதிவெடியில் சிக்கும் உயிர்களை காக்கவே கையில் இருக்கும் விசிறியால் விசுக்கி நிலத்தில் இருக்கும் பூச்சிகளை விலக்கி நடக்கிறார். இதுதான் அவர்களின் மிதிவெடிக் கட்டைக்கும் விசிறிக்குமான அர்த்தம். உயிர்களிடத்தே அன்பு காட்டுவதுதானே மனிதம். இதைப்புரிந்து கொள்ளாதோரை அந்த நிலைக்குள் அடக்கி விடமுடியாது.

**தனு — புன்னாலைக்கட்டுவான்**

**திருஞானசம்பந்தன் அந்தக் காலத்திலேயே கோள்கள் பற்றிப் பாடினாரே. அவருக்கு விஞ்ஞானிப் பட்டம் வழங்கவில்லையே?**

என்ன செய்ய. அவர்தான் பாவப்பட்ட சைவ சமயத்தவர் ஆகிவிட்டாரே. யாரும் அடிக்கலாம், யாரும் எடுக்கலாம், யாரும் எதையும் பேசலாம் என்கிற நிலையில் இருக்கிறது சைவம். இந்த நேரத்தில் போய் விஞ்ஞானிப் பட்டம் கேட்க அவரையும் மதம் மாற்றிவிடுவார்களே. ஆதலால் பொறுமை காப்பீர்களாக.

**பகீரதன் — கொடிகாமம்**

**யாழ்ப்பாணத்தில் சரியா மழை இல்லாததற்கு காரணம்?**

நல்லவர்கள் இருக்கும் இடத்தில்தான் மழை பொழியும் என எங்கேயோ படித்த ஞாபகம் இருக்கிறது.

**நிரூஜன் — கொக்குவில்**

**ஏ.ஆர்.ரஹ்மான் பற்றி?**

ஏ.சே.திலீப்குமார் என்ற இயற்பெயருடன் சென்னையில் இசைக்குடும்பத்தில் பிறந்த ரஹ்மான் 11 வயதில் இளையராஜாவின் இசைக்குழுவில் கீபோட் வாசிப்பதற்காக சேர்ந்தார். 1992 இல் மணிரத்தினம் இயக்கிய ரோஜா படத்திற்கு இசையமைத்த அனைத்துப் பாடலும் ஹிட் ஆக ரஹ்மானின் பெயர் உலகிற்கு தெரிய ஆரம்பித்தது. தமிழ் சினிமா மற்றும் இந்தி, ஆங்கில சினிமாக்களுக்கு இசையமைத்து அனைத்திலும் வெற்றி கண்ட ரஹ்மான் ஒஸ்கார் வாங்கிய பின் அந்த மேடையில் பேசியபோது ***எல்லாப் புகழும் இறைவனுக்கே*** என்று பேசி அனைவர் மனங்களிலும் குடி கொண்டு விட்டார்.

**ரொஷானி — மல்லாவி**

**உண்மையான அன்பு எப்படியிருக்கும்.**

அம்மாவைப்போல

**உதயகுமார் — யாழ்ப்பாணம்**

**பணமா, பாசமா பெறுமதியானது?**

உன்னைப் பாதாளம் வரை கொண்டு செல்வது பணம். அந்தப் பாதாளத்தில் இருந்து மீட்பது பாசம்.

# கவிதைக் கலசம்



## ஒருதலைக் காதலர்கள்

ரோஜாவே
முள் வேலியாய்
காத்திருந்தது முட்கள்
உன்னைக்
காக்கத்தானோ?
கரம்பிடித்தாய்
மானிடர்தம் கரங்களை...
மல்லிகையே
உன்மீது கொண்ட
மயக்கத்தினால்
காலை மங்கி
மாலையானது– நீ
பூப்பதற்கே!
மாலையாய் மாறி
மணந்து கொண்டாய்
மங்கையர்தம்
கூந்தலை
சூரியனே!
உனக்காய்
தண்ணீரில் தவம்
இருந்தேன்
தேரினில் என்னைத்
தேடிவர
தாமரையாய் அவதரித்தேன்
உன் வரவிற்காக
இன்று
உன்னை வரவேற்க
என்று ஆனதோ!

ஸ்ரீயோதா

## சமர்ப்பணம்

ஏழ்மையில் உதித்து
எளிமையாய் வாழ்ந்து
உயர்கல்வி கற்று
பட்டம் பெறும் முன்
துப்பாக்கி சன்னம் தனை
பெற்றாயோ?
ஊடக பாடம் தனை
உயரிய கல்வி என நோக்கி
பாரிய பட்டம் பெற
பாடுபட்டு படித்தவனே
பயனின்றி, பாதியில்
பாரினை விட்டு பிரிந்தாயோ?
பண்பாய் சில நாட்கள்
நாடக பாடம்தனை– நானும்
உன்னிடத்தில் கற்ற அன்பு–இன்று
கொல்கின்றது என்னை– உன்னை
கொன்றவர்களை...

இ.ஜெனோசன்
இளவாலை

## கண்டேன் காதலை!

புதிதாக உணர்வுகள்
புரளுகின்ற வேளை
காலை நேரப் பேருந்தில்
காவிய காரிகை நீ
கனிந்திருப்பாயடி
சிட்டுக்குருவியாய் சிறகடித்து
சிரிக்கும் போது
கொட்டி உதிரும் சில்மிச
கவிகளை ஏந்தும்
அட்சய பாத்திரம்
ஆனேன் நானடி
அத்தனையும் கற்றது
உன்னால் தானடி
மேனகை ரம்பையெல்லாம்
இவ்வுலகிலே பார்த்ததில்லை
உன்னைக் கண்டதால்தானடி
இவ்வுலகமே புரியவில்லை
ஓ! இதன் பெயர்தான் காதலா?
ஆ! உன் பெயர்தான் மௌனமா?

பா.தர்சன்
அச்சுவேலி

## விழிநீரில் சொட்டும் நினைவு

கந்தக மணங்களின் மத்தியிலும்
கார்த்திகைப் பூக்கள் மலர்ந்து குலுங்க
சொட்டிடும் மழைத்துளிகள்
சொரிந்தன நீராய்

சுதந்திர வேட்கையை தன்னுள்ளே
சுமந்து சுமந்து உயிராகி
மண்ணுக்குள் போன வீரர்க்காய்
மலர்கிறது பூ– அழுகிறது வானம்

சொரியும் பூக்களெல்லாம்
சொர்க்கம் சென்று சேர்வதில்லை
நிச்சயம் சேரும்
அவர்தம் காலடியை, நம்புகிறோம்

மழையும் வெயிலும் அடிக்க
புயலும் புழுதியாய் கொட்ட
உறுதிமூச்சுக்கொண்டு
தம்மை தீயிலிட்டார்

மண்ணில் மறைந்து போவீர்
எம் மனங்களில் நிலையாய் வாழ்வீர்
எண்ணும் கருமம் யாவும்
உம் உறுதி நிலைக்கும் நெஞ்சில்

மாவை. நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்– 328



## ஏணி போல் நீ உயர்வாய்

இன்று நீ தூக்கும்
சுமை நாளை உன்
வாழ்வுக்கு வழி சமைக்கும்
உன்னால் சுமை தூக்க
முடியாவிட்டாலும்
புத்தகசுமையை
நீ சுமந்தே ஆக வேண்டும்
எனவே உன் வாழ்வில்
சந்தோசம் இதுதான் தம்பி
ஏணிபோல் உயர்வாய்

பா.கலாதேவி
சண்டிலிப்பாய் மேற்கு

## எதிர்காலம் உண்டு

வறுமையின் பிடியில்
வாடிய பிள்ளை
வாழ்வைத் தொலைத்து
வரண்ட வேளை
உணவுக்காக வருந்தி
ஏங்கும் நிலையில்
ஏக்கம் தீர்க்க
ஏற்றம் காண
வேண்டிய பணம்
கையிலே இருந்தாலும்
இழந்த வாழ்வும்
போன வலிமையும்
திரும்புமோ என்று
திகைக்காதே நின்று
ஏற்றம் காண
எதிர்காலம் உண்டு

சி.திவ்வியா
யா.ப.மெ.ம.வி

## ஊழல்

ஊழலுக்குள்ளே சுழலும் தேசம்
உறக்கமின்றி விழித்தெழும் மோசம்
பச்சைத்தாளில் பாசம் அதிகம்
பார்வை இருந்தும் குருடர்கள் தேசம்
வேலி இங்கே பயிரை மேய்ந்தால்
வெள்ளாடு தானும் பயிரை மேயும்
ஊழலெனும் மூண்டெழுந்து
உறிஞ்சிக் குடிக்குதே அட்டையுருவில்
பசுத்தோல் போர்த்தும் புலிகள் அதிகம்
பழகிப் பார்த்தால் புரியும் உலகம்
கள்ளும்கூட வெண்மை இங்கே
பருகிப்பார்த்தால் விளங்கும் உண்மை
ஊரும் உறவும் இருளில் ஏனோ
உண்மைகள் இங்கே தெருவில் தானோ

இளவரசு, ஒட்டுசுட்டான்

## கறுப்புப் பணம்

கட்டுக் கட்டாய்
கறுப்புப் பணத்தை– உன்
கைகளிலே திணித்த கள்வர்கள் யார்
கண்ணா நீ சொல்?
கள்ளங்கபடமற்ற–உன்
வெள்ளை மனதில்
காசாசையை ஊட்டி
கல்விக்குத் தடைபோடும்
கயவர்களின் வலையில்
வீழ்ந்துவிடாதே வீசியெறி தூரமாய்
இப்பணம் உனக்கு
வேண்டவே வேண்டாம்

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## குழந்தைத் தொழிலாளி

சமூகம் தாலாட்ட மறந்த இளசு
கல்வியின் வாடை வீசும் திசை
பார்க்க முனைந்து
தோற்றுப்போன மனசு
பக்குவமடையாத பருவம்
அழுத பொழுதுகளில்
கண்ணீர் வீழ்ந்த கன்னத்தில்
காயாத ஈரம்
எழுந்த கற்பனை எல்லாம்
அறுந்த அந்த நேரம்
புன்னகைச் சுவடு வதனத்திலே
தன்னிலை மறந்து!
காய்ந்த வயிறோ கடைசியில்
தினசரிப் பத்திரிகை சுமத்தி
குழந்தைத் தொழிலாளியாக்கியது

அராலியூர் சோ.சிவகுமாரன்

## அரக்க குணம்

கை நிறையப் பணம் தூக்கி
கனிவாகச் சிரித்துக்கொண்டு
கள்ளங்கபடமற்று நிற்கிறாய்
கவனம் கவனம்
களவு என்ற பெயரில்
கரம்கோர்த்து வரும்
அரக்ககுணம்
உன் கையில் உள்ளதற்காக
உன்னுயிரையே மாய்த்துவிடும்

ஜெ.தவேதன்
யாழ்.இந்துக் கல்லூரி

## துணிவோடு எழுந்து நில் தம்பி

பணம்தான் வாழ்க்கை என்று
மனப்பால் குடிப்பவர் போல்
பணத்தைக் கண்டு மனதை
மாற்றிவிடாதே தம்பி...!
எட்டி எட்டுமட்டும்தான் பாயும்
பணம் பாதாளம் மட்டும் பாயும்
என்றுகூறி உன் சிந்தையை
சிதறடிக்க முனைவோர் முன்
கல்வியே வாழ்க்கை என்ற
நல்லோர் வார்த்தையை...
மாண்புடன் மனதிருத்தி
துணிவோடு எழுந்து நில் தம்பி

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

# மௌனத்தின் தேடல் –329



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 23.11.2016ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# இனியும் பேசிக்கொண்டிருக்க முடியாது அடித்தாட வேண்டிய நேரமிது

## ட்ரம்ப் ஜெயித்த கதை





தேர்தலுக்குப் பிறகு ஒபாமாவுடன் முதல் சந்திப்பில்

டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மறுநாள், அமெரிக்காவில் உள்ள 25 நகரங்களில் மக்கள் வீதிகளில் திரண்டு 'எங்கள் ஜனாதிபதி ட்ரம்ப் அல்ல!' எனப் போராடத் தொடங்கிவிட்டனர் பெருந்துயர் நிகழ்ந்து விட்டதைப் போல், பல அமெரிக்கர்கள் மெழுகுவர்த்தியை ஏந்தியபடி வீதிகளில் ஊர்வலம் சென்று கொண்டிருக்கிறார்கள். 'டொனால்ட் ட்ரம்ப்பை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறோம் என, என் மகளிடம் எப்படிச் சொல்வேன்?' என டுவிட்டரில் மனம் வெதும்பி வெடித்திருக்கிறார் ஓர் அமெரிக்கத் தாய். 'ட்ரம்பைத் திரும்பப் பெறுவதற்கு ஏதேனும் வழி இருக்கிறதா?' என, சிலர் கூகுளிடம் அப்பாவித்தனமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எல்லா வேலைகளையும் தூக்கிப் போட்டுவிட்டு சமூக வலைத்தளங்களில் குழுவாகத் திரண்டுள்ள பலர், 'நடந்தது நடந்துவிட்டது. அடுத்த தேர்தலில் ட்ரம்ப்பைத் தடுத்து நிறுத்த என்ன செய்யவேண்டும் என்று இப்போதே யோசிப்போம்' என செயலில் இறங்கிவிட்டார்கள்.

### எப்படிச் சாத்தியமானது இந்த வெற்றி?

தொடக்கத்தில் இருந்தே அதிகம் பரிகசிக்கப்பட்ட, அதிகம் புறக்கணிக்கப்பட்ட, அதிகம் பேரால் வெறுக்கப்பட்ட ஒருவரால் எப்படி வெற்றி பெற முடிந்தது? எல்லாப் பத்திரிகைகளும், எல்லா டி.வி.சனல்களும், கிட்டத்தட்ட எல்லா கட்டுரையாசிரியர்களும், பத்தி எழுத்தாளர்களும் “ஹிலாரி கிளின்டன்தான் வெற்றி பெறுவார்” எனத் தீர்ப்பு எழுதி விட்ட நிலையில், “எப்படி இந்தத்திடீர் மாற்றம் ஏற்பட்டது?” என்பதற்கு இப்போதுதான் விடைகள் கிடைக்க ஆரம்பித்திருக்கின்றன.

### ட்ரம்ப்பின் பிரசாரத்துக்குக் கிடைத்த வெற்றி இது

அமெரிக்காவில்பெருகிக் கொண்டிருக்கும் ஏற்றத்தாழ்வை, அவர் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டார். செல்வந்தர்களுக்கும் நடுத்தர வர்க்கத்தினருக்குமான இடைவெளி முன்பைவிட பெருகியிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார். அதற்குக் காரணம், ஒபாமாவின் பலவனமான பொருளாதாரப் பார்வை என்று அவர் குற்றம்சாட்டியபோது, அமெரிக்கர்கள் அதை ஏற்றுக் கொண்டனர். ஒபாமாவை சற்றே இடது சாய்வுகொண்ட ஜனாதிபதியாகச் சித்தரிக்கும் முயற்சியிலும் ட்ரம்ப்புக்கு வெற்றியே கிடைத்தது. ஒபாமாவால் பலமான, அழுத்தமான முடிவுகளை எடுக்க முடியாமல் போய்விட்டது. “அகதிகள் தொடங்கி சிறுபான்மையினர் வரை அனைவரையும் அரவணைத்துச் செல்லும் அவர் முயற்சியால் பாதிக்கப்பட்டவர்கள், அமெரிக்க வெள்ளைத் தொழிலாளர்களும் நடுத்தர வர்க்கத்தினரும்தான்” என ட்ரம்ப் திரும்பத் திரும்ப வாதிட்ட போது கணிசமானவர்கள் ட்ரம்ப்பை முழுமையாக நம்பினர்.

ஹிலாரியின் தோல்விக்குக் காரணம், அவருடைய நம்பகத்தனமை மீது ஏற்பட்ட சந்தேகம். தேர்தல் தொடங்குவதற்கு 48 மணி நேரம் முன்னர்கூட இமெயில் கசிவு விவகாரத்துக்காக எஃப்.பி.ஐ., ஹிலாரியைத் துரத்திக்கொண்டுதான் இருந்தது. “இமெயிலைப் பத்திரப்படுத்த முடியாத ஹிலாரியின் கையிலா உங்கள் நாட்டைக் கொடுக்கப்போகிறீர்கள்?” எனத் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டே இருந்தார் ட்ரம்ப். மக்களையும் மீடியாவையும் சந்திக்கும் ஒவ்வொரு முறையும் ஹிலாரி இமெயில் குறித்து பேசவேண்டியிருந்தது. கிட்டத்தட்ட ஒவ்வொரு முறையும் அவர் தன்அசிரத்தையையும் தவறையும் ஒப்புக் கொள்ளவேண்டியிருந்தது. அதற்காக மன்னிப்புக் கேட்கவும் வேண்டியிருந்தது.

ட்ரம்ப்பின் அதிரடி அடாவடிப் பேச்சுக்கள், ஹிலாரியின் மிதவாதத்தைப் பரிதாபமூட்டும் வகையில் மூழ்கடித்தன. “ஹிலாரி ஓர் அமைதிப் புறாதான். ஆனால், அமெரிக்காவுக்குத் தேவை என்னைப் போன்ற ஒரு கழுகுதான்” என்று மக்களை நம்பவைத்தார் ட்ரம்ப். “ஒபாமாவைப் போல் உலக அமைதி குறித்து எல்லாம் இனியும் பேசிக் கொண்டிருக்க முடியாது. அடித்து ஆடவேண்டிய நேரம் வந்து விட்டது” என்று ட்ரம்ப் முழங்கிய ஒவ்வொரு முறையும் ஆரவாரமான கைதட்டல்கள் எழுந்தன.

இந்தக் கைதட்டல்களே வாக்குகளாக மாறி யிருப்பதைப் பார்க்க முடிகிறது. ட்ரம்ப்புக்கும் ஒருமுறை வாய்ப்பு கொடுத்தால் என்ன தவறு? நீண்டகாலமாக இயங்கிவரும் ஹிலாரியோடு ஒப்பிடும்போது அரசியல், இராணுவம், இராஜதந்திரம், பொருளாதாரம் எதிலும் அவருக்குப் பரீட்சயம் இல்லை என்னும் உண்மையை சிலர் சுட்டிக் காட்டிய போது, அது அவருக்கு எதிராக அல்லாமல் சாதகமாகத் திரும்பி விட்டது.

70 வயதான டொனால்ட் ட்ரம்ப் வகிக்க இருக்கும் முதல் அரசுப் பதவி, ஜனாதிபதி. “ஆறு நபர்களையும் டுவிட்டரையும் நம்பி அரசியல் களத்தில் குதித்தவர்” என ட்ரம்ப்பை சிலர் வர்ணிக்கிறார்கள். இது உண்மை அல்ல. பெரும் மில்லியனரும் ரியல்எஸ்டேட் சக்கரவர்த்தியாகவும் திகழும் ட்ரம்ப்பிடம் எல்லாவற்றையும்விட அதிகமாகப் பணம் குவிந்துகிடக்கிறது.

பொருளாதாரம் பயின்ற பிறகு 1968ஆம ஆண்டு தன் தந்தையின பிசினஸில் இணைந்துகொண்டார் ட்ரம்ப் மூன்று ஆண்டுகளில் அதைத் தனதாக்கிக் கொண்டதோடு “ட்ரம்ப் ஆர்கனை சேஷன்” என்று பெயரையும் மாற்றி அமைத்தார். முதலாளித்துவத்தை ஆதரித்த ரொனால்ட் ரீகனை, தொடக்கத்தில் ஆதரித்தார். 1999ஆம் ஆண்டு ரீபார்ம் கட்சியில் சேர்ந்தார். 2001ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரை டெமாக்ரடிக் கட்சியில் இருந்துவிட்டு, பிறகு ரிபப்ளிகனாக மாறினார். 2011ஆம் ஆண்டு அதில் இருந்தும் வெளியே வந்தார். அடுத்த ஆண்டே மீண்டும் ரிபப்ளிகன் கட்சியில் சேர்ந்துகொண்டார்.

அவர் எழுதிய “ட்ரம்ப் தி ஆர்ட் ஒப் தி டீல்” என்னும் சுயமுன்னேறறப் புத்தகம் நியூயோர்க்டைமஸ பெஸ்ட் செல்லராக 13 வாரங்கள் இருந்திருக்கிறது. தன்னுடைய பிம்பத்தைத் திட்டமிட்டு வளர்த்துக்கொண்டார் ட்ரம்ப்.

தன் பலவீனங்கள் அனைத்தையும் பலமாக மாற்றிக் காட்டினார். அவர் ஓர் அறிவுஜீவி கிடையாது. ஒபாமா அல்லது ஹிலாரி போல் சமத்துவம், உலக நலன், அமைதி என உயர்ந்த இலட்சியங்களை அவர் இதுவரை முன்வைத்தது இல்லை. “மனிதர்களின் நிறம் முக்கியம் அல்ல; குணம்தான் முக்கியம்” என்று எல்லாம் மேடையில் முழங்கியதும் இல்லை. தன்னுடைய பொருளாதாரக் குற்றங்கள் முதல் பாலியல் குற்றங்கள் வரை அனைத்தும் வீதிக்கு வந்தபோதும் அவர் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. முக்கியமாக, எதற்கும் அவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதும இல்லை. ட்ரம்ப்பின் வெற்றியை, சர்வதேச அளவில் பலம் பெற்று வரும் வலதுசாரிச் சித்தாந்தத்தின் வெற்றியாகவும் பார்க்க முடியும்.




ட்ரம்ப் எதிர்ப்பாளர்கள்

உலகமயமாக்கலின் தோல்வியாகவும் பார்க்க முடியும். ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிட்டன் வெளியேறிய நிகழ்வோடு ட்ரம்ப்பின் வெற்றியையும் ஒப்பிடலாம். நீண்டகாலமாக ஐரோப்பிய யூனியனில் இருந்ததன் மூலம் நாம் சாதித்ததைவிட இழந்ததே மேல் என்று பிரெக்ஸிட் ஆதரவாளர்கள் கருதினார்கள். அதேபோல் நீண்டகால ஒபாமா ஆட்சி நமக்கு எதையும் தரவில்லை என்று அதிருப்தி கொண்டவர்களே ட்ரம்ப் பக்கம் திரும்பியுள்ளனர்.

மற்றவர்களுக்காக வாழ்ந்ததும் இழந்ததும் போதும், நாம் நமக்காக வாழ்ந்து கொள்வோம் என்னும் ஒருவகை சுயநலனின் வெற்றியும் தான் இது. இதை ட்ரம்ப் “தேசியவாதம்” என அழைத்தார். பிரெக்ஸிட் ஆதரவாளர்களும் அதே பெயரைத் தான் பயன்படுத்தினார்கள்.

### அடுத்து என்ன?

கையில் துளி அதிகாரமும் இல்லாதபோதே ட்ரம்ப் பாய்ந்து பாய்ந்து தன் எதிரிகளைத் தாக்கிக் கொண்டிருந்தார். அதிகபட்ச அதிகாரம் கையில் குவிந்துவிட்ட நிலையில் இனி அவர் என்னென்ன செய்வார் என்பதே பலருடைய கேள்வியாகவும் கவலையாகவும் இருக்கின்ற ன. கீழ் அவையும் மேல் அவையில் பெரும் அளவும் இப்போது ட்ரம்ப்பின் கரங்களில்.

இந்த அளவு பலம் ஒபாமாவுக்குக்கூட இதுவரை கிடைத்ததில்லை. இதன் பொருள் ட்ரம்ப்பால் எந்த உயரத்துக்கும் பர்ய முடியும், தான் அடித்துவிட்ட எல்லா சவடால்க்ளையும் நிஜமாக்க முடியும் என்பதுதான்.

இனி அவர் எடுக்கும் எந்த முடிவையும் அமெரிக்கச் சட்டமன்றத்தால் தடுக்க முடியாது. நிஜமாகவே மெக்ஸிகோ எல்லையில் இப்போது அவரால் சுவர் எழுப்ப முடியும். இஸ்லாமியர்களை தன் நாட்டுக்குள் வரவிடாமல் தடுக்க முடியும் அல்லது தீவிரமான கண்காணிப்புக்குள் அவர்களை வைத்திருக்க முடியும். இந்திய, இலங்கையர்களும் இன்னபிற ஆசியர்களும் வந்து பணிபுரிவதற்கு ஏற்ற விசாவை அளிக்க வேண்டுமா... வேண்டாமா என்பது இனி அவர் முடிவு. தகுந்த ஆவணங்கள் இன்றி அமெரிக்காவில் பணியாற்றும் 11 இலட்சம் பேரை ட்ரம்ப்பால் இப்போது திருப்பி அனுப்ப முடியும்.



ஹிலாரி

அகதிகளை “இனி வேண்டாம்“ எனத் தடுக்க முடியும். அமெரிக்கா மட்டும் அல்ல, உலகமும் அவரைக் கண்டு அஞ்சியாக வேண்டும். தன்னுடைய பேட்டிகளில் ட்ரம்ப் பல முறை வெளிப்படையாகவே கேட்டிருக்கிறார். 'அணு ஆயுதத்தை வெறுமனே வைத்திருப்பதில் என்ன பயன்? அதை உபயோகிக்க வேண்டாமா?'

அமெரிக்காவை, நேசித்திருக்கிறோம், பலமுறை வெறுத்திருக்கிறோம், கண்டு அஞ்சியிருக்கிறோம. அவரவர் அரசியல் நிலைப்பாட்டுக்கு ஏற்ப மிதமாகவோ, தீவிரமாகவோ அந்த நாட்டை எதிர்த்தும் வந்திருக்கிறோம். முதல் முறையாக அந்த நாட்டைக் கண்டு இப்போது பரிதாபப்படப் போகிறோம்!

ஜூனியர் விகடன்



# ‘கவுண்டவு

உண்மையின் வலிமை பல பேருக்குத் தெரிவதில்லை. அதனால்தான் உண்மையை நம்புவதைவிட பல பேர் பொய்யை நம்புகின்றனர். ஒருவிடயம் பொய் என்று தெரிந்தாலும் அதனை உண்மைபோலப் பேசி, மற்றவர்களை ஏமாற்றி விடலாம் எனச் சிலர் நம்புகின்றனர். எவ்வளவுதான் கெட்டிக்காரனாக இருந்தாலும், அவனால் எவ்வளவுதான் கெட்டித்தனமாகச் சொல்லப்பட்டாலும், பொய் தனது சுயரூபத்தை விரைவில் வெளிப்படுத்திவிடும் அதனால்தான், ‘கெட்டிக்காரனின் பொய்யும் புரட்டும் எட்டு நாளைக்கு’ எனும் அனுபவப் பழமொழி பிறந்தது.

அரசியல் கட்டுரையில் எதற்காகப் பொய் பற்றி இவ்வளவு நீண்ட விளக்கம்? என யோசிப்பீரகள.

வேறொன்றும் இல்லை, நம் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனாரின், ‘இந்த ஆண்டு இறுதிக்குள் தீர்வு கிட்டிவிடும்.’ என்ற, தொடர்ச்சியான பொய் பற்றிய யதார்த்த நிலையை உணர்த்தவே இம்முயற்சி.

புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணம் வந்தபிறகு சில தலைவர்களுக்கு ஏற்பட்ட கதியை நினைந்து, உயிர் பிழைத்தாலே பெரியவிடயம்எனக்கருதி வேற்று நாடுகளிலும், கொழும்பிலுமாக, பாதுகாப்போடு பதுங்கியிருந்தனர் இன்றைய நம் தமிழ்த் தலைவர்கள். சிலகாலத்தின் பின்னர் உலகுக்குக் காட்ட ஒரு ஜனநாயக முகமும் தேவை என்று உணர்ந்த புலிகள், முன்னர் தாம் எதிரிகளாய்க் கருதிய முன்னால் போராளிக்குழுக்கள் சிலவற்றையும், அதுவரை தமிழர்களின் ஜனநாயகப் பிரதிநிதிகளாகக் கருதப்பட்ட, முன்னாள் கூட்டணி உறுப்பினர்கள் சிலரையும் ஒன்றிணைத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனும் புதிய அமைப்பினை உருவாக்கி, அவ் அமைப்பைச் சார்ந்தோரைத் தேர்தலில் குதிக்க வைத்தனர். தமிழரசுக் கட்சியின் தொன்மையையும், சம்பந்தனாரின் மூப்பையும் மனங்கொண்ட புலிகள், அவரை இவ் அமைப்புக்குத் தலைவராய் அமர வைத்னர்.

புலிகளின் அங்கீகாரம், பாராளுமன்றப் பதவி என இரண்டும் ஒருமித்துச் சேர்ந்து வந்ததில், அதுவரை புலிகளுக்குப் பயந்து ஒளிந்து திரிந்தோர்க்கு எல்லையற்ற மகிழ்ச்சி.

புலிகளின் மக்கள் ஆதரவைத் தமக்காக்கி பாராளுமன்றத் தேர்தலில் பெரு வெற்றி கொண்டு புலகளின் கைப்பொம்மைகளாய பாராளுமன்றத்துள் சென்று அமர்ந்து, அவர்கள் பதவிச் சுகம் அனுபவிக்கத் தொடங்கினர்.

அந்நிலையைத் திடீரெனக் காலம் புரட்டிப் போட்டது. யாரும் எதிர்பாராத வண்ணம் உலக நாடுகள் ஒன்றிணைந்து புலிகள் அமைப்பை அழித்தன. புலிகளின் அழிவுக்குப் பின் தமிழர்தம் தலைமை ஆசனம் வெறுமையாய்ப்போய்விட, தாமேதமிழர்களின ஏகத்தலைமைஎனஉரைத்து, ஆடிக் கொண்டிருந்த தமது தலைமை ஆசனத்தை, காலம் அறிந்து உறுதி செய்து கொண்டனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். சம்பந்தனாரும் தான் !

கூட்டணிக்காலத்தில் அதன் ஆளுமைத் தலைவர்களாய் இருந்த, அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்றோரின் முன்னிலையில், சம்பந்தன் என்றும் தனித்துப் பிரகாசித்ததில்லை. தமிழரசுக் கட்சி என்று பார்த்தால்கூட, கிழ






க்கு மாகாணத்தில் இராஜதுரை போன்ற ஆளுமையாளர்களுக்கு அடுத்த நிலையிலேயே, சம்பந்தன் முன்பு கணிக்கப்பட்டிருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவான பின்பும், புலிகளின் கண்ணசைப்புக்கேற்ப இயங்க வேண்டிய நிலையிலேயே அவர் இருந்தார். அதனால் பத்தோடு பதினொன்றாக இருக்கும் தலைவராகவே அவர் நிலைமை என்றும் இருந்தது. அதனால் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து, கட்சிக்கோ இனத்திற்கோ தனித்துத் தலைமை தாங்க வேண்டிய, ஆற்றலோ அனுபவமோ சம்பந்தனாருக்கு வர வாய்ப்பில்லாமல் போயிற்று.

திடீரென பொம்மைத் தலைவராய் அன்றி, நிஜத் தலைவராய்த் தமிழினத்திற்குத் தலைமை தாங்கவேண்டிய பொறுப்பை, அவர் வேண்டாமலே காலம் அவர் மடியில் போட்டது. ஆனால் அப்போதும் சம்பந்தனுக்கு அதிர்ஷ்டம் வேலை செய்தது. இறுதிப் போரில் நிகழ்ந்த பேரழிவால் தமிழர்கள் மீது ஏற்பட்டிருந்த உலகநாடுகளின் அனுதாபம், முன்னாள் ஜனாதிபதி ஏற்படுத்தியிருந்த சில வல்லரசுகளுடனான பகை என்பவை, ஈழத்தமிழர்க்குச் சார்பாக, ஆற்றல் தேவைப்படாமலேயே வல்லரசுகளின் வழிகாட்டுதலில் இயங்கக்கூடிய சூழ் நிலை, அப்போதும் அவருக்கு வாய்த்தது. கேட்பாரில்லாத பலமான ஓர் சூழ்நிலையில், தமிழ்மக்களின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார் அவர்.

புலிகளின் அழிவுக்குப் பின்னான ஜனாதிபதித் தேர்தலில், மகிந்தவை எதிர்த்த இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை, தமிழ்மக்கள் சார்பாக ஆதரித்த அப்போதைய அவரது முடிவு பலராலும் விமர்சிக்கப்பட்டது. அடிப்பித்தவனை எதிர்ப்பதற்காக அடித்தவனோடு கைகோர்ப்பது சரியாகுமா? என, பலர் கேள்வி எழுப்பினர். ஆனாலும் தனது ஏகத் தலைமை அதிகாரங்கொண்டு அவ் விமர்சனங்களைப் புறந்தள்ளி, அதன் பின் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் போதிய வெற்றி பெற்று, தன் நிலையைத் தக்க வைத்துக் கொண்டார் அவர்.

அத்தேர்தல் காலத்திலேயே கூட்டமைப்பில் இணைந்திருந்த, கட்சியினருக்கிடையில் சலசலப்பு ஆரம்பித்துவிட்டது. வேட்பாளர் நியமனத்தில் தமிழரசுக்கட்சி தம் இஷ்டப்படி பொருத்தமற்ற வேட்பாளர்களையும் நியமித்து, அணிக்குள் இருந்த மற்றையகட்சியினரின் மனக்கசப்பைச் சம்பாதித்தது. அதுமட்டுமன்றி கூட்டமைப்பை ஓர் கட்சியாய்ப் பதிவு செய்ய

## “சம்பந்தனார் தீர்வை கொண்டு வருவார் என ந
## நம்மை போன்ற முட்டாள்கள் வேறு யாரும் இரு

வேண்டுமென்ற, மற்றைய கட்சிகளின் கருத்தையும் அலட்சியம் செய்த அக்கட்சி, தாமே தமிழர்தம் ஏகோபித்த தலைமையாளர்கள் என உறுதி செய்ய முனைய, கூட்டமைப்புக்குள் பிளவுகள் மேலும் பெரிதாகத் தொடங்கின.

சம்பந்தருக்கு வெள்ளி திசை நடந்ததோ என்னவோ? தொடர்ந்து அவருக்கு ஏற்றத்தின் மேல் ஏற்றம். 2015 இல் யாரும் எதிர்பாராத வகையில், பேரினத்தாரின் தலைமைக்கட்சிகள் இரண்டும் ஒன்றிணைந்து, மகிந்தவுக்கு எதிராக நடத்திய அரசியல் புரட்சியில் எதிரணிகளின் கூட்டு வெற்றி பெற்றுவிட, அக்கூட்டணியை ஆதரித்து மத்திய அரசின் வலிமையில் தானும் பங்குதாரரானார் சம்பந்தன். பேரினக்கட்சிகள் ஒன்றானதால் மூன்றாம் அணித் தகுதி பெற்று, இலங்கை அரசின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் அவர் தமதாக்கிக் கொண்டார்.

எதிர்க்கட்சித்தலைவர் பதவியை ஏற்பதா? வேண்டாமா? என்று குழம்பி, வலிய நாடுகளின் வழிமொழிவால் அதனை ஏற்கும் நிர்ப்பந்தம் ஏற்பட, இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண அப்பதவி அவசியம் எனக்கூறி, அப்பதவியையும் மகிழ்வோடு அவர் ஏற்றுக் கொண்டார்.

அடுத்தடுத்து வந்த தலைமைப் பொறுப்புக்களால், சம்பந்தன் ஐயா சற்றுத் தடுமாறிப்போனது உண்மையிலும் உண்மை. யாழ்ப்பாணத்தில் ரணிலுடன் சேர்ந்து மேடையில் சிங்கக்கொடியை ஆட்டிவிட்டு, பின் அதனைக் காளியின் கொடி என்றதும், கூட்டமைப்பு புலிகளால் நியமிக்கப்படவில்லை என்று, முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைத்துப் பேட்டி கொடுத்ததும், அவர் தடுமாற்றத்தின் சாட்சிகள்.

பதவிகள் அடுத்தடுத்து வந்து சேர, ஒன்றுபட்டதாய்க் காட்டி நின்ற கூட்டமைப்புக்குள், மேலும் குழப்பங்கள் உருவாகத் தொடங்கின. கட்சிக்குள் ஆற்றலாளராய்க் கணிக்கப்பட்ட சுமந்திரனை மட்டும், தம் கையாளாய் வைத்துக் கொண்டு கட்சியை இயக்க முனைந்தார் சம்பந்தர்.

இவ்விருவர் தம் கூட்டுத் தலைமை, தம்மோடு இணைந்த மற்றைய அணியினரை என்று மட்டுமல்லாமல் தம்கட்சியின்மற்றைய உறுப்பினரைக் கூட அலட்சியம் செய்து ஆளத்தொடங்கியது. ஈழத் தமிழர்தம் பிரச்சினைகள் சம்பந்தமாக உலகநாடுகளுடனும், புலம்பெயர் தமிழர்களுடனும், தனியராய்ச் சென்று பேசித் திரும்பிய சுமந்திரனார், அப் பேச்சுக்கள் பற்றிய விபரங்களை, மாற்றணித் தலைவர்களுக்கோ, தன் அணி உறுப்பினர்களுக்கோ, ஏன்? தமிழ் மக்களுக்கோ கூடச் சொல்ல மறுத்து அதிகாரம் செய்தார். இதனால் பலரது வெறுப்பிற்கும் அவர் ஆளானார்.

இதற்கிடையில் வடமாகாண சபைத் தேர்தல் வர, யாரை முதலமைச்சராய் நியமிப்பது? என்ற கேள்வி பிறந்தது. கூட்டமைப்பில் இணைந்திருந்த கட்சித் தலைவர்கள் பலரும், தமிழரசுக்கட்சி உறுப்பினர் சிலரும், இப்பதவிக்காய்ச் ‘சப்புக் கொட்டத்’ தொடங்கினர். மேடைகளில் தமிழினத்திற்காய் தாம் தாம் செய்த தியாகங்களை, (?) தாமே பறைசாற்றித் தற்புகழ்ந்து இப்பதவிக்காய் வலை விரிக்க ஆரம்பித்தனர். இந்நிலையில் மாற்றுக் கட்சிகளுடனும் தன் கட்சி உறுப்பினர்களுடனும் கலக்காமல், முதலமைச்சரை நியமிக்கும் அதிகாரத்தை, தன் கையில் எதேச்சதிகாரமாய் எடுத்துக் கொண்டார் சம்பந்தனார்.

தமது கட்சிக்குள் முதலமைச்சர் பதவிக்கு, தகுதி வாய்ந்த உறுப்பினர்கள் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டு, சமுதாய உறுப்பினர்கள் சிலர் தூண்ட, கூட்டமைப்புக்குள்ளும், தமது கட்சிக்குள்ளும் எழுந்த சில முரண்பாடுகளை அலட்சியம் செய்து, முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி விக்னேஸ்வரன் அவர்களை, அப்பதவியை ஏற்க வரும்படி வீடுதேடிச் சென்று அழைத்தார் சம்பந்தர். முதலில் பெரிய அளவில் ‘பிகு’ பண்ணிய விக்னேஸ்வரன், பின்னர் “அனைவரும் சேர்ந்து அழைத்தால் வருவேன்” என்று கூறி அதன்படியே வந்து, அனைவரது ஆதரவுடன் தேர்தலில் பெரு வெற்றி பெற்றார்.

என்ன நடந்ததோ தெரியவில்லை. திடீரென சம்பந்தன், சுமந்திரன் கூட்டிற்கும், முதலமைச்சருக்கும் இடையிலான தேனிலவு முறிந்து போயிற்று. அப்போது வந்த பாராளுமன்றத் தேர்தலில், தான் ஓர் கட்சியால் பதவிக்குக் கொண்டு வரப்பட்டவர் என்பதை மறந்து, ‘தனிப்பட யாரையும் தான் ஆதரிக்கப் போவதிலலை’

# ண்’ ஆரம்பம்



என்று முதலமைச்சர் அறிக்கை விட்டார். தேர்தல் நேரத்தில் ‘வீட்டை விட்டு வெளியே வந்து வாக்களியுங்கள்’ என, கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்தை மறைமுகமாய்க் குறித்து இரட்டுற மொழிந்து அவர் பேச, அவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணியை மறைமுகமாய் ஆதரிக்கிறார் என்பது, பகிரங்க இரகசியமாய்ப் பலருக்கும் அப்போது தெரிய வந்தது. மாற்றணியினருடன் பகைத்து விக்னேஸ்வரனைக் கொணர்ந்த, சம்பந்தனதும், சுமந்திரனதும் நிலை திருடனுக்குத் தேள் கொட்டிய நிலையாயிற்று.

ஆனாலும் அத்தேர்தலில் கஜேந்திரகுமார் அணி, ஒரு ஆசனத்தைக் கூடப் பெறாமல் பரிதாபமாய்த் தோற்றுப்போக, முதலமைச்சரின் முனைப்பு சற்று மழுங்கிப்போயிற்று. ஆனாலும் எப்போதும் தன்முனைப்பு உள்ளவராகிய அவர், கூட்டமைப்பினரை மடக்கப் புதிய வழிகளைத் தேடினார். ‘தமிழ்மக்கள் பேரவை’, ‘எழுகதமிழ்’ என அடுத்தடுத்து அவர் நடத்திய தாக்குதலால், கூட்டமைப்பின் அத்திபாரம் சிறிது ஆடத் தொடங்கியது உண்மை. சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரின் செயல்களால் எரிச்சலுற்றிருந்த கூட்டமைப்பின் உறுப்பினர் சிலர், முதலமைச்சரின் எதிர்ச் செயற்பாட்டு அரங்குகளில் தோன்றத் தொடங்கியது இதற்காம் சான்று. சம்பந்தன், சுமந்திரன் குழுவினர் அரசோடு ஒத்துப்போக நினைந்திருந்த வேளையில், அனைத்து விடயங்களிலும் அரசை எதிர்த்து போர்க்கொடி தூக்கி, தமிழ் மக்களின் உரிமை இழப்புக்களையும், போர் இழப்புக்களையும் திரும்பத் திரும்பக் கூறி, பின் விளைவுகள் பற்றி சிறிதும் சிந்திக்காமல் மக்களை உணர்ச்சி வயப்பட வைத்து முதலமைச்சர் மக்கள் ஆதரவை இலகுவாய்ப் பெற்றுக் கொண்டார்.

இன்றைய நிலையில் உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் தமிழ் மக்களிடையே, முதலமைச்சர் மீதான ஆதரவு பெருகி இருப் பது மறுக்கமுடியாத உண்மையாம். பயனிருக்கிறதோ இல்லையோ எல்லா விடயங்களிலும் அரசோடு மோதி நிற்கும் முதலமைச்சரை, பல தசாப்தங்களாக போர்ப்பார்வையாளர்களாக இருந்த

**ன நம்பியிருந்தால்**
**ம் இருக்க முடியாது”**

தமிழ்மக்களுக்கு நிரம்பப் பிடித்துப் போயிற்று. அதைப் பயன்படுத்தி அவர் தன்னை தமிழினத்தின் ஓர் தனித்தலைவராய் வளர்த்துக் கொள்ள ஆரம்பித்தார்.

வரப்போகும் ஏதேனும் ஒரு தேர்தல் தான், தமிழ்மக்கள், முதலமைச்சரின் பின் நிற்கிறார்களா? அல்லது கூட்டமைப்பின் பின் நிற்கிறார்களா? என்பதை அறியத்தரப்போகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணி, அதன் பின்னர் விடுதலைப்புலிகள், அதன் பின்னர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என, வழி வழி சிந்தித்துப் பழகிய தமிழ்மக்கள், கடந்த தேர்தலில் கஜேந்திரகுமாரை ஏமாற்றியது போல, முதலமைச்சரை ஏமாற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

கட்டுரையின் ஆரம்பத்தில் உண்மையின் ஆற்றல் பற்றி உரைத்து விட்டு, வேறு ஏதேதோ அரசியல் விடயங்களைப் பேசுவதாக நினைப்பீர்கள். மேற்சொனன அரசியல் விடயங்களை மீட்டிக் கொண்டால்தான், உண்மை பற்றி நான் சொல்ல வருகிற விடயம் உங்களுக்குத் தெளிவாகப் புரியும். அதற்காகத்தான் அம் முன்னுரையைச் சொன்னேன்.

இனி விடயத்திற்கு வருகிறேன்.

கூட்டமைப்பு இனி எங்கள் சொத்துஎன்றும்தன்னோடு இணைந்திருந்த மாற்றணியினரை மதிக்கவேண்டிய அவசியமில்லை என்றும், ஆரம்பத்தில் மகிழ்ந்திருந்தார் சம்பந்தன் ஐயா. பட்டி, விக்கிரமாதித்தன் போல் இயங்கிய சுமந்திரனும் தானும் நினைபபது தான், இனி கூட்டமைப்பின் தீர்மானம் என முடிவாக்கியிருந்தார் அவர். விதி வேறுவிதமாய் விளையாடிற்று. அவர்கள் கையை எடுத்து அவர்கள் கண்ணிலேயே அது குத்திவிட்டது.

கேட்பார் எவரும் இல்லை எனும் துணிவில், எந்தப் பொய்யையும் மக்களிடம் சொல்லி விட்டு, அழிவையும், தமிழர்தம் உரிமையையும் பற்றிப் பேசி, அப்பொய்களை தேவைக்கேற்ப மூடிக்கொள்ளலாம் என நினைத்த காரணத்தால், எந்தவித நடைமுறைச்சாத்தியமும் இல்லை என்பது தெரிந்தும், நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலின் போது, 2016 இற்குள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு என அறிக்கை விட்டார் அவர். அவரது ‘சத்தியவாக்கை’ நம்பி தமிழ் மக்களும், தமது முழுமையான ஆதரவைக் கூட்டமைப்புக்கு வழங்கினர். இன்று அவர் வழங்கிய காலக்கெடு, முடியும் நிலையை எய்திக்கொண்டிருக்கிறது. காலக்கெடு கிட்டக்கிட்ட அளித்த வாக்குறுதிக்கான புதிய புதிய வியாக்கியானங்கள், அவரிடமிருந்து வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

எங்கள் தலைவர்களுக்கு இறுதிக்கட்டத்தில்தான் ஞானம் வருகிறது. மாகாணசபைக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில், அறுபது வீதத்தைச் செலவழிக்காமல் இருந்து விட்டு, பதினொரு மாதத்தில் செலவழிக்காத தொகையை, ஒரே மாதத்தில் செலவழித்து விட்டதாய் முன்பு அறிக்கை விட்டார் முதலமைச்சர். அதே போல காலக்கெடு முடியும் வரை ‘ஹாயாய்’ இருந்து விட்டு, இன்று அது முடியப் போகும் நிலையில்தான், சம்பந்தனார்க்கும் ஞானம் உதிக்கத் தொடங்கியிருக்கிறது. எந்தக் காரியமும் இதுவரை நடக்கவில்லை என்றும், தந்த வாக்கை செயற்படுத்தத் தவறின் அரசோடு மோதுவோம் என்றும், அண்மைக்காலமாய் அடுத்தடுத்து அவர் விடும் அறிக்கைகளைக் காண, நகைப்புத்தான் வருகிறது. சம்பந்தர் சொன்ன காலக்கெடு முடிய இருக்கும் நாட்களை எண்ணி, இளைஞர்படை ஒன்று முக நூலில் ‘கவுண்ட்டவுண்’ செய்ய ஆரம்பித்திருக்கிறது. பூனை மெலிந்தால் எலிகள் சுகம் கேட்கத்தான் செய்யும்.

பாராளுமன்றத்தை அரசியல் அமைப்புச் சபையாய் மாற்றி, அச்சபையின் கீழ் ஆறு குழுக்கள் அமைக்கப்பட்டு, அக்குழுக்களின் சிபாரிசுகள் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட்ட அளவில் மட்டுமே, முன்னேற்றம் நிகழ்ந்திருக்கிறது. 19 ஆம் திகதி (நேற்று) அரசியலமைப்புச் சபையாய்க் கூடவுள்ள பாராளுமன்றத்தில், மேற்படி குழுக்களின் சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டு திருத்தங்கள் செய்யப்பட்டபின், வரும் ஜனவரி 10 இல் புதிய அரசியல் அமைப்பை அறிமுகம் செய்யப் போவதாய், பிரதமர் அறிவித்திருக்கிறார். சட்டமாய் வர இன்னும் பல ‘கண்டங்களை’ தீர்வுத்திட்டம் தாண்டவேண்டியிருக்கும் என்பது நிச்சயம். இனப்பிரச்சினைத் தீர்வில் காலத்தை இழுத்தடிக்கும், இத்தகு முயற்சிகள் பலவற்றைத் தமிழினம் ஏற்கனவே கண்டு விட்டது. கோழி கொக்கரிப்பதோடு விடயம் முடிந்து போகுமா? அல்லது முட்டை கைக்கு வருமா? என்பதற்கான பதிலை காலம்தான் சொல்லவேண்டும்.

பெரும்பாலும் சம்பந்தர் சொன்ன காலக்கெடுப் பொய் உடையப் போகிறது. முன்பாயிருந்தால் வேறொரு பொய்யைச் சொல்லி, அவரும் அவரைச் சார்ந்தோரும் கொஞ்சம்கூட நாணம் இல்லாமல், இன்னொரு காலக்கெடுவை உறுதிபட உரைத்து, மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றத் துணிந்திருப்பார்கள். இனி அதற்கும் வாய்ப்பில்லை. ஏகத்தலைமை என்ற நிலை மாறி மாற்றணி ஒன்று வளரத் தொடங்கியிருக்கும் நிலையில், தொடர்ந்து அவர்கள் உரைக்கப்போகும் பொய்கள் அவர்களைப் பலவீனப்படுத்தப் போவதோடு, மாற்றணியினரைப் பலப்படுத்தப் போவதும் நிச்சயம்.

இவ்விடத்தில் ஒன்றை அழுத்திச் சொல்ல விரும்புகிறேன். கூட்டமைப்பினராயினும் மாற்றணியினராயினும், ஓர் உண்மையை அவர்கள் மறக்காதிருப்பது அவசியம். முறைப்படியான அரசியலுக்குள் நுழைந்து விட்டாலும், தம்மை இந்நாட்டிலுள்ள மற்றைய அரசியல்வாதிகளைப் போல, இவர்கள் நினைத்துக் கொண்டால் அது மாபெரும் தவறாகும். முப்பதாண்டுகளுக்கு மேலாக நடந்து முடிந்த உரிமைப்போரில் நிகழ்ந்த, உயிரிழப்பு, உறவிழப்பு, உடைமையிழப்பு, உறுப்பிழப்பு என, கணக்கிடமுடியாத இழப்புக்களின் எண்ணிக்கை ஒருபுறம். இப்போரால் சிதைந்துபோன கலை, கலாசார பண்பாட்டுச் சமூகச் சிதைவுகள் ஒருபுறம். இறுதிப்போரில் நிகழ்ந்த எண்ணற்ற ஏக்கம் தரும் கொடுமைகள் ஒருபுறம் என, இவை அனைத்தாலும் இடப்பட்ட அத்திபாரத்திலேயே, இன்றைய தமிழர்தம் அரசியற் கட்டடம் எழுப்பப்படுகிறது என்பதே அவ் உண்மையாம்.

வெறும் வார்த்தைகளில் மட்டும் கண்ணீர் வடித்துக் கொண்டு, வஞ்சனையாய் பதவிச் சுகம் தேட முனையும் நம் தலைவர்கள் யாராயிருந்தாலும், நிச்சயம் அவர்கள் இனத் துரோகிகளாகவே மக்களால் கருதப்படுவார்கள். பொய் உரைப்பதற்கு அரசியலில் அங்கீகாரம் உண்டு என இவர்கள் நினைத்தால், நிச்சயம் தவறிழைத்தவர்கள் ஆவார்கள். இன்றைய நிலையில் உறுதி இல்லாத வாக்குறுதிகளை அள்ளித் தெளித்து, அரசியற் செல்வாக்குப் பெற நினைப்பதை விட மூடத்தனம் வேறெதுவும் இருக்க முடியாது.

வருத்தத்திற்குரிய விடயம் என்ன வென்றால், கூட்டமைப்பும் மக்களை ஏமாற்றி பொய் வளர்க்கவே முயன்று நிற்கிறது. புதிதாய்க் கிளம்பியிருக்கும் மாற்றணியும் இப்பொய்மையை நம்பியே இருப்பதாய்ப்படுகிறது.

அரசோடு மோதுவதாய்க் காட்டி தம்மை வளர்த்து வரும், முதலமைச்சர் தலைமையிலான மாற்றணியினர் கையில் நாளை அதிகாரம் வந்தால், அவர்களால் மட்டும் கூட்டமைப்புச் செய்யாத எதைச் செய்துவிட முடியும்? எனும் கேள்விக்கு, அவர்களிடம் பதிலேதும் இருப்பதாய்த் தெரியவில்லை.

இது முடிவு! இது அம்முடிவை அடைவதற்கான வழி! இது அவ்வழியில் பயணிக்க நம்மிடம் இருக்கும் பலம்! என, நியாயபூர்வமாய்த் தமது வாதங்களை அவர்களால் முன் வைக்க முடியுமா? அவர்களும் பொய்மையைப் பொய்மையாலேயே வெல்லப் பார்த்து நிற்கின்றனர்.

இப் பொய்த் தலைவர்கள் தம்முடைய பொய் வழியை மாற்றத் தவறின், மக்களால் என்றோ ஒரு நாள் நிச்சயம் தூக்கி எறியப் படுவார்கள். அதற்குள் இன்னும் என்னென்ன பேரழிவுகள் நிகழப்போகின்றதோ?

ஓராண்டில் பிரச்சினைக்குத் தீர்வு வரும் என்று சம்பந்தனார் சொன்னபோது, அதன் சாத்தியப்பாட்டைப் பற்றி ஆராயாமல் அதனை நம்பியதும் ஆதரித்ததும் நம் குற்றம். ஏமாற்றுகிறவன் மட்டுமல்ல ஏமாறுகிறவனும் குற்றவாளிதான்.

பல தசாப்தங்களாய் புரையோடிப் போய்க்கிடக்கும் இனப்பிரச்சினைக்கு மந்திரத்தால் மாங்காய் விழுத்துவது போல, ஒரே ஆண்டில் சம்பந்தனார் தீர்வைக் கொண்டுவருவார் என நம்பியிருந்தால், நம்மைப் போன்ற முட்டாள்கள் வேறு யாரும் இருக்க முடியாது. உண்மை, பொய்களை ஆராயத் தெரியாமல், தலைவர்களின் வாக்கை வேத வாக்காய்க் கொண்டு அங்கீகரிக்கும் மூடத்தனத்தை, தமிழினம் என்று தொலைக்கிறதோ அன்று தான் நம் இனம் உருப்படும் என்பதில் ஐயமில்லை.

முடிவாக ஒன்றைச் சொல்ல வேண்டும். மக்கள் ஏமாளிகளாக இருக்கும் வரைக்கும் தலைவர்களின் நாடகம் தொடரப்போவது நிச்சயம். இன்று நேற்றல்ல கடந்த ஐம்பதாண்டுகளுக்கு மேலாக இந்த நாடகம்தான் நடந்து கொண்டிருக்கிறது.

அவ்வப்போது பாத்திரங்கள் மாறியிருக்கின்றன அவ்வளவும் தான். கதை, வசனம், இயக்கத்தில் எந்த மாற்றமும் இல்லை. மக்கள் இவ் உண்மையை உணராமல், புதிய பாத்திரம் வந்ததும் புதிய நாடகம் வந்து விட்டதாய் ஏமாந்து, முடிந்த நாடகத்தையும, பழைய நடிகரையும் தூற்றி, புதிய நாடகத்தையும், புதிய நடிகரையும் ஏற்றி மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந் நிலை மாறத்தவறின் ஈழத்தமிழர்களின் கதி அதோகதிதான்.



கம்பவாரிதி ஜெயராஜ்



# காதல் அடிமைகள்

நீங்கள் காதலித்திருக்கிறீர்களா? தோற்கத் தோற்கத் திகட்டாமல் மீண்டும் மீண்டும் லவ்விடம் லத்தியடி வாங்கியிருக்கிறீர்களா? 'கொஞ்சம் அவசரப்பட்டு விட்டோமோ' என வாக்குப்போட்ட மக்கள் மாதிரி வாக்குப் போட்ட இதயத்தோடு அலைகிறீர்களா? 'ஏய்...நீ தனியாளு இல்லை...' என 'தல' ஸ்டைலில் உங்களுக்குத் தன்னம்பிக்கை தருகிறார்கள் இவர்கள். இவர்கள் என்றால்...? அமெரிக்காவில் இயங்கும் 'லவ் அனானிமஸ்' எனும் அமைப்பைச் சேர்ந்தவர்கள்! குடி நோய்க்கான ஆல்கஹாலிக் அனானிமஸ் போல இது காதல் நோய்க்கான மறுவாழ்வு அமைப்பு. மனிதர்கள் குடிப்பது மது. மனிதர்களையே குடிப்பது காதல். ஸோ, இவர்களைப் பொறுத்தவரை காதலும் ஒருவகை போதைதான். இந்தக் காலத்திலும் 'இதயம் முரளி' மாதிரி பீலிங் விடுபவர்களை இவர்கள் 'காதல் அடிமைகள்' என்றே அழைக்கிறார்கள்.

"நான் சின்ன வயசுல ஆலன்னு ஒரு பையனை லவ் பண்ணினேன். ஆனா, அவன் என்னை மதிக்கவே இல்ல. காலேஜ் காலத்துல ஒருத்தன் காதலனா கிடைச்சான். அவனுக்காக நான் எல்லாத்தையும் கொடுத்தேன். அடிச்சு கொடுமைப்படுத்தினதை எல்லாம் தாங்கினான். அப்புறம் அவனே என்னை விட்டு விலகினான். அடுத்து ஒரு கல்யாணம், புது வாழ்க்கை. அதிலும் கஷ்டம்தான் பட்டேன். பணத்தை எல்லாம் இழந்தேன். அதுக்கப்புறம் தான் தப்பு என்கிட்டன்னு புரிஞ்சுது. நான் யாரையுமே ரொம்ப எமோஷனலா நேசிக்க ஆரம்பிச்சிடுவேன். சரியா, தப்பான்னு யோசிக்காம அவங்களுக்காக எதை யும் செய்வேன். இதைத் தான் காதல் அடிமைன்னு சொல்வாங்க!" இந்த அமைப்பைச் சேர்ந்த பெண்ணொருத்தியின் உண்மைக் கதை இது.

"என் பொண்டாட்டி என்னை பொரட்டி பொரட்டி எடுத்தா. கோர்ட் இருந்தும், வக்கீல் இருந்தும் வக்கீலுக்குக் கொடுக்க பணம் இருந்தும் அவ மேல வச்சிருந்த காதலால நான் விகாகரத்து வாங்காம விட்டுட்டேன். ஆனா அந்தப் தப்புக்கு அவ கடைசியா வச்சா பாருங்க ஆப்பு!" என்கிறார் கணவர் ஒருவர்.

இந்த அமைப்பின் இணையத்தளமெங்கும் இப்படிப்பட்ட கதைகள் குவிந்து கிடந்தாலும் ஊர் பேர் எதையும் வெளியிடாமல் சீக்ரெட் காக்கிறார்கள். அமெரிக்காவின் முக்கிய நகரங்களிலும் அவுஸ்திரேலியாவிலும் லவ் அனானிமஸ் மீட்டிங்குகள் மாதம் தோறும் நடைபெறும். முகம் மறைத்து இரகசியமாக அங்கே வரும் உறுப்பினர்கள், சக உறுப்பினர்களிடம் கலந்துரையாடலாம். கஷ்டத்தைச் சொல்லலாம், ஆறுதல் பெறலாம், மனதை காதல் கடவுள் கன்வர்ட் பண்ணுவதற்காக இந்த மீட்டிங் முடிவில் ஒரு கூட்டுப் பிரார்த்தனையும் உண்டு.

யாரெல்லாம் காதல் அடிமைகள்? அதற்கென இலக்கணங்கள் வகுத்திருக்கிறார்கள் பாருங்கள்... அதன்படி பார்த்தால் தம் ஊரில் எல்லோருமே இவர்களிடம் மாஸ் அட்மிஷன் வாங்க வேண்டும் போலிருக்கிறது.

**அன்பான காதல் அடிமை:** இவர்கள் கொஞ்சமும் சுயமரியாதையே இல்லாதவர்கள். தனது பார்ட்னர் சைக்கோ வில்லனாக இருந்தாலும் சைடுடிஷ் வறுத்துக் கொடுத்து சவுக்கடி வாங்கிக் கொள்ளும் அளவுக்கு 'பேரன்பு நோய்' பிடித்த பேஷன்ட்டுகள் இவர்கள்.

**சார்ந்திருக்கும் அடிமை:** படிப்பு, நல்ல வேலை, புத்திசாலித்தனம் இருந்தாலும் தன்னம்பிக்கை இல்லாதவர்கள் இவர்கள். துணையைப் பிரிந்து விட்டால் தான் ஜீரோவாகி விடுவோமோ என மெர்சலாகியே மெல்லச் சாவார்கள்.

**உறவு அடிமை:** இவர்கள் தங்கள் துணையைக் காதலிக்க மாட் டார்கள். ஆனால் பிரியவும் மாட்டார்கள். தன்னையும் துணையையும் பிணைத்து வைத்திருக்கும் அந்த உறவை மட்டும் விரும்புவார்கள். அதற்காக எந்த கஷ்டத்தையும் ஏற்பார்கள்.

**சுயநல அடிமை:** இவர்கள் தங்கள் நலனுக்காக பிறரைக் கவர்வார்கள். பின்னர் அவர்களே அந்த உறவில் இருந்து விடுபட முடியாமல் தவிப்பார்கள்.

**குழப்பமான அடிமை:** இவர்கள் தங்கள் காதலைப் பிரியும் போதே அடுத்த காதல் எப்படியிருக்குமோ என யோசித்து பயப்படுவார்கள். அதுவா, இதுவா எனக் குழம்பி முடிவெடுக்காமலேயே காலம் கடத்துவார்கள்.

**ரொமான்ஸ் அடிமை:** இவர்கள் காதல், காதல், காதலுக்குப் பின் காதல் எனப் போய்க்கொண்டே இருப்பார்கள். கல்யாண முடிவை எடுக்க மாட்டார்கள். என்றாலும் இந்த மல்டிபின் காதல்களால் வரும் மண்டைக் குடைச்சலே இவர்களைப் படுத்தி எடுக்கும்.

இப்படிப்பட்ட காதல் அடிமைகளைத் திருத்த 12 செயற்பாடுகளைக் கொண்ட ட்ரீட்மென்ட் இந்த அமைப்பிடம் உள்ளது. (போதை அடிமைகளுக்கான அனானிமிட்டி அமைப்புகளிலும் இதேபோன்ற 12 நிலை சிகிச்சைதான்!) அது தவிர இவர்கள் ஏற்கும் உறுதிமொழியும் 12 பாயின்ட்டுகள் கொண்டது. இந்த உறுதிமொழியை தினமும் சொல்லி வந்தால் உலகில் யாருக்கும் காதல் பிரச்சினைகளே வராதாம்...

♥ நான் எனது கடந்த காலத்திலிருந்து விடுபட்டு சுதந்திரமடைந்து விட்டேன்.

♥ எதிர்காலம் குறித்த நன்னம்பிக்கை எனக்கு உள்ளது.

♥ ஒருவரைக் கவர்வதற்காக அவரைக் கெஞ்சவோ அவர் மேல் காதலில் விழவோ அவசியமில்லை.

♥ காதல் என்னை ஆட் கொண்டாலும் நான் அதற்கு அடிமையாகாமல் டீல் பண்ணுவேன்.

♥ கற்பனைக்கும் நிஜ வாழ்க்கைக்குமான வித்தியாசத்தை உணர்ந்திருக்கிறேன்.

♥ காதலின் பெயரால் நான் யாரையும் கட்டுப்படுத்த மாட்டேன். என்னையும் யாரும் கட்டுப்படுத்த அனுமதிக்க மாட்டேன்.

♥ ஒரே சமயத்தில் ஒரே நபரிடம்தான் காதலில் விழுவேன். கிடைக்காத காதலன்/ காதலி மீது ஆசை வளர்க்க மாட்டேன்.

♥ என் அடிப்படை உரிமைகள்-தேவைகள் மறுக்கப்பட்டால் அந்த உறவை முறித்துக் கொள்ளத் தயங்க மாட்டேன்.

♥ வார்த்தைகளாலோ செயலாலோ என்னை யார் துன்புறுத்தினாலும் அவர்களை விட்டு விலகுவேன்.

♥ எனக்கு மட்டுமே செய்துகொள்ளக்கூடிய பணிவிடைகளை நான் ஒருபோதும் அடுத்தவருக்குச் செய்யமாட்டேன்.

♥ அடுத்தவரை நேசிப்பதைப் போலவே என்னையும் நேசிப்பேன்.

♥ எனது வலிமைக்காகவும் வழிகாட்டுதலுக்காகவும் மனமாற்றத்துக்காகவும் எனக்கு மேல் இருக்கும் சக்தியை நான் வேண்டுகிறேன்.

அட யாருப்பா அங்க? ஏ4ல இதை ஆயிரம் பிரின்ட் அவுட் எடுத்து பார்லலாம் ஒட்டுங்கப்பா!

## காதல் என்பது

யூமா வாசுகி

ஒரே சமயத்தில் இரு வேறு திசை
நோக்கி நிகழும் பேரான் மிகப் பயணம்.
ஒன்று எல்லையற்ற விகாசத்தை
நோக்கியும்மற்றொன்று மிக நுண்ணிய
நுட்பத்தை நோக்கியும்!

## காதல்... என்பது...

நிறைய கொடுத்து



நிறைய பெறுவது!

-சுகா-



## கடி கடி





தலைவர் சினிமாவில் நடிக்கப் போறாரா...ஏன்?
நம்ம கட்சிக்கு நட்சத்திரப் பேச்சாளர்ன்னு யாரும் இல்லையாம் அதான்!



என்ன மாப்பிள்ளை இது! பொண்ணு பார்க்க தனியா வந்திருக்கீங்க?
முதல் மனைவியைக் கூட்டிக்கிட்டு வந்தா நீங்கபொண்ணு தர மாட்டிங்களே...



நீங்க தந்த தூக்க மாத்திரையை சாப்பிட்ட பிறகு சதா நர்ஸ் நினைப்பு தான் டாக்டர்...
ஞாபகமறதியா ஏக்க மாத்திரை தந்துட்டேன் போல!



தன் வீட்டு பாத்ரூம்ல இங்கு சிறுநீர் கழிக்க வேண்டாம் மீறினால் தண்டிக்கப் படுவீர்கள் ஏன் தலைவர் எழுதி வச்சிருக்கார்?
சின்ன வயசுப் பழக்கம் இன்னும் அவரால மறக்க முடியலையாம்!



தலைவருக்கு பேச்சு சாமர்த்தியம் அதிகம்ன்னு எப்படி சொல்றே?
கூட்டத்துக்கு பத்து பேர் வந்திருந்தாலும் இலட்சம் பேர் இருக்கிற மாதிரி ஃபீல் பண்ணி பேசுவாரே



டாக்டர் என்னை நம்பி மூணு குடும்பம் இருக்கு...
என் குடும்பத்தையும் சேர்த்து நாலு குடும்பம் இருக்குன்னு சொல்லத் தோணலையா?



ஒரே ராத்தியில ஏன் இரண்டு கடைகளில கொள்ளை அடிச்சே என்ன பண்றது எஜமான்..?
எனக்கு இரண்டு சம்சாரம் ஆச்சே!



திருடினவன் வேற என்ன செய்தான். சும்மாவா போனான்...?
இல்லை எங்களோட சேர்ந்து செல்ஃபி எடுத்துக் கிட்டுத்தான் போனான்!

பீச்சுல கடலை போட்டா லவ்னு சொல்றோம் தியேட்டர்ல கடலை போட்டா ஜொள்ளுன்னு சொல்றோம்.ஆனா தோட்டத்தில கடலை போட்டா அதை மட்டும் ஏன் விவசாயம்ன்னு சொல்றாங்க?



தலைவரே!உங்க மீட்டிங்க்கு அனுமதி தர்றதுக்கு பொலிஸ் ஒரே ஒரு கண்டிஷன் போடுது.
என்னய்யா அது?
குறைஞ்சது நாலு பேராவது மைதானத்தில் இருக்கணுமாம்.

# சானியா சந்தித்த ஐந்து சவால்கள்!

டென்னிஸ் என்றாலே உலக அரங்கில் இந்தியாவின் முகம் சானியா மிர்சா தான். ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னாலும் அவர் மிகக் கடுமையாக போராடியிருக்கிறார் இந்த தில் லேடி. சிறு வயதில் இருந்து இப்போது வரை சானியா சந்தித்த ஐந்து சவால்கள் இவை.

❖ஆறு வயதில் இருந்தே டென்னிஸ் கற்றுக்கொள்ள ஆரம்பித்தவர் சானியா. அவரது ஆரம்பகால பயிற்சியாளரே அவரது அப்பா இம்ரான் மிர்சா தான் . 90 களின் ஆரம்பத்தில் இந்தியாவே சச்சின் வருகையால் கிரிக்கெட்டுக்கு ஜே போட்டுக்கொண்டிருக்க, ஒரு டென்னிஸ் வீராங்கனையாக உருவாக்க வேண்டும் என திட்டமிட்டே வளர்த்தார் இம்ரான் . பாடசாலைப் பருவத்தில் வகுப்பில் இருந்த நேரத்தை விட கிரவுண்டில் இருந்த நேரம் தான் அதிகம். ஆனால் சானியா டென்னிசில் மட்டுமல்ல வகுப்பிலும் நல்ல ஸ்கோர் செய்துகொண்டே இருப்பார். டென்னிஸ் தொடர்களில் ஜொலிக்க வேண்டுமென்றால் திறமை மட்டும் போதாது பணமும் வேண்டும், ஏனெனில் பல நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்ய வேண்டி நேரிடும், தங்கும் ஹோட்டல், சாப்பாடு ஆகியவற்றுக்கு பெருந்தொகை செலவிட நேரிடும். தனது அப்பாவுக்கு சிரமத்தைக் குறைப்பதற்காக, நிறைய ஸ்கொலர்ஷிபகள் பெறுவதற்காகவே தினமும் கூடுதல் நேரம் உழைத்து படிப்பிலும் கில்லியாக இருந்தார் . ஒரு நல்ல விளையாட்டு வீரராக வேண்டுமென்றால் எக்காரணம் கொண்டும் படிப்பை விட கூடாது, நன்றாக படிக்கவும் செய்து, விளையாட்டிலும் ஈடுபட்டால் பணச் சுமையை எளிதில் தகர்க்கமுடியும் எனபது சானியாவின் அட்வைஸ்.

❖ தனது 16 வயதில், இளம்பெண்கள் இரட்டையர் பிரிவில் விம்பிள்டன் டைட்டில் வென்றார் . பெயர் பத்திரிகைகளில் அடிபடத் தொடங்கவே சானியா மீது பலர் கவனம் செலுத்தினர். இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த ஒரு பெண் எப்படி குட்டைப் பாவாடை அணிந்து விளையாடலாம் என சிலர் சர்ச்சைகளை கிளப்ப, லைம் லைட்டுக்கு வந்தார். அந்த சர்ச்சைக்குப் பிறகு சானியா மிர்சா விளையாடும் போட்டிகளை பலர் உற்றுநோக்கத் தொடங்கினார்கள். நான் போட்டியில் வென்றால், நான் அணிந்திருப்பது ஆறு இன்ச் உடையா, ஆறடி உடையா என்றெல்லாம் யாரும் கேள்வி கேட்கமாட்டார்கள். ஆனால் தோற்றுவிட்டால் அடுத்த மூன்று நாட்களுக்கு உடை குறித்து சர்ச்சை கிளப்ப ஆரம்பித்து விடுகிறார்கள். நான் என்ன உடை அணிய வேண்டும் என்பதை நான் தான் தீர்மானிப்பேன் என துணிச்சலாக பதிலளிக்க இந்தியா முழுவதும் சென்சேஷன் ஆனார். ஒரு பெண், பல தடைகளை கடந்து டென்னிஸ் விளையாட்டில் இந்தியாவுக்கு பெயர் வாங்கித்தரும் வேளையில் கிளாமர் கிராமர் குறித்த வகுப்பெடுப்புகளுக்கு பதில் சொல்ல வேண்டியிருந்தது சானியாவின் துரதிர்ஷ்டம்.

❖குஷ்பு ஒருமுறை திருமணத்துக்கு முந்தைய உடலுறவு குறித்து பேசியது இந்திய அளவில் சர்ச்சையானது. அச்சமயத்தில் சானியாவின் கருத்து என்ன என பத்திரிகையாளர்கள் கேட்க, " திருமணத்துக்கு முன்போ, பின்போ எதுவாக இருந்தாலும் பாதுகாப்பான உடலுறவு இருப்பது அவசியம்" என்றார். ஏனெனில் அந்த காலகட்டத்தில் எயிட்ஸ் குறித்த பேச்சுகள் ஊரெங்கும் நிரம்பியிருந்தன. சிலர் சானியாவின் கருத்தை சர்ச்சையாக்கி, திருமணத்துக்கு முந்தைய உடலுறவை ஆதரிக்கிறார் என செய்திகள் பரப்ப; நாடெங்கும் சானியாவின் உருவ பொம்மைகள் எரிக்கப்பட்டன. அதன் பின்னர் எக்காலத்திலும் திருமணத்துக்கு முந்தைய உடலுறவை நான் ஆதரிக்க மாட்டேன், கருத்துகள் தவறாக புரிந்துகொள்ளப்பட்டன என அவர் விளக்கம் கொடுத்த பின்னர் தான் பிரச்சினை ஓய்ந்தது.







❖ சானியா மிர்சாவுக்கு அவரது பாடசாலைப்பருவ நண்பர் சொஹ்ரப் மிர்சாவுடன் நிச்சயதார்த்தம் நடந்து திருமணம் நின்று போனது. அதன் பின்னர் யாருமே எதிர்பார்க்காத வண்ணம் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சோயப் மலிக்கை திருமணம் செய்து கொண்டார் சானியா. சானியா பாகிஸ்தான் மருமகள் இந்தியாவுக்காக விளையாடக்கூடாது என பல அமைப்புகள் மீண்டும் சர்ச்சையை கிளப்ப நான் முதலில் "இந்தியாவின் மகள"இந்தியாவுக்காகத்தான் விளையாடுவேன் என பேட்டி தட்டி சர்ச்சைக்கு முற்றுப் புள்ளி வைத்தார் மிர்சா.

❖ சினிமாவிலும் சரி, விளையாட்டிலும் சரி, புகழின் உச்சியில் இருந்து இறங்கிய பின்னர் "ரீ என்ட்ரி" எல்லோருக்கும் சக்சஸ் ஆவதில்லை. அதிலும் பெண்களாய் இருந்துவிட்டால் இன்னும் நிலைமை மோசம். திறமையால் வெற்றி கிடைத்தாலும் "அவளுக்கு அதிர்ஷ்டம்பா" என்ற ஒற்றை வார்த்தையில் முடித்து விடுவார்கள். திருமணம், அவதூறு போன்ற மனத்தடைகளாலும் காயங்களாலும் ஏற்பட்ட உடல் ரீதியான தடையையும் தாண்டி 2 ஆவது இன்னிங்ஸில், உச்சம் தொட்டிருக்கிறார் சானியா. திருமணத்துக்குப் பிறகு ஒற்றையர் பிரிவில் விளையாடுவதால் பல காயங்கள் ஏற்படவே ஒற்றையர் போட்டிகளுக்கு முழுமையாக முழுக்குப் போட்டார். முன்கையில் பலம் அதிகம். கிரவுண்ட் ஸ்ட்ரோக்கில் கில்லி என்பதால் இரட்டையர் பிரிவில் கவனம் செலுத்தினால் மிகப்பெரிய உயரம் தொட முடியும் என்பதை உணர்ந்து கடைசி இரண்டு ஆண்டுகளாக இரட்டையர் பிரிவில் விளையாடி தொடர் வெற்றிகளை குவித்து வருகிறார். 83 வாரங்களாக இரட்டையர் பிரிவில் உலக அரங்கில் முதலிடத்தில் இருக்கிறார் சானியா மிர்சா ●

# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்: இருளும் ஒளியும்
**இயற்றியவர்:** கவிஞர் கண்ணதாசன்
**இசை:** கே.வி. மஹாதேவன்
பாடியோர்:எஸ்.பி.பாலசுப்பிரமணியம், பி. சுசீலா




திருமகள் தேடி வந்தாள்
எந்தன் இதயத்தில் குடி புகுந்தாள்
குலமகள் கோலத்திலே
தேவி மருமகளாக வந்தாள்
ஆஆஆஆ ஹா ஹா ஹா

திருமகள் தேடி வந்தாள்
திருமகள் தேடி வந்தாள்
ஆஆ..... ஆஆஆ

மஞ்சள் தந்தவள் விசாலாட்சி
நல்ல மலர்களைத் தந்தவள் மீனாட்சி
மஞ்சள் தந்தவள் விசாலாட்சி
நல்ல மலர்களைத் தந்தவள் மீனாட்சி
குங்குமம் தந்தவள் காமாட்சி
குங்குமம் தந்தவள் காமாட்சி
எங்கள் குடும்பத்தில் தேவி உன் அரசாட்சி

திருமகள் தேடி வந்தாள்
எந்தன் இதயத்தில் குடி புகுந்தாள்
குலமகள் கோலத்திலே
தேவி மருமகளாக வந்தாள்
ஆஆஆஆ ஹா ஹா ஹா

திருமகள் தேடி வந்தாள்
ஆஹாஹா ஆஹஹஹா ஹ ஹாஆஆஆ

திருமலை திருப்பதிப் பால் பழங்கள் - உயர்
தென்திருப் பழனியின் தேன் குடங்கள்
திருமலை திருப்பதிப் பால் பழங்கள் - உயர்
தென்திருப் பழனியின் தேன் குடங்கள்
கனிவாய் மொழிதரும் வாசகங்கள் - என்
கனிவாய் மொழிதரும் வாசகங்கள்
காதல் தெய்வத்தின் உயர் குணங்கள்
காதல் தெய்வத்தின் உயர் குணங்கள்
திருமகள் தேடி வந்தாள்
எந்தன் இதயத்தில் குடி புகுந்தாள்
குலமகள் கோலத்திலே
தேவி மருமகளாக வந்தாள்
ம்ம்ம்ம்ம்ம்ம்ம்
திருமகள் தேடி வந்தாள்

# கனவுகளும் பலன்களும்



சிறுவர்கள் காற்றாடி விடுவது போலக் கனவு கண்டால், காற்றாடி பறக்கும் விதத்தைப் பொருத்துப் பலன்கள் மாறுபடும். காற்றாடி உயரமாகப் பறந்தால் வசதியான வாழ்க்கை அமையும். அந்தஸ்து உயரும். காற்றாடி கீழே இறங்குவது போலக் கனவு கண்டால் தொழிலில் நட்டம் உண்டாகும்.காற்றாடி அறுந்து விட்டதாகக் கனவு கண்டால் கீழான நிலைமை ஏற்படும்.

ஒலிபெருக்கியில் பேசுவது போலக் கனவு கண்டால் பேச்சாற்றல்,எழுத்தாற்றல் ஆகிய திறமைகள் வளரும். மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரிக்கும்.

ஒலிபெருக்கியில் பிறர் பேசுவதைக் கேட்பது போலக் கனவு கண்டால் புதிய துறைகளில் ஈடுபட்டு வெற்றி பெறலாம்.அதனால் பண வசதியும் செல்வாக்கும் உயரும்.

இடி,மின்னல்,காற்று போன்றவற்றைக் கனவில் காண்பது வாழ்க்கையில் போராட்டம் ஏற்படப் போவதைக் குறிக்கும். பல துன்பங்களுக்கு ஆளாக நேரும்.

**தீ பற்றிய கனவுகள்**

ஒரு தீபத்தையோ,தீப அலங்காரத்தையோ கனவில் காண்பது நல்லது.சகல பாக்கியங்களும் உண்டாகும்.

திருமணமாகாதவர் தீபத்தைக் கண்டால் விரைவில் திருமணமாகும்.குழந்தை இல்லாதவர் அல்லது புதிதாகத் திருமணமானவர் தீபத்தைக் கண்டால் விரைவில் குழந்தை பாக்கியம் ஏற்படும்.

விவசாயிகள் கனவில் தீபத்தைக் கண்டால் அவர்களுக்கு அமோக விளைச்சல் கிடைக்கும்.

தீ எரியும் காட்சியைக் கனவில் கண்டால் வாழ்வில் வளம் உண்டாகும்.பொருள் வரவு ஏற்படும்.நெருப்பில் புகை அதிகம் காணப்பட்டால் எதிர்ப்புகள் உண்டாகும்.

நெருப்பு அணைந்து விட்டதாகக் கனவு கண்டால் எடுத்த காரியங்களில் தோல்வி ஏற்படும்.

வீடு தீப்பற்றி எரிவது போலக் கனவு கண்டால் பீடைகள் விலகும்.புதிய திருப்பம் உண்டாகும். எதிர்காலம் நல்ல முறையில் அமையும்.உடைகளில் தீப்பற்றிக் கொள்வது போலக் கனவு கண்டாலும் கரி அல்லது சாம்பலைக் கண்டாலும் நோய்கள் குணமாகும்.

படுக்கை அறை தீப்பிடித்து எரிவதாகக் கனவு கண்டால் நோய் உண்டாகும்.

நெருப்புத் துண்டுகள் குவியலாகக் கிடப்பது போலக் கனவு கண்டால் செல்வமும் செல்வாக்கும் உயரும்.

நன்றாக எரியும் அடுப்பைக் கனவில் கண்டால் செய்யும் தொழிலில் அபிவிருத்தியும் இலாபமும் உண்டாகும். அடுப்பில் பூனைக்குட்டி படுத்திருப்பதாகக் கனவு கண்டால் தொழிலில் நட்டம் ஏற்படும். வியாதிகள் உண்டாகும்.

பலகாரங்கள் நெருப்பில் கருகிப் போவதாகக் கனவு கண்டால் விரயமும் வீண் வழக்குகளும் உண்டாகும். பலகாரங்களை அடுப்பில் சுடுவதாகக் கனவு கண்டால் வியாபாரம் தழைத்தோங்கும்.

**வானம் பற்றிய கனவுகள்**

கருமேகங்கள் படராத தெளிவான வானத்தைக் கனவில் கண்டால் நல்ல புகழும் கீர்த்தியும் உண்டாகும். ஜென்ம விரோதிகளும் நண்பர்களாவர்.காரியம் வெற்றியாகும்.வியாபாரத்தில் இலாபம் கிடைக்கும்.வழக்குகளில் வெற்றி கிடைக்கும்.

கருமேகங்கள் படர்ந்த வானத்தைக் கனவில் கண்டால் மேலே. சொன்ன பலன்களுக்கு நேர்மாறான பலன்கள் நடக்கும்.கஷ்டங்களும் கவலைகளும் ஏற்படும். கெட்ட பெயர் உண்டாகும்.

வெண்மேகமும் கருமேகமும் கலந்த வானத்தைக் கனவில் கண்டால் கஷ்டங்கள் விரைவில் விலகும்.

(அடுத்த வாரம் தொடரும்)

# பேய் மனிதன்



ஒரு மனிதனை இறந்த நிலைக்குக் கொண்டுசென்று மீண்டும் உயிரோடு பிழைக்க வைக்க முடி யுமா? ஆம். முடியும். சுயநினைவற்ற அவர்களைத் தங்களுக்கு அடிமைகளாகப் பயன்படுத்த முடியும் என்றும், முழுக்க முழுக்க மூர்க்க குணம் கொண்ட அந்த அடிமைகள்தான் "ஸோம்பிகள" என்றும் நம்பப்படுகின்றனர். இந்த ஸோம்பிகள் அளவில்லா வலிமையோடு அருவருப்பான தோற்றம் கொண்டவை. காட்டேரிகளைப் போல நரமாமிசத்திற்காய் அலைபவை எனவும் கருதப்படுகின்றன. கனடாவைச் சேர்ந்த ரிக்கெனெஸ்ட் எனும்இளைஞர் தன்னை ஒரு ஸோம்பியாக அடையாளப்படுத்திக் கொண்டு இவ்வாறாக சுற்றித் திரிகிறார். வாங்க, என்னன்னு பார்ப்போம்!

பொதுவாக, அனைவரும் சுப்பர் ஹீரோ வாகிமக்களுக்கு உதவ வேண்டும் என்று தான் நினைப்போம் ஆனால், இவர் சிறு வயதிலிருந்தே ஸோமபியாக வேண்டும் என்கிற ஆசையால் தனது முகம் உட்பட உடலின் அனைத்துப் பாகங்களிலும் விதவிதமான டாட்டூஸ்களை வரைந்து கொண்டு அபாயகரமான தோற்றத்தோடு காணப்படுகிறார்.



தனக்குப் பதினாறு வயது தொடங்கியது முதலே டாட்டூ குத்திக் கொள்ள ஆரம்பித்ததாகவும் அதன் மூலமாகவே பல நிறுவனங்களுக்கு மொடலாகப் பணியாற்றி வருவதாகவும் தெரிவிக்கிறார்.

நாடோடி வாழ்க்கை முறையில் வாழ்ந்து வரும் ரிக், மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதிகளில் சுற்றித் திரிந்து பெரும்பாலானோரை பயமுறுத்திக் கொண்டிருக்கிறார். தான் டாட்டூ குத்திக்கொள்ளும் பழக்கத்திற்கு அடிமையாகி விட்டதாகவும் மற்றவர்கள் தன்னைப் பார்த்து பயப்படுவதையும் "ஸோம்பி" எனக் கத்திக்கொண்டு ஓடுவதையும் ரசிப்பதாக இவர் கூறியிருக்கிறார்.

அதனாலேயே "ஸோம்பி" போலவே கடைசிவரை வாழ விரும்புகிறாராம்.

# அச்சம் என்பது மடமையடா



ஆபத்தில் இருக்கும் காதலிக்காக, தன் பாதுகாப்பு வளையம் தாண்டிப் பறக்கும் ஒரு பயணியின் கதை.

இன்ஜினீயரிங் ப்ளஸ் எம்.பி.ஏ .பட்டதாரி சிம்பு. தனது பைக்கில் ஒரு ரோடு ட்ரிப் முடித்து விட்டு வந்து, வாழ்வின் அடுத்த அத்தியாயத்தைத் தொடங்கலாம் என நினைக்கும்போது, தங்கையின் தோழியாக சிம்புவின் வீட்டுக்கே வந்துசேர்கிறார் மஞ்சிமா. வீட்டிலேயே இருவரும் பேசிப் பேசி நட்பை வளர்க்க, அது சிம்பு உடன் ரோடு ட்ரிப் போவது வரை நீள்கிறது.

பயணம் முடியும் நேரத்தில் ஒரு பெரிய விபத்து நிகழ, படம் ஆக்‌ஷன் ட்ராக்குக்குத் தாவுகிறது.

அது விபத்து அல்ல, மஞ்சிமாவைக் கொலை செய்ய நடந்தது என சிம்புவுக்குத் தெரியவர,



துப்பாக்கி புல்லட்கள் கண்டபடி தெறிக்க, கொல்லத் துடிக்கும் எதிரிகளை என்ன செய்தார் சிம்பு என்பதே க்ளைமாக்ஸ்!

சிம்பு பார்க்கவும் ஸ்மார்ட் நடிப்பும் ஸ்மார்ட். சின்னச் சின்ன ரியாக்‌ஷன்களில் கவர்கிறார். ஆனால், உடம்பு இளைக்கணும் ப்ரோ. மஞ்சிமா க்யூட், பப்ளி. நடிப்பில்தான் இன்னும் ப்ரீகேஜி பேபியாகவே இருக்கிறார். திகட்டத் திகட்ட லவ், திணறத் திணற ஆக்‌ஷனுக்கு நடுவில் கிச்சுகிச்சு ஆறுதலே சதீஷ்தான்.

கௌதம் மேனன் படங்கள் என்றாலே முதல் பாதி இசையும் காதலும். இரண்டாம் பாதி ஆக்‌ஷனும் த்ரில்லும் என்ற சுவாரஸ்ய காம்போதான்.

ஆனால், அந்த மிக்ஸிங் இதில் மிஸ்ஸிங். மிரட்டல் காஸ்ட்டிங்கும் இல்லை ஃபீல் குட் மேக்கிங்கும் இல்லை. என்ன ஆச்சு கௌதம்?

சுட்டுக்கொண்டே இருக்கிறார் சிம்பு. குண்டு தீர்வதே இல்லை. க்ளைமாக்ஸ் உட்பட எதிலுமே லாஜிக் இல்லை.

அவளும் நானும், ராசாளி என டெம்போவைக் கூட்டிக் கொண்டே சென்று தள்ளிப் போகாதேவில் முடிக்கிறார் ஏ.ஆர்.ரஹ்மான்.

பாடல்களில் மட்டும் அல்லாது பின்னணி இசையிலும் ரஹ்மான் டச். தாமரையின் வரிகள் பாடல்களுக்கு மிகப்பெரிய பலம். எடிட்டர் அந்தோணியின் அன்யூஷ்வல் யுத்தி, கதைக்கு அத்தனை கெத்து. விட்டு விட்டு ஷூட்டிங் நடத்தியதாலோ என்னவோ, பட்டும்படாமல் இருக்கிறது டான் மேஹார்தரின் ஒளிப்பதிவு.

புல்லட்தான்... ஆனால், 30 கி.மீ.வேகத்தில் பயணித்தது போல் இருக்கிறது!




# திரைவிமர்சனங்கள்

# கடவுள் இருக்கான் குமாரு

இன்றைய ட்ரெண்ட் இளைஞர்களின் பல்ஸ் பிடித்து படம் நடிப்பவர் தான் ஜி.வி.பிரகாஷ். இவர் படம் என்றாலே அடெல்ட் ஒன்லீ ரேஞ்சில் இருக்க முதன் முறையாக ராஜேஸ் கூட்டணியில் அதிலும் யு சான்றிதழுடன் வெளிவந்துள்ள படம் தான் கடவுள் இருக்கான் குமாரு. ராஜேஸ் படம் என்றாலே ஜாலி, கேலி பஞ்சம் இருக்காது. அப்படி நம்மை ஜாலியாக கொண்டு சென்றதா? இந்த கடவுள் இருக்கான் குமாரு, பார்ப்போம்.

தமிழ் படத்திற்கே உண்டான பாரம்பரியம் ஹீரோவுக்கு வேலையில்லை. நண்பருடன் அரட்டை அடித்து ஊரை சுற்றுகிறார் ஜி.வி. முதல் காட்சியிலேயே அவருக்கு நிக்கி கல்ராணியுடன் திருமண ஏற்பாடு நடக்கின்றது.

திருமணத்திற்கு முந்தைய நாள் பாலாஜியுடன் பேச்சுலர் பார்ட்டி சென்று வரும் நேரத்தில் போலிஸ் இவர்கள் வந்த காரை வழிமறிக்கின்றது.

கார் நிறைய சரக்கு பாட்டில்கள் இருக்க, போலிஸான பிரகாஷ்ராஜ் பணம் எதிர்பார்க் கிறார். அவர்களிடமிருந்து ஜிவி, பாலாஜி தப்பிக்க, பொலிஸ் அவர்களை துரத்த, பிறகு திருமணம் நடந்ததா? இல்லையா? என்று எங்கெங்கோ கதை செல்கின்றது.

ஜி.வி இன்னும் எத்தனை படத்தில் தான் இப்படியே நடிப்பார், போதும் ஜி.வி என்று சொல்ல வைக்கின்றது. ஆனந்தியுடன் முந்தைய காதல், அப்படியே த்ரிஷா இல்லன்னா நயன்தாரா, எனக்கு இன்னொரு பேர் இருக்கு எபிசோட் பார்ப்பது போல் உள்ளது.

ஆர்.ஜே.பாலாஜியின் ஹைலைட்டே அவரின் ட்ரெண்ட் வசனங்கள் தான், தற்போது வழக்கத்தில் உள்ள வசனத்தை



கலாய்த்து இளைஞர்களிடம் அப்லாஸ் வாங்குகிறார். ராஜேஸ் படத்தில் இப்படி ஒரு சொதப்பலா, சந்தானம் இல்லாத குறை தெரிகிறது பாஸ்.

ஆனந்திக்கு கூட இரண்டு, மூன்று காட்சிகள் இருக்க, நிக்கி கல்ராணி ஏதோ வைக்க வேண்டுமே என்று வைத்துள்ளார்கள். ராஜேஸ் படத்தில் நாம் மிகவும் எதிர்பார்த்து போவது காமெடிதான்.

யாரையும் விட்டு வைக்க மாட்டார், கலாய்த்து எடுத்துவிடுவார். இதிலும் பஞ்சாயத்து பேசும் ஒரு நிகழ்ச்சியை கலாய்க்கும் காட்சி, சிரிப்பிற்கு கேரண்டி. ஆனால், படம்முழுவதும்ராஜேஸ்டச்மிஸ்ஸிங்

கலாய்ப்பு வசனம் இருக்கலாம், அதற்காக ஒருத்தரை மனம் நோகடிக்கும் படியான வசனம் தேவையா? ஸ்ருதி ஹாசனை கிண்டல் செய்யும் வசனம் எதற்கு? பேய் எபிசோட் எல்லாம் எதற்கு? இப்படி பல கேள்விகள் நாமே கேட்டுக் கொண்டால் தான் உண்டு.

ஜி.வி.ஹீரோ ஆயிட்டிங்க, ஓகே, இசையமைப்பாளர் வேறு யாரையாவது கமிட் செய்யலாமே? பாடல்களும் அத்தனை கொடுமை. பிரகாஷ் ராஜ், ரோபோ ஷங்கர், சிங்கம் புலி வரும் ஒரு சில காட்சிகள்.

தெளிவே இல்லாத திரைக் கதை, அதிலும் பேய் சீன்கள் எல்லாம் பொறுமையை சோதிக்கின்றது.

மொத்தத்தில் கடவுள் இருக்கான் குமாரு ரொம்ப சோதனை குமாரு.

# மீன்குழம்பும் மண்பானையும்

மலையாள சினிமாவிலிருந்து வந்து தமிழ் சினிமாவில் வெற்றி கொடி நாட்டியவர் ஜெயராம். அவரின் மகன் காளிதாஸ் முதன் முறையாக அறிமுகமாகும் படம்தான் மீன்குழம்பும் மண்பானையும்.

காரைக்குடியில் இருக்கும் பிரபுவுக்கு திருமணமாகி முதல் குழந்தை பிறந்தவுடன் மனைவி இறந்து விடுகிறார். கைக்குழந்தையுடன் மலேசியாவிற்கு செல்லும்பிரபு, அங்கு தமிழர்கள்வாழும் பகுதியில் மீன் குழம்பு கடை வைத்து பெரியாளாகிறார்.

இவருடைய ஒரே மகனான நாயகன் காளிதாஸ் வளர்ந்து பெரியவனாகி கல்லூரியில் படித்து வருகிறார்.

நாயகி அஷ்னா சவேரியும் அதே கல்லூரியில் படித்து வருகிறார். இருவருக்கும் அடிக்கடி மோதல்ஏற்பட்டு வருகிறது. மேலும் காளிதாசுக்கு மற்ற கல்லூரி மாணவர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டு வருகிறது.

இது பிரபுவிற்கு பிடிக்காமல் வை.ஜி.மகேந்திரனை ஒருகட்டத்தில் இவர் சந்திக்க, அவர் காளிதாஸை ஒரு வீட்டிற்கு அழைக்கிறார்.

அங்கு போதகரான கமல் காளிதாஸ் உடம்பில் பிரபுவின் சிந்தனையும், பிரபுவின் உடம்



பில் காளிதாஸ் சிந்தனையையும் மாற்ற, பிறகு என்ன ஆனது என்பதே மீதிக்கதை.

காளிதாஸ் முதல் படத்திலேயே பொறுப்பை உணர்ந்து நன்றாக நடித்திருக்கிறார், காமெடி காட்சிகள் ஜெயராம் அளவிற்கு இல்லை, அதில் கொஞ்சம் கவனம் செலுத்தலாம்.

அஷ்னாவும் படம் முழுவதும் வந்து செல்கிறார், பிரபு எப்போதும் போல் தனக்கான கதாபாத்திரத்தில் செம்ம ஸ்கோர் செய்துள்ளார்.

கமல் ஒரு சில நிமிடம் வந்தாலும் அவர் வரும் காட்சிகள் கைதட்டல் நிற்க சிறிது நேரம் ஆகின்றது. டி.இமானின் பின்னணி இசை ரசிக்க வைக்கின்றது, பாடல்கள் ஏதும் மனதில் நிற்கவில்லை.

முதல் பாதியில் இருந்த விறுவிறுப்பு கொஞ்சம் இரண்டாம் பாதியில் மிஸ்ஸிங். காளிதாஸ்-பிரபுவின் காட்சிகள். கமலின் கெஸ்ட் ரோல். முதல் பாதி.

சுவாரசியம் மிகவும் குறைவு. இரண்டாம் பாதி இன்னும் விறுவிறுப்பை கூட்டியிருக்கலாம். மொத்தத்தில் மீன்குழம்பும் மண்பானையும் சுவை கொஞ்சம் குறைவு.



## சிறுகதை




ஊரிலே சண்டியன் ஆன கரனிடம் எவரும் அவனை எதிர்த்துக் கதைப்பதில்லை. யாரும் எதிர்த்துக் கதைத்தாலும் அவர்களுடன் கரனின் வாய் பேசாது, கைதான் பேசும். அந்தளவுக்கு இருந்த முகுந்தனுக்கு பொலிஸ் என்றால் மட்டும் பயம் பொலிஸ் வருகிறது என்றால் ஓடி ஒளித்துவிடுவான். இப்பொழுது கொஞ்சக் காலமாகத்தான் ஆட்டோ ஒன்றை லீசிங் நிறுவனத்தினூடாகப் பெற்று ஒரு தொழிலைச் செய்து வந்தான். ஆனால் லீசிங் தவணையையும் ஒழுங்காகக் கட்டுவதில்லை.

டேய் மச்சான் வழியில ஆள் மடக்கி வாறாங்களாம் என்ற முகுந்தனின் அலறல் கேட்டுத் தலையில் கைவைத்துக் கொண்டான் கரன். ஆள் மடக்கி என்று இவர்களால் செல்லப் பெயர் சூட்டப்பட்டிருந்தார் நிதி நிறுவனத்தில் இருந்து வரும் லீசிங் உத்தியோகத்தர். இவங்களிட்ட லீசிங்கில ஆட்டோ எடுத்ததும் போதும் அவங்களப் பார்த்து ஓடுறதும் போதும் என்று நினைத்துக் கொண்ட கரன், அக்கா லீசிங்காரர் வந்தால் நான் இல்லையெண்டு சொல்லு என்றவாறு ஆட்டோவை எடுத்துக் கொண்டு கேற்றடிக்கு வர அங்கு முகுந்தன், ஆள் மடக்கியான ரமேசுடன் கதைத்துக் கொண்டு நின்றான்.

முகுந்தனை முறைத்தவாறே கரன் லீசிங் உத்தியோகத்தரைப் பார்த்து அசடு வழியச் சிரித்தான். எனக்குத் தெரியும் அண்ணை நீங்க இண்டைக்கு வருவீங்கள் என்று. அதுதான் வேளைக்கே வெளிக்கிட்டனான் ஒரு தவணைக் காசையாவது கட்டிட்டு வருவம் என்று. அதற்கிடையில் நீங்க வந்து விட்டீங்க என்றவனை சந்தேகத்துடன் பார்த்த லீசிங் உத்தியோகத்தர் உண்மையாக காசு கட்டத்தான் வெளிக் கிட்டனீங்களோ? அண்ணை என்று நம்ப முடியாமல் கேட்டான்.

‘‘நீங்க நம்பாவிட்டால் முகுந்தனைக் கேட்டுப் பாருங்கோ ”என்றவாறு மீண்டும் தனது நண்பனான முகுந்தனை முறைத்துப் பார்த்தான் கரன். எப்படியோ மச்சானை மாட்டி விட்டாச்சு. இனி தப்ப வைக்கிற மாதிரி நடிப்பம் என்று யோசித்தவாறே ‘‘ஓம் அண்ணை நேற்றே உங்களுக்கு காசுகட்ட வேணும் என்று சொன்னவன் ” என்று கரனின் பொய்யை ஆமோதித்தான் முகுந்தன்.

சரி இண்டைக்கு கட்டாவிடில் அடுத்த முறை ஆட்டோவைத் திருப்பி எடுக்கச் சொல்லிவிட்டினம் ஒபிசில. பிறகு என்னைக் குறை நினைக்காதேங்கோ என்றவாறு மீண்டுமொரு முருங்கை மரத்தில் ஏறப் புறப்பட்டார் ஆள் மடக்கியான லீசிங் உத்தியோகத்தர்.

“ஆள்மடக்கி வர முன்னமே சொல்லச் சொன்னா நீ அவனை வீட்டு கேற்றடியில வைத்துக் கதைத்துக் கொண்டிருக்கிறாய் லூசா” என்று சினத்துடன் எரிந்து விழுந்த கரனுக்கு “ஆள்மடக்கி வந்தால் சொல் என்று தானே சொன்னனீ? இப்பதானே வரமுதல் சொல்ல வேணும்மென்று சொல்லுகின்றாய்” என்று முகத்தை அப்பாவித்தனமாக வைத்துக் கொண்டே சொன்ன முகுந்தனை நரியா என்று கூறியவாறே சென்றான் கரன்.

நிதி நிறுவனத்தில் ஏசி றூமில் லீசிங்குக்கு எப்படி ஆட்களை மடக்குவது என்பது பற்றி புதிதாக இணைந்தவர்களுக்கு ஆலோசனை வழங்கிக் கொண்டிருந்தான் நிறுவனத்தின் சிரேஷ்டதர உத்தியோகத்தரான றங்கன்.

ஓரமாக தான் ஓதுவதைப் பார்த்துக் கொண்டிருந்த தனது நண்பனைப் பார்த்த றங்கன் தனது ஓதலை நிறுத்திவிட்டு “என்னடா ரமேஸ் பிரச்சினை” என்றான். “ஒன்றுமில்லை அந்த முகுந்தன் ஆட்டோ லீசிங்கைக் கட்டுகிறான் இல்லை. அலைய வேண்டியதாகக் கிடக்கிறது. ஆறு மாத தவணை கட்டவில்லை. பிச்சைக்காரன் மாதிரி அவனுக்குப் பின்னால் அலைய வேண்டியிருக்கு” என்று சலித்துக் கொண்டவனுக்கு “சரிசரி விடு இனி நான் அவனைப் பார்த்துக் கொள்கின்றேன். அடுத்த மாதம் தவணை கட்ட வைக்கின்றேன் பார்” என்று ஆறுதல் கூறி அனுப்பினான்.

றங்கன் தன் கீழுள்ள ஒருவனைக் கூப்பிட்டான் “தம்பி இன்றைக்கு நீ லோஜராக நடிக்க வேணும், நாங்க போற இடத்தில, நாங்க போன நேரத்தில் இருந்து நீர் ஏதாவது குறித்துக் கொண்டே இருக்க வேணும் அப்ப அப்ப நான் சொல்லுகிறதுக்கும் தலையை ஆட்ட வேணும்” என்று கூறியவூாறு தனது கைப் பிள்ளையையும் அழைத்துக் கொண்டு கிளம்பினான் றங்கன். இடையில் தனது நண்பனைக் கூப்பிட்டு “கரனுக்குப் போன் பண்ணு. நாங்க இப்ப வருகிறோம்” என்று என்றவனை விநோதமாகப் பார்த்தான் நண்பன். போவது தெரியாமல் போனாலே அவனைப் பிடிக்க ஏலாது. இதில் சொல்லிப் போட்டுப் போனால்? மனதில் நினைத்ததை அப்படியே கேட்டான்.

அடேய் இனி அவனுக்கு அட்வைஸ் பண்ணி வெருட்டி பிரயோசனம் இல்லை. வீட்டுக்காரரைத் தான் வெருட்ட வேணும். அதுக்கு அவன் வீட்டில் நிற்கக் கூடாது. அது தான் றங்கன் திட்டத்தையும் கெட்டித்தனத்தையும் பாத்து மெய் மறந்து நின்றாலும் ஏதோ ஒன்று மனதை நெருடியது நண்பனுக்கு. றங்கன் ஜேம்ஸ்பாண்ட் பாணியில் தனது கைப் பிள்ளையுடன் கரன் வீட்டை அடைந்தான்.

“அக்கா தம்பி இல்லையோ? நாங்க லீசிங் கொம்பனியில் இருந்து வாறம். இவர் எங்கட லோஜர். உங்கட தம்பி லீசிங் கட்டாததால் வழமையாக வாறவர் எங்கட சட்டப்பிரிவுக்கு அறிவித்துவிட்டார். அதனால் ஆட்டோவை எடுக்கவும் தம்பி மீது வழக்குப் போடவும் சொல்லியிருக்கினம்” வாயில் வந்த பொய்களை விறைத்த முகத்துடன் அவிழ்த்து விட்டான் றங்கன்.

ஐயா! அப்ப பொலிஸ் வந்து பிடிப்பினமோ? பயத்துடன் கேட்ட கரனின் அக்கா தனது வலையில் சிக்கியதை கண் ஜாடையில் தெரிவித்த றங்கன் “முதலில் நீதிமன்றில் இருந்து கடிதம் அனுப்புவினம். அதுக்கு போகாது விட்டால் பொலிஸ் வரும்” என்றவாறு கைப்பிள்ளையைப் பார்க்க கைப்பிள்ளை மிகத் தீவிரமாக பத்திரங்களை ஆராய்ந்து கொண்டிருந்தார். என்ன லோஜர் ஐயா , நான் சொல்லுகிறது சரிதானே? என்ற றங்கனுக்கு தலையைக் கஷ்டப்பட்டு ஆட்டினார் லோஜர்.

வேற ஒன்றும் செய்யமுடியாதோ? எனக் கேட்ட முகுந்தனின் அக்காவிடம் லோஜருக்கு தெரியாமல் இரகசியமாக சொன்னான் றங்கன், ‘‘பிரச்சினையில்லை. நான் லோஜரைச் சமாளிக்கின்றேன். நீங்க ஒரு மூன்று தவணையாவது நாளைக் கிடையில் கட்டினீங்க என்றால் கொஞ்ச நாளைக்கு சமாளிக்கலாம். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக கட்டுங்கோ. இது கடைசி வழி. இனி நீங்க யோசிச்சு செய்யுங்கோ”

“நன்றி தம்பி போனமுறை வந்தவர் அடுத்த முறை வந்து ஆட்டோவைக் கொண்டு போடுவன் என்று சொன்னதால தம்பி ஆட்டோவின்ர பற்றியையும் கழற்றிக் கொண்டு போட்டான். நான் எப்படியும் நாளைக்கு மூன்று தவணைக் காசை கட்டிவிடு கிறேன். நீதி மன்றத்துக்கு போகாம நீங்க தான் உதவி செய்ய வேணும்”

அடப்பாவி பற்றரியை வேறு கழற்றி வைத்திருக்கிறியோ? என்று நினைத்தவாறு “நானும் இந்த ஏரியாத்தான். பயப்பட வேண்டாம் நான் எல்லாவிதத்திலும் உங்களுக்குத்தான் சப்போட் பண்ணுவன்” என்றவாறு லோஜரான கைப்பிள்ளையுடன் கிளம்பினான். றங்கனின் மருந்து வேலை செய்தது. கரனின் அக்கா கத்திக் குளறி மூன்று தவணையை அடுத்த நாளே கட்டுவித்தாள். விஜயின் கெட்டித்தனத்தை எல்லோரும் பாராட்டினார்கள். ஆனால் காலம் ஓடியதே தவிர அதற்குப் பிற்பாடு எந்தப் பணமும் வரவில்லை. றங்கனுக்கும் இந்தச் சந்தர்ப்பம் தேவையாக இருந்தது.

தவணைப் பணத்தினை சாட்டாக வைத்து அடிக்கடி கரன் இல்லாத சமயங்களில் கரனின் வீட்டுக்குச் சென்று வரத் தொடங்கினான். ஆரம்பத்தில் நல்லவிதமாக கதைத்து வந்தறங்கன் மெது மெதுவாக இரட்டை அர்த்தங்களில் கதைக்கத் தொடங்கியது மட்டுமல்லாது தவணைப் பணத்தை தவிர அனைத்து விடயங்களையும் கதைக்கத் தொடங்கியிருந்தான்.

றங்கனின் நோக்கம் உணரத் தொடங்கிய போது கரனின் அக்கா கதைகளைக் குறைத்துக் கொள்ள தொடங்கினார். இதனால் கோபமடைந்த றங்கன் ஆட்டோவைத் தூக்கப் போவதாகவும் பொலிஸ் நாளை தம்பியை பிடிக்கும் என்றும் வெருட்டத் தொடங்கினான்.

இனியும் பொறுக்க முடியாது என உணர்ந்து கொண்ட கரனின் அக்கா கரனிடம் விசயத்தைக் கூற, கரன் அவனை வெட்டுகிறேன் பார் எனக் கிளம்ப, ‘‘தம்பி பொறு இப்படியான கதைகள் வெளியில் தெரிந்தால் எங்கட மானம் தான் போகும். முதல் வந்த தம்பியிடம் இவனைப் பற்றிச் சொல்லு. அதோட காசையும் கட்டி விடு” என்று முடிவாகச் சொன்னாள்.

அக்காவின் முடிவே சரியெனப்படவே முதலில் தவணைப் பணம் பெற வரும் ரமேசுக்கு ஸ்ரீபோன் பண்ணி விடயத்தை கூறினான். ‘‘மன்னிக்க வேணும் அண்ணை எங்கட ஆட்கள் சிலர் இப்படியானவர்களாக இருக்கினம். நான் ஒபிஸில் கதைக்கிறன். நீங்களும் கொஞ்சம் தவணையைக் கட்டினால் எனக்கும் கதைக்க உதவியாக இருக்கும்” என்றான் ரமேஸ்.

வேறுவழியின்றி தவணைப் பணத்தை கட்ட தொடங்கிய கரன், றங்கனுக்கு தகுந்த பாடம் புகட்ட சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருக்கின்றான். கடன் தொல்லையாலும் கடன்காரர் தொல்லைகளாலும் அவஸ்தைகளும் தற்கொலைகளும் தொடரத்தான் செய்கின்றன. வங்கிகள், நிதி நிறுவனங்களின் கடன் ஒப்பந்த பத்திரங்களில் உள்ள மொழி உரிமையைப் பற்றியும் எவரும் கதைப்பதில்லை.

**மானிப்பாய் சுதன்**

facebook

# எப்போதும் நல்லதையே பேசுங்கள்

ஒரு கோபக்கார வாலிபன் இருந்தான். அவனுக்குக் கோபம் வந்தால் தலைகால் தெரியாமல் வாய்க்கு வந்தபடி எல்லோரையும் மனம் புண்படும் வார்த்தைகளால்பேசி விடுவான். பின்னர் அவர்களிடம் வருத்தப்படுவான்.

நாளடைவில் அவனைப் பலருக்கு இதனாலேயே பிடிக்காமல் போனது. அவனைத் தவிர்க்க ஆரம்பித்தார்கள். இவனும் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று தோன்றினாலும் எப்படி என்றுதான் தெரியவில்லை.

ஒருநாள் அந்த வாலிபன், தன்னுடைய அப்பாவிடம் வந்து தன் நிலையைக்கூறினான்.

என்னை யாருக்கும் பிடிக்கவில்லை. யாரும் என்னிடம் பழகுவதில்லை. என்னிடம் உள்ள இந்த கோபத்தினால் வரும் தரக்குறைவான வார்த்தைகளைப் பேசாமல் கோபத்தைக் கட்டுப்படுத்த வழி சொல்லுங்கள்' என்றான். அவன் தந்தை அவனிடம் ஒரு பாத்திரம் நிறைய ஆணிகளையும் ஒரு சுத்தியலையும் கொடுத்தார்.

ஒவ்வொரு முறை கோபப்படும் போதும் சம்பந்தப்பட்டவர்களைத் திட்டுவதைத் தவிர்த்துவிட்டு, வீட்டுக்குப் பின்னால் உள்ள மரத்தில் ஓர் ஆணியை ஆத்திரம் தீரும் வரை அறைந்து ஏற்றி விடும்படி கூறினார்.

முதல் நாள் அந்த மரத்தில் சுமார் 50 ஆணிகளை அறைநது ஏற்றினான். நாட்கள் செல்லச் செல்ல அவனைக் கோபமூட்டுபவர்கள் முன் வன்மையாகப் பேசுவதைக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொண்டான். கோபம் வந்தால்தான் உடனே ஆணி அடிக்கப் போக வேண்டுமே!

நாளடைவில் ஆணியையும் சுத்தியலையும் எடுத்துக் கொண்டு வேலிப் பக்கம் போகுமுன் கோப வெறி குறைந்து போய்,வேலியில் ஆணி அறைவது குறையத் தொடங்கியது. சில நாட்களில் ஆணி அடிக்க வேண்டிய தேவையே அவனுக்கு இருக்கவில்லை.

அப்பாவிடம் போய் விபரத்தைச் சொன்னான். அவர் உள்ளுக்குள் மகிழ்ச்சியடைந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அவனிடம் ஓர் ஆணி பிடுங்கும் கருவியைக் கொடுத்து மரத்தில் அவன் அடித்த ஆணிகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கச் சொன்னார்.

எல்லா ஆணியையும் பிடுங்கிய பிறகு அப்பாவும் மகனும் அந்த மரத்தைப் பார்க்கப் போனார்கள். அப்பா மரத்தில் ஆணிகளைப் பிடுங்கிய இடத்தில் இருந்த வடுக்களை மகனுக்குக் காட்டி கோபம் வந்தால் அறிவிழந்து சொல்லும் சுடுசொல்லும் இந்த ஆணியைப் போலத்தான். ஆணியைப் பிடுங்குவது போல் நீ பேசியதற்கு மன்னிப்புக் கேட்டாலும், அந்த சொல் தைத்த இடத்தில் உள்ள வடு இந்த ஆணி ஏற்படுத்திய வடுவைப் போலவே மறைவது மிகக் கடினம் என்று அவனுக்கு எடுத்துக் கூறினார்.

மகனும் கருத்தை நன்றாக உணர்ந்து திருந்தி அனைவரும் போற்றும் வகையில் வளர்ந்து வாழ்க்கையில் வெற்றிகள் பல பெற்றான்.

நாமும் கூட நமக்கு கோபம் வரும் போது பிறரை தவறான வார்த்தைகளால் காயப்படுத்தி விடுகிறோம். மேலும் கோபப்பட்டதற்காக வருத்தப்பட்டு மன்னிப்பு கேட்டாலும் நாம் கூறிய வார்த்தைகள் அவர்கள் உள்ளத்தில் வடுவாகவே காணப்படும்.

ஆகவே நாம் பேசும் போது நாவை அடக்கி, என்ன பேச வேண்டும் என்பதை யோசித்து பேச வேண்டும். நல்லவற்றை பேசுவோம்நலமுடன் வாழ்வோம்.

நல்ல வார்த்தை பேசுவது என்பது தர்மம் செய்வதற்கு சமமானது. நபி முஹம்மது ஸல் அவர்களது கூற்றை கீழே உள்ள ஹதீஸ் மூலம் அறியலாம்..

# குறை

தெத்துப்பட்டி என்ற ஊரில் சாந்தனு என்ற இளைஞன் இருந்தான். அவனுக்கு நகரத்தில் வேலை கிடைத்தது. அங்கேயே தங்கி வேலை பார்த்து வந்தான். அவனுக்குத் திருமணம் நடந்தது. தன் மனைவியை நகரத்திற்கு அழைத்து வந்து அவளுடன் குடும்பம் நடத்தினான்.

முதல்நாள் வேலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பினான். இங்கே யாருமே சரி இல்லை. எல்லாரும் நம்மைப் பார்த்து பொறாமைப்படுகின்றனர். என்னைப் பார்த்தாலே முகத்தைத் திருப்பிக் கொள்கின்றனர். யாரும் என்னுடன் பேசுவது இல்லை! என்று குறை சொன்னாள்.

நீ இப்போதுதான் இங்கே வந்திருக்கிறாய். உன்னுடன் பழக அவர்கள் தயக்கம் காட்டியிருக்கலாம். நீ அதைத் தவறாகப் புரிந்து கொண்டிருப்பாய். நாளாக நாளாக எல்லாம் சரியாகி விடும். சிறிது பொறுமையாக இரு என்றான் அவன்.

அடுத்த நாள் அவன் வேலை முடித்து வீடு திரும்பினான். "அக்கம பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாம் நம்மைக் குறை சொல்லிக் கொண்டிருந்தனர். நான் வருவதைப் பார்த்ததும் பேசுவதை நிறுத்தி விட்டனர். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை என்றாள் அவள்.

இப்படியே அவள் நாள்தோறும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களைப் பற்றி குறை சொன்னாள். "இனி நம்மால் இங்கே குடி இருக்க முடியாது. வேறு இடம் பாருங்கள்," என்று நச்சரிக்கத் தொடங்கினாள். 'நாம் அதிகம் பழகாததால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் குறை தெரியாமல் போயிற்றா? மனைவி சொல்வது போல அவர்கள் பொல்லாதவரகள்தானா?' என்று குழம்பினான் அவன். அப்போது பெற்றோர்களிடம் இருந்து அவனுக்கு ஒரு மடல் வந்தது. அதில், "ஊர்த் திருவிழா ஒரு வாரம் நிகழ உள்ளது. நீ குடும்பத்துடன் வர வேண்டும்' என்று எழுதி இருந்தது.

மனைவியிடம் அந்த மடலைக் காட்டினான். "என் பெற்றோர்கள் ஊர்த் திருவிழாவிற்கு நம்மை அழைத்திருக்கின்றனர். எனக்கு அலுவலகத்தில் நிறைய வேலை உள்ளது. என்னால் வர முடியாது. நீ மட்டும் சென்று திருவிழா முடியும் வரை இருந்துவிட்டு வா!" என்றான்.

அவளும் அவன் சொன்னது போலவே ஊருக்குச் சென்றாள். அங்கே ஒருவாரம் தங்கிவிட்டு வந்தாள்.

பயணம் எப்படி இருந்தது? என் வீட்டில் உள்ளவர்கள் உன்னை நன்றாகக் கவனித்துக் கொண்டார்களா?" என்று கேட்டான் அவன்.

அங்கே மாடு மேய்க்கும் சுப்பனே என்னை எதிரியைப் போலப் பார்த்தான். மற்றவர்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? இனி என்னை அங்கே போகச் சொல்லாதீர்கள்!" என்று சலித்துக் கொண்டாள் அவள். "சுப்பன் மாடுகளை மேய்ப்பதற்காக அதிகாலையில் வீட்டைவிட்டுச் செல்வான். இரவில் தான் வீடு திரும்புவான். பகலில் அவனை பார்ப்பதே அரிது. இரவிலும் எப்போதாவது தான் கண்ணில் படுவான். அவன் இவளை எதிரி போலப் பார்த்ததாகச் சொல்கிறாள்.

யாரைக் கண்டாலும் அவர்கள் தன்னை பார்ப்பதாகவும், தன்னைப் பற்றித்தான் பேசுவதாகவும் நினைபபதுடன், அடுத்தவர்களை குறை கூறும் இயல்பு இவளுக்கு அதிகம் உண்டு. நல்ல வேளை, இவள் பேச்சை நம்பி அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் சண்டை போடாமல் இருந்தேனே.

இந்தக் கெட்ட பழக்கத்தை இவள் விடும்படி செய்ய வேண்டும். அதற்கான முயற்சியில் இறங்க வேண்டும்!' என்ற முடிவுக்கு வந்தான் சாந்தனு.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 905

Search for people, places and things Nagendram Home

### மனோ மனோ



### பிரதீபன் தீபன்




### நிரோஜன்



உண்மையைக் காட்டும் கண்ணாடிகளை
யாருமே விரும்புவதில்லை,
எல்லோருக்கும் தேவைப்படுகிறது
அழகாய்க் காட்டும் கண்ணாடிகள் தான்..!

### செந்தாழன் பிரதீபன்




### ராகுலன் பாலா




### வல்லவன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 60

## உணவு உண்பதற்கு சிறந்த வேளை எது?



சுகதேகிகளும் நீரிழிவு, இருதய நோய்கள் உள்ளவர்களும் எவ்வாறு தமது உணவு முறைகளை ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும் என்பது சம்பந்தமான பல ஆய்வுகள் நடத்தப்பட்டிருக்கின்றன. அவற்றின் முடிவாக இரவு உணவை குறைத்து காலையும் மதியமும் போதுமான அளவு உண்பது சிறந்தது என உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இரவு உணவை குறைத்து குடலுக்கும் சுரப்பிகளுக்கும் ஓய்வு கொடுப்போமாக இருந்தால் மறுநாள் அவற்றின் தொழிற்பாடுகள் சிறந்தமுறையில் அமையும். இன்சுலின் சுரப்பின் அளவும் இவ்வாறான உணவுமுறையின் பொழுது அதிகமாக இருப்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

பலர் தமது பிரதான உணவை இரவிலே உண்ணுவது அறியப்பட்டிருக்கிறது. இந்த நிலையை மாற்றினால் தொற்றா நோய்களின் தாக்கத்தை குறைத்துக் கொள்ளமுடியும்.

DR.சி.சிவன்சுதன்
பொதுவைத்தியநிபுணர்.

## இரத்தக் கசிவினால் ஏற்படும் பாரிசவாதம்

இது மூளையினுள் இரத்தம் கசிவதனால் ஏற்படுகின்றது. மூளைக்கு குருதியை வழங்குகின்ற குருதிக் குழாய்கள் ஒரு தொடர்ச்சியான வலையமைப்பாக பிணைந்துள்ளன. இரத்தக் கசிவானது மூளையின் வெளிப்பகுதியிலோ மூளையின் உட்பகுதியிலோ ஏற்படலாம்.

மூளையினுள் ஏற்படும் இரத்தக் கசிவானது intra cerebral haemorrhage எனப்படும் மூளையின் வெளிப்பகுதியில் மூளை மென்சவ்வின் கீழ் ஏற்படும் இரத்தக் கசிவானது Subarachnoid Haemorrhage எனப்படும்.

### மூளையினுள் ஏற்படும் இரத்தக்கசிவினால் ஏற்படும் பாரிசவாதம் (Intra Cerebral Haemorrhage)

10 வீத பாரிசவாதம் இதனாலேயே ஏற்படுகிறது.

- குருதியானது உயர்வான அழுத்தத்திலே கசிவடைவதுடன் பாதிப்புக்களையும் ஏற்படுத்துகின்றது. இது குருதிக் குழாய் அடைப்பினால் ஏற்படும் பாரிசவாதத்தை விட அதிகளவு பாதிப்பை ஏற்படுத்துகின்றது.
- அறிகுறிகள்

1. உடலின் ஒருபகுதி (இடது அல்லது வலது) பலவீனமடைதல் அல்லது உணர்விழத்தல்.
2. கதைப்பதில் கஷ்டம் ஏற்படுதல். விடயங்களை புரிந்து கொள்வதில் கஷ்டம் ஏற்படுதல்.
3. தலைசுற்றல்.
4. பார்வைமங்கலடைதல்
5. கடுமையானதலைவலி
6. சுயநினைவிழத்தல், குழப்ப நிலை
7. வாந்தி
8. கழுத்துப்பிடிப்பு

### மூளை மென்சவ்வின் கீழ் குருதி கசிவினால் ஏற்படும் பாரிசவாதம். (Subarachnoid Haemorrhage)

- மூளையானது 3 மூளையமென்சவ்வுகளால் பாதுகாக்கப்படுகிறது.
- இரு மென்சவ்வுகளுக்கிடையிலான இடைவெளி **(Subarachnoid Space)** மூளை முன்னாண் பாய் பொருளினால் நிரப்பப்பட்டிருக்கும். மூளையின் மேற்பரப்பில் உள்ள குருதிக் குழாய்களில் வெடிப்பு ஏற்படும் போது இப்பகுதியினுள் குருதி கசிவடைகிறது.
- 5 வீத பாரிசவாதம் இதனாலேயே ஏற்படுகிறது.
- இது பாரிய மூளைத்தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது. கிட்டத்தட்ட 50 வீதமான நோயாளிகளே இத்தாக்கத்தின் பின்னர் பிழைத்துக் கொள்வார்கள்.
- அறிகுறிகள்

1. திடீரென கடுமையான தலைவலி ஏற்படல். நோயாளி தலையில் சுத்தியல் அல்லது பெரியபொருள் ஒன்றினால் தலையின் பிடரிப்பகுதியில் அடித்ததைப் போல வலி உணர்ந்ததாக கூறுவர். இது வரைதாம் உணர்ந்த தலைவலியில் இதுவே கடுமையான தலைவலியாக இருக்கின்றது என உணர்வார்கள்.
2. சுயநினைவிழத்தல், மாறாட்ட நிலை.
3. வலிப்பு
4. குமட்டல்
5. வாந்தி
6. வெளிச்சத்தை பார்க்க விரும்பாமை
7. கழுத்துப்பிடிப்பு
8. குழப்பமானமனநிலை
9. காய்ச்சல்
10. கதைப்பதில் சிரமம்.
11. உடலின் ஒருபகுதி அங்கங்கள் பலவீமடைதல்.

- காரணங்கள்

1. உயர்குருதியமுக்கம்
2. வயதாவதால் குருதிக்குழாய்களில் ஏற்படும் மாற்றங்கள்.

- குருதிக்குழாய்களின் பலவீனமடைந்தபகுதிகளாக குருதிக்குழாய்களின் புடைச்சல் (Aneurysms) காணப்படும்.

சிலரில் இது பிறப்பிலிருந்தே இருக்கும். சிலரில் உயர்குருதியமுக்கம் காரணமாக ஏற்படுகின்றது. இவ்வாறு நலிவடைந்த புடைச்சல் பகுதிகள் பொதுவாக உயர் குருதியமுக்கம் காரணமாக வெடிப்படைந்து மூளைய மென்சவ்வுகளிற்கிடையில் குருதிக் கசிவினை உண்டுபண்ணுகின்றது.

- சிலரில் குருதிக்குழாய்களில் சில அசாதாரணமான குறைபாடுகள் அல்லது மாற்றங்களினாலும் குருதிக்குழாய்களில் வெடிப்புஏற்பட்டு இரத்தக்கசிவு ஏற்படுகின்றது. இப்பிரச்சினை பொதுவாக பிறப்பிலிருந்தே காணப்படுகிறது.
- சில மருந்து வகைகள் அதாவது குருதியின் தடிப்பினை குறைக்க பயன்படுத்தும் மருந்துகள் குருதியுறையாமல் தடுப்பதற்கு வழங்கப்படும் மருந்துகள்.
- போதைப்பொருட்களின் பாவனை

குருதிக் கசிவினை கண்டறிதலுக்கு உள்ளபரிசோதனைகள்

1. மூளைக்கதிர்ப்படம் ( CT Scan )- இது எல்லாவகையான குருதிக் கசிவினையும் கண்டறியக் கூடியது.
2. நாரி முள்ளந்தண்டிலிருந்து பாய் பொருளை எடுத்து பரிசோதித்தல் CT படத்திலே குருதிக்கசிவு ஏற்பட்டமை தெரியாமல் இருந்தாலும் நோயாளி மூளை மென்சவ்வுகளிடையில் குருதி கசிந்தமைக்கான அறிகுறிகளைக் கொண்டிருப்பாராயின் இப்பரிசோதனை செய்யப்படும்.

### குருதிக் குழாய்களை பரிசோதித்தல் (Angiogram)

குருதிக் குழாய்களை அசாதாரணமான புடைப்புக்கள் அல்லது வேறு குறைபாடுகளுக்கான பரிசோதனை இரத்தக்கசிவினால் ஏற்படும் பாரிசவாதத்திற்கான சிகிச்சை முறைகள்

முக்கியமாக ஆரம்ப சிகிச்சைகள் நோயாளியின் முக்கிய உடற்தொழிற்பாடுகளை சீர்படுத்தலிலும் (சுவாசம் இதயத் துடிப்பு, குருதியமுத்தம் என்பவற்றை சரியான அளவில்பேணல்) மற்றும்மேலும்பாதிப்புகள் ஏற்படாமல் தடுப்பதையுமே நோக்கமாக கொண்டவையாகும். அவையாவன.

- குருதியமுத்தத்தை குறைக்கும் மருந்துகள் வழங்கப்படும்.
- குருதி உறையாமல் தடுப்பதற்கு உபயோகிக்கின்ற மாத்திரைகளை (மருந்துகளை) அளவுக்கதிகமாக உபயோகிப்பதன் விளைவாக குருதிக் கசிவு ஏற்பட்டிருப்பின் அம் மருந்துகளின் தன்மையை குறைக்கக்கூடிய மருந்துகள் வழங்கப்படும்.

1. மூளை மென்சவ்வின் கீழ் குருதி கசிவினால் ஏற்படும் பாரிசவாத்தினை தொடர்ந்து குருதிக்குழாய்களில் ஒருவித சுருக்கம் **(spasm)** ஏற்படும். அதனை தடுப்பதற்காக சில மருந்து வகைகள் வழங்கப்படும்.

- சரியான அளவு வலி நிவாரணிகள் வழங்கப்படும்.
- நோயாளி சத்திரசிகிச்சை மூலமான சிகிச்சை முறைக்கு செல்லவேண்டும் எனில் செல்லும் வரை வலிப்பு ஏற்படாமல் தடுப்பதற்காக வலிப்பு மாத்திரைகள் வழங்கப்படும்.

### சத்திரசிகிச்சை மூலமான முறைகள்

1. குருதிக்கசிவு மூளையில் ஏற்படுவதனால் மூளையினுள் அழுத்தம் அதிகரிக்கின்றது. இது மேலும்பாதகமானவிளைவுகளை ஏற்படுத்தும் இவ்வாறான வேளைகளில் மண்டையோட்டின் சிறு பகுதி நரம்பு சத்திரசிகிச்சைநிபுணரால் அகற்றப்படும். இதனால் மண்டையோட்டினுள் அழுத்தம் அதிகரிப்பது தடுக்கப்படும்.
2. அசாதாரணமாக குருதிக் குழாய்களில் ஏற்படும் புடைப்புக்களை (Aneurysms) சத்திரசிகிச்சை சரிப்படுத்தலாம். இது இரண்டுமுறைகளில் (Clipping & Coiling) செய்யப்படும். எனினும் அப்புடைப்புக்கள் எந்தபகுதியிலுள்ளகுருதிக்குழாய்களில் ஏற்பட்டுள்ளன. அவற்றின் அளவு எவ்வாறுள்ளது மற்றும் நோயாளியின் ஏனைய மருத்துவநிலைகளையும் ஆராய்ந்தே முடிவுசெய்யப்படும்.

இரத்தகசிவின் அளவைப் பொறுத்தும் நோயாளியின் பொதுவான ஆரோக்கிய நிலையைப் பொறுத்துமே பாரிசவாதத்திலிருந்துமீண்டு குணமடைவது தங்கியுள்ளது. சிலர்முழுமையாக குணமடைவர்கள் ஏனையோரிற்கு புனர்வாழ்வுகள் தேவைப்படும்.

### பாரிசவாதத்தினை தொடர்ந்து பாரிசவாதத்தின் பின்னர் செய்யவேண்டியவை

- தொடர்ச்சியாக திடீரெனகடுமையான தலைவலி ஏற்படுமாயின் உடனடியாக வைத்தியரைநாடவேண்டும்.
- குருதியமுக்கத்தை அடிக்கடி பரிசோதித்துக் கொள்ளவேண்டும். அத் துடன் குருதியமுத்தத்தை கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கவேண்டும்.
- உங்கள் வைத்தியரால் வழங்கப்பட்ட மருந்து வகைகளைதவறாது உட்கொள்ளவேண்டும்.
- தாராளமாகநீர் மற்றும் பானங்கள் அருந்தவேண்டும்.
- ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளவேண்டும். ஆரோக்கிய மான வாழ்க்கை முறைகளைபின்பற்ற வேண்டும்.
- புகைப்பிடிக்கும் பழக்கத்தை நிறுத்தல் வேண்டும்.
- அளவுக்கதிகமாக மதுபானம் அருந்துதல் கூடாது.
- குருதியில் சீனியின் அளவை ஒழுங்காக பரிசோதிக்க வேண்டும்.

வைத்தியகலாநிதி
அஜினி அரசலிங்கம்,
வைத்தியர் ஜெயராசா சஞ்ஜெயன்